KALKI 12.6.88 ரூ. 2.

கல்கி



ரீ-விசிட் முடிந்தது; பிரச்னைகள் தொடர்கின்றன...

ஷாப்பிங் இடையே.



உணவிற்கு இடையே.

உங்களுக்கு சிறிது பசியெடுக்கும் பொழுது அது உணவருந்தும் நேரமாக இல்லாவிடில் குளிர்ச்சி நிறைந்த கிரேட் ஷேக் அருந்துவீர்.

இது திருப்தி தரும் செழுமையான சோயா மில்க் பானம். உங்கள் தேர்வுக்கென பலவித அருமையான சுவைகளில் வருகிறது.

வெறும் கலோரிகள் மட்டுமின்றி இது உங்களுக்கு உன்னத தரம் கொண்ட புரதம், வைட்டமின்கள் மற்றும் கனிஜப் பொருட்களை அளிக்கிறது.

வேறு என்ன வேண்டும் ? இதர பால்களைப் போல் அல்லாது இதில் கொழுப்புச் சத்து மிகக் குறைவாக உள்ளது. தவிர கொலஸ்ட்ரால் சிறிதளவும் கிடையாது.

அருமையான சுவைகளில்.

Great Shake

கிரேட் ஷேக். சோயாவின்
நற்குணங்கள் நிறைந்த உணவு பானம்.

Enterprise/NS/256 Tm A



• விவசாயிகள் போராட்டத்தில் கதாநாயகி...

இந்த 'ஏர்முனை' நெஞ்சிலே தைக்கும்

'முழுக்க முழுக்க விவசாயிகளின் பிரச்னைகளையே மையமாகக் கொண்டு 'ஏர்முனை' என்னும் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். முன்பு 'காணிநிலம்' படத்தை இயக்கிய அருண்மொழி. இதில் நடிப்பவர்களில் பலர் புதுமுகங்கள். விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லமுத்து நடிக்கிறார் என்பது ஒரு விசேஷம். இப் படத்தைத் தயாரிப்பவரும், அங்கப்பன் என்னும் விவசாயிதான். பண உதவி செய்திருப்பவர்களும் விவசாயச் சங்க உறுப்பினர்களே.

இப்படிப்பட்டதொரு படத்தைத் தயாரிக்கும் எண்ணம் எப்படி வந்தது? இந்தப் படம் சென்ஸாருக்கு ஒரு சவாலாக இருக்குமா? இதோ இயக்குனர் அருண்மொழியுடன் ஒரு பேட்டி...

கேள்வி: விவசாயி ஒருவருக்கு ஏற்பட்ட தனிப்பட்ட பிரச்னைக்குக் கதை எழுதப்பட்டுள்ளதா? இல்லை ஒட்டுமொத்தப் பிரச்னைகளை அலசியிருக்கிறீர்களா?

அருண்மொழி: விவசாயிகளின் பொதுவான — பலதரப்பட்ட பிரச்னைகள்தான் என் கதை. அரசாங்கத்தாரால் அப்பாவி விவசாயிகள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதைச் சொல்லியிருக்கிறேன். விதைகளை அழிக்கும் சக்தி எது, கடன் கொடுத்து எவ்வாறு நசுக்கப்படுகிறார்கள், மண் வளத்தைக் குறைக்க அக்கிராம மக்களையே எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறார்கள், கிராம மக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளாமல் எவ்வாறு விலை நிர்ணயிக்கப்



• விவசாயிகள் போராட்டம்....

படுகிறது... சாண எரிவாயு அடுப்பால் நில வளம்எவ்வாறுபலகீனப்படுத்தப்படுகிறது... இதுபோன்ற ஏராளமான பிரச்னைகளைக் கதைக்கு மையமாக்கியிருக்கிறேன்...

கே: இந்தப் பிரச்னைகளைப் படமாக்க வேண்டும் என்கிற எண்ணத்துக்கு ஆதார மான விஷயம் எது?

அருண்: படத்தின் தயாரிப்பாளர் உடுமலைப்பேட்டையிலிருந்து வந்து என்னைச் சந்தித்தார். அவர் தாம் ஒரு விவசாயி என்ற முறையில் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்னைகளை—அநுபவங்களை விரிவாகச் சொன்னார். விவசாயிகளின் பிரச்னைகளைப் புரிந்து கொண்டேன். வீரிய விதைகள், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் கொண்ட பசுமைப் புரட்சித் தொழில் நுட்பம் மூலம் தோன்றியுள்ள புதிய அபாயங்கள் பற்றியும் அதன் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கை பாழாவது பற்றியும் தெரிந்து கொண்டேன். என் கதையில் தண்ணீர் தனி மனிதனுக்குச் சொந்தமில்லை—அது தேசிய உடைமையாக்கப்பட வேண்டும்என வலியுறுத்தியுள்ளேன். சாலை ஓரங்களில் உள்ள மரங்களை வெட்டுவது தவறு என உணர்த்தியுள்ளேன். அடிமாடுகளை இறைச்சிக்குப் பயன்படுத்தக் கூடாது: ஜிப்சம் எனப்படும் உப்பைப் பூமியிலிருந்து சிமெண்ட் செய்யத் தோண்டி எடுத்து நிலத்தின் பசுமை குறையக் காரணமாயிருக்கக் கூடாது என்பதைச் சொல்லியுள்ளேன்.

கே: கதையை விடப் பிரச்னைகளுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டிருப்பது நீங்கள் சொல்வதிலிருந்து புரிகிறது. கதை சொல்லப்படவில்லையென்றால் அது செய்திப்படம் மாதிரி இருக்கும் என்பதை நீங்கள் உணரவில்லையா?

அருண்: கதை இல்லாமல் இல்லை. பிரச்னைகளுக்கு ஆளான அந்த ஊரில் விவசாயப் படிப்பை முடித்துக் கொண்டு மல்லிகா என்கிற பெண் வருகிறார். அக் கதாபாத்திரத்தில் புதுமுகம் சுபலா நடிக்கிறார். மல்லிகாவின் தந்தையின் சொத்துக்கள் ஜப்திசெய்யப்படுகின்றன. தந்தை மரணமடைகிறார். கணவனோ (நாசர்) விவசாயிகளுக்கு எதிராகச் செயல்படுகிறார். அதனால் மல்லிகாவே புரட்சிக்கொடி ஏந்துகிறார். தான் படித்த பட்டப்படிப்பை அந்தப்



• டைரக்டர் அருண்மொழி



* விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லமுத்தும் சூர்யாவும்....



* போராட்டத்தில் குண்டடிபடுகிறார் கதாநாயகி...

பூமியைப் பாதுகாக்கப் பயன்படுத்துகிறார். போராட்டங்கள் தொடர்கின்றன. உச்சகட்டக் காட்சியாகச் சாலைமறியல்போராட்டம் நடத்துகிறார். அதில் போலீஸாரின் குண்டடிக்கு ஆளாகி இறந்து போகிறார். படத்தில் காதல் இல்லை. சண்டைக் காட்சிகள் இல்லை. ஒரே ஒரு கம்புச் சண்டை மட்டும் உண்டு. மலைஜாதிப் பெண்ணான ஒருத்தியை ஓர் அரசியல்வாதி, ஓர் இஞ்ஜினியர், ஓர் உயர்மட்ட அதிகாரி, அயல்நாட்டுக்காரர் நாலு பேரும் சேர்ந்து கற்பழிக்கும் காட்சி ஒன்று இடம் பெறுகிறது.



* ஒளிப்பதிவாளர் அங்கப்பன்

கே: கற்பழிப்புக் காட்சி வியாபார நோக்கத்திற்காகச் சேர்க்கப்பட்டுள்ளதா?

அருண்: அப்படிக் கேளுங்கள்... சினிமாவில் வரும் கற்பழிப்புக் காட்சி அல்ல அது... அதைப் படத்தில் பார்க்க முடியாது. காட்டிற்குள் அப்பெண் வருகிறாள். மரங்கள் வெட்டும் வேலை நடைபெற்று வருகிறது. பறவைகளின் கிறீச்... கிறீச்... என்கிற ஒலி மட்டும் உச்சத்திலிருந்து குறைந்து கொண்டே வரும். அக்கிரமக்காரர்கள் நால்வரும் அவளை நெருங்குவதைக் காட்டுவோம். அடுத்த நிமிடம் பறவைகளின் ஒலி நிற்கிறது. 'ஐயோ' என்கிற அலறல் சப்தம் மட்டும் கேட்கும் போது ஒரு மரம் வெட்டிச் சாய்ப்பதைக் காட்டுவேன். அப்படி நான்கு முறை அலறல் வரும். நான்கு மரங்கள் சாய்வதைக் காட்டுவேன்.

•

கே: போராட்டத்தில் வழக்கமாகக் கதாநாயகன் ஈடுபடுவதாகவே சினிமாவில் பார்த்திருக்கிறோம். இதில் கதாநாயகியைத் தலைமை தாங்கச் செய்துள்ளீர்கள் — அதன் காரணம் என்ன?

அருண்: பெண்ணுரிமைக்காக ஒரு பெண்ணால் போராட முடியும் என்பதை நிரூபிக்கப் பல படங்கள் வந்துள்ளன. ஆனால் சமுதாயக் கண்ணோட்டமுள்ள ஓர் இயக்கத்திற்குப் பெண்ணே தலைமை தாங்குவது புதுமையாக இருக்குமே என நினைத்தேன். இப்பாத்திரத்தில் ராதிகாவோ, ராதாவோ நடித்திருந்தால் அவர்களுடைய தோற்றம் தான் பார்ப்பவர்களின் முன் நிற்கும். கதாபாத்திரம் மறைந்து போகும். அதனால் புது முகம் ஒருவரைத் தேர்ந்தெடுத்தேன்." என் படத்தில் நான்கு பெண்கள் வருகிறார்கள். அதில் மூவரை மூன்று பிரச்னைகளுக்குப் பிரதிநிதிகளாக வடிவமைத்துள்ளேன். பூமியைச் சுபலாவும், காட்டை சூர்யாவும், தண்ணீரைக் கலைராணியும் பிரதிபலிக்கிறார்கள். அதே மாதிரி ரவீந்தர் கதாபாத்திரத்தைப் புராணகாலப் பரசுராமரின் பிரதிபலிப்பாகக் காட்டியுள்ளேன்.

கே: படத்தில் பாடல்கள் உண்டா?

அருண்: ஏழு பாடல்கள் உள்ளன. இந்த மாதிரிக் கதைகளில் வழக்கமாகப் பாடல்

கள் இருக்கக் கூடாதுதான். என்றாலும் நீண்ட வசனங்கள் மூலம் சொல்லிப் புரிய வைக்க வேண்டிய நல்ல புரட்சிக் கருத்துக் களைப் பாட்டுக்களின் மூலம் சொல்லவே அவற்றைச் சேர்த்தேன். எல்லாமே தனிப் பாடல்கள்தான். டூயட் இல்லை. ஒரு கிராமிய ஒப்பாரிப் பாட்டு படத்தில் இடம் பெற்றுள் ளது. வைரமுத்து மிகுந்த சிரமப்பட்டு அப் பாட்டை எழுதிக் கொடுத்துள்ளார். இசை யமைப்பாளர் தாயன்பனின் மனைவி விஜயா இப்பாட்டைப் பாடியுள்ளார். வீராசாமி (கதாநாயகியின் தந்தை) இறந்து போனதும் ஊர்ப் பெண்கள் ஒப்பாரி வைத்துப் பாடு கிறார்கள்.

இப்பாட்டில்,
"அஞ்சு லட்சம் வரிபாக்கி
அவரை யாரும் கேக்கலையே
முந்நூறு ரூபாய்க்கு
மூச்சுப் புடிச்சிகளே!"

என எழுதியுள்ளார். அதே மாதிரி பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய "எங்கும் விவசாயச் சங்கம் அமைத்து அதில் அங்கம் வகித்திருப்போம்" என்கிற பழைய பாடலை மலேஷியா வாசுதேவனைக் கொண்டு பாட வைத்துள்ளேன்.

கே: கதைக்கு வறட்சியான பகுதிகள் தேவைப்பட்டிருக்குமே... எங்கெங்கே சென் றீர்கள்?

அருண்: எங்கெல்லாம் வறட்சி இருக்கி றதோ அங்கெல்லாம் போனோம். அங்கே உள்ள மக்கள் நடித்தார்கள்.

கே: சிக்கனமான முறையில் படத்தைத் தயாரித்திருப்பதாகச் சொன்னீர்கள். என்ன முறை அது?

அருண்: சிக்கனம் என்று சொல்லுவதை விட இயல்பாக இருப்பதற்காக அப்படிச் செய்தோம் என்று கூடச் சொல்லலாம். படத்தில் டெக்னீஷியன்ஸ் மிகக் குறைவு. யாருக்கும் மேக்கப் இல்லை. காஸ்ட்யூமர் இல்லை. அவரவர்களின் இயல்பான உடை களிலேயே நடித்தனர். சாதாரணக் குடிசை களிலேயே தங்கிக் கிடைத்ததைச் சாப்பிட் டோம். செட் பிராபர்டி என்று சொல்லப் படும் காட்சிப் பொருள்களை அங்கங்கேயே இரவல் வாங்கிக் கொண்டோம்.

கே: படப்பிடிப்பின்போது உங்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் என்ன?

அருண்: விவசாயச் சங்கத் தலைவர் செல்லமுத்து படத்திலும் அதே கதாபாத்தி ரத்தில் நடித்தார். திடீரென அவர் மீது குற்றம் சாட்டப்பட்டு அவர் ஜெயிலுக்குப் போய் விட்டார். சாலைமறியல் போராட் டத்தைப் பல்லடத்தில் எடுத்தோம். பாதை யில் குறுக்கே நிறுத்த அறுநூறு வண்டிகளும் 1200 மாடுகளும் தேவைப்பட்டன. உண் மையிலேயே போலீஸ் அனுமதி பெற்றுப் போக்குவரத்துக்களை ஸ்தம்பிக்கச் செய்து அக்காட்சியை எடுத்தோம். 1200 மாடுகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. கிடைத்த வரையில் எடுத்தோம்.

கே: எடுக்கப்பட்ட காட்சிகளில் சுவை யான காட்சி ஒன்றைச் சொல்ல முடியுமா?

அருண்: அரசியல்வாதிகள் கிராமத்து ஜனங்களுக்குக் குடம், செருப்பு போன்ற பொருள்களை இலவசமாக வழங்குவதை மனத்தில் வைத்துக் கொண்டு ஒரு காட்சி எடுத்தோம். ஒரு மந்திரி (டைரக்டர் ராபர்ட் டுடன் பணியாற்றிய டைரக்டர் ராஜசேகரன் நடித்துள்ளார்) இலவசமாகக் குளுகுளு கண் ணாடிகளை வழங்குகிறார். அடுத்த நிமிடம் அத்தனை விவசாயிகளும் வெறும் கோவணம் கட்டிக் கொண்டு குளு குளு கண் ணாடி அணிந்து ஏர் உழுவது போன்ற காட்சி இடம் பெற்றுள்ளது. இந்த மாதிரி பல நையாண்டிக் காட்சிகள் உள்ளன.

கே: இது போன்ற காட்சிகளால் சென்சார் தொந்தரவுகள் வரும் என எதிர்பார்க்கவில் லையா?

அருண்: வந்தாலும் வரலாம். ஒரு காட்சி யில் ஜனங்கள் அரசாங்கத்தாரிடம் மனு கொடுக்கக் கோட்டைக்கு வருகிறார்கள். அங்கே மைக்கைப் பிடுங்கிச் சண்டை போட் டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து விட்டுத் தங்களுடைய பிரச்னைக்குத் தாங் களே முடிவு காணுவதாகச் சொல்லித் திரும்பி விடுகிறார்கள். ஒரு காட்சியில் "வெள்ளைக்காரன் போயிட்டான். கொள் ளைக்காரன் வந்துட்டான்"—னு வசனம் வரு கிறது. சென்சார் பிரச்னைகள் வராமல் இருக்காது. அதைச் சந்திப்போம்.

பேட்டி: திரைஞானி

திக்குத் தெரியாத காட்டில் ஜனதா!

தமிழகத்தில் வரவிருக்கும் தேர்தலைச் சந்திக்க, ஒவ்வொரு கட்சியும் பரபரப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்க, நாட்டை ஆண்ட ஒரு தேசியக் கட்சியின் தமிழ்நாடு கிளை 'கோமா'வில் இருக்கிறது.

தேசிய அளவில் ஜனதாவில் சந்திரசேகர்—



• நெல்லை ஜெபமணி: கூட்டணி கூடாது; விலகி விடுவேன்!



• செழியன்: 'தெம்மனே' என்று உட்கார்ந்து...

கலைக்கப்பட்ட சட்டசபையில் விருதுநகர் ஏ. எஸ். ஏ. ஆறுமுகம், செங்காளியப்பன் என்று இரு ஜனதா உறுப்பினர்கள் இருந்தனர். செங்காளியப்பன் தொழிற்சங்க


ஹெக்டே கோஷ்டிகள் என இரண்டு இருக்க, தமிழக ஜனதாவிலோ நான்கு கோஷ்டிகள்! தெற்கே, மறைந்த தியாகி பொன்னப்ப நாடாரின் மகன் விஜயராகவன் ஜனதா கட்சியைத் தமது சொந்தச் சொத்தாகவே எண்ணி நடத்திக் கொண்டிருக்கிறார். இவர் சந்திரசேகருக்கு வேண்டியவர். கலிவரதன் தலைமையில் ஒரு கோஷ்டி, வரும் தேர்தலில் எப்படியும் தி. மு. க. வோடுதான் தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்ள வேண்டும் என்று மல்லுக்கு நின்று கொண்டிருக்கிறது. இது தவிர ஒரு காலத்தில் தமிழக ஜனதா தலைவராக இருந்த முகமது இஸ்மாயில், ஒரு கோஷ்டியாகத் தனித்து இயங்கிக் கொண்டிருக்கிறார். கடைசியாகச் செழியன் கோஷ்டி. இது ஹெக்டேக்கு வக்காலத்து வாங்கும் கோஷ்டி என்று மற்ற கோஷ்டியினரால் சொல்லப்படுகிறது. மேலும், கர்நாடகாவில் ஜனதா ஆட்சியில் இருப்பதால், தமிழக ஜனதா கட்சியின் செலவுகளைச் சரிக்கட்டுவதற்குக் கர்நாடகாவிலிருந்து பணம் வருகிறதாம்.

வாதி; கொஞ்சம் 'பசை' உள்ளவர்.

தேர்தல் தேர்தல் என்று மற்ற கட்சிகள் வரிந்து கட்டிக் கொண்டு, நிதி சேர்க்கக் கூட்டங்கள் நடத்திக் கொண்டிருக்க, செழி



• கலிவரதன்: எப்படியும் தி.மு.க.வுடன் கூட்டு... மல்லுக்கு நிற்பேன்!



சாப்பிட வந்தவர்: "தோசையை 'முறு வலா' தான் கேட்டது, வாஸ்தவம் தான். அதுக்காக இப்படியா....?"

— ஆர். வசந்த குமார்.




எழுத்தாளர் மனைவி: "ஏன் போஸ்ட் மேனோட சண்டை போடுறீங்க?"

எழுத்தாளர்: "திரும்பி வர்ற கதைகளைக் கொடுக்கும் போது "சார் போஸ்ட்"னு சொல்றதுக்குப் பதிலா "சார் வேஸ்ட்"னு சொல்றார்!"

— கடுவை கோபால்சாமி.

"இன்று நாங்கள் நிதி வசூல் செய்ய மாட்டோம் என்று உறுதியளிப்பதால் பொது மக்கள் எங்கிருந்தாலும் கூட்டத் திற்கு வரும்படி கேட்டுக் கொள்கி றேன்."

— பாபுஜி.



யன் தெம்மினே என்று உட்கார்ந்து இருப்பது அந்தக் கட்சியில் இருக்கும் சொற்பத் தொண் டர்களுக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கி இருக்கிறது.

'காங்கிரஸ் — ஜெயலலிதா; தி. மு. க. — கம்யூனிஸ்ட் — முஸ்லிம் லீக் தவிர, மூன்றா வது அணியாக நாம் ஒன்றை உருவாக்க லாம்' என்று ஜனதா தலைவர்கள் சிலர், வீரப்பன், ஜானகி, நெடுமாறன், ஜன மோர்ச்சா பூவராகன், சிவாஜி ஆகியோரை அணுகினார்கள். "தமிழகத்தில் ஓர் ஆதர வும் உங்களுக்குக் கிடையாது; எங்கள் அணி யில் சேர உங்களுக்கு ஒரு தகுதியும் இல்லை" என்று முகத்திலடித்தாற்போல் பதில் சொல் லப்பட்டதாம்.

தி. மு. க. இனி ஜனதா கட்சியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. காங்கிரஸ் — ஜெ. கூட்டணியில் சேர ஜனதாவால் முடியாது. இந்த நிலையில், திக்குத் தெரியாத காட்டில் இருக்கிறது தமிழக ஜனதா!

ஜனதா கட்சியின் சார்பில் போடப்படும் கூட்டங்களின் 'ஸ்டார்' பேச்சாளரான நெல்லை ஜெபமணியோ, எந்தக் கட்சியுட னும் ஜனதா கூட்டு சேரக் கூடாது என்றும், அப்படி சேரும் பட்சத்தில் தாம் விலகி விடுவ தாகவும் மிரட்டிக் கொண்டிருக்கிறார்! இவருக்கு விஜயராகவன் ஆதரவு தெரிவித் திருக்கிறார்.

தமிழகத்தில் ஜனதா நிலை இப்படியிருப் பதைக் கண்ட மது தண்டவதே, "ஓர் உற்சாக மான இளம் தலைவரைத் தமிழ்நாட்டில் போட்டால்தான் அங்கு கட்சி உருப்படும்" என்று மேலிடத்தில் கூறியிருக்கிறாராம். மேலும் வரும் தேர்தலில் தி. மு. க. வோடு கூட்டணி சேருவதுதான் சிறந்தது என்றும், எவ்வளவு இடங்கள் கொடுத்தாலும் வாங்கிக் கொள்வதுதான் சரி என்றும் சொல்லியிருக்கிறாராம்.

செழியனோ, தம்மால் இனி தமிழ்நாட் டில் பாலிடிக்ஸ் பண்ண முடியாதென்றும், தில்லியில் இருக்க விரும்புவதாகவும் தெரி வித்திருக்கிறார்.

தமிழக ஜனதா கட்சியின் நிர்வாகக் குழு கூடிப் பல மாதங்களாகிறது. இந்தக் கூட்டத் தைக் கூட்டினால் உட்கட்சிப் பூசல், வெடிக்கும்என்றுசெழியன் பயந்துகொண்டு சும்மா இருக்கிறார்.

இப்போதுதான் சந்திரசேகர் — ஹெக்டே தகராறு ஓரளவு தீர்ந்து, சற்றே சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. இனிதான் ஜனதாவின் புதிய செயல் தலைவர் அஜீத் சிங், தமிழக ஜனதா கட்சியைக் கவனிக்க வேண்டும். ஆனால் அதற்குள் தமிழகத் தேர் தல் வந்து போய் விடுவது மட்டுமல்ல; தமிழ் நாட்டில் ஜனதாவுக்கு ஜன, கண, மன —வும் பாடப்பட்டு விடும் போலிருக்கிறதே!

— லம்பாஜி.

புகைப்படங்கள்: சுபா

“சுவையுடன் வளர ராசிபலன் சொல்கிறது ஃபாரெக்ஸ்”



நீங்கள் ராசிபலனை நம்புகிறவர்களானால் மிதுன ராசிக் குழந்தையைப்பற்றிய சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த ராசிக் குழந்தை குதூகலமாகவும், சுறுசுறுப்பாகவும் இயங்குவதைக் காணலாம். புதிய இடங்களைக் காண்பதில் அதிக ஆர்வம் கொண்டது. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டும் மிதுனக்குழந்தைக்காகவே, உங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவும்.

அதிக உணர்ச்சி வசப்படும் இந்தக் குழந்தை, தன் குடும்பத்தாரிடத்தில் பற்றுகொண்டது.

ராசிபலனை நம்பினாலும், நம்பாவிட்டாலும், குழந்தையின் போஷாக்கு என்றால் முழு நம்பிக்கைக்கும் பாத்திரமானது ஃபாரெக்ஸ்.

4-வது மாதம் முதல் உங்கள் கண்மணிக்குப் ''பாலடங்கிய ஃபாரெக்ஸை'' ஊட்டுங்கள். இது முழுமையான ஆடைப்பாலிலிருந்து தயாராவதால் குழந்தை நன்கு வளரத் தேவையான கால்ஷியம், தாது உப்புக்கள், புரதம், வைட்டமின்கள், கோதுமைத்தானியம் அனைத்தும் உள்ளடக்கியது.

6-வது மாதம் முதல் ஃபாரெக்ஸ்-வெஜ் ஊட்டுங்கள். இது ருசியுடன் கூடிய ஊட்டச் சத்துக்களடங்கியது.





சுவையுடன் வளரும் வழி

GX/48/213 TML

தமிழ் இலக்கியச் சிற்பிகளே!

1987-ன் சிறந்த நூலுக்கு (நாவல்) ரூ. 10,000/- பரிசு.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

SHRIRAM TRUST

சுஜாதா பிலிம்ஸ் லிமிடெட்டும், ஸ்ரீராம் டிரஸ்ட் - அமுதசுரபி வெளியீட்டாளர்களும் இணைந்து பெருமையுடன் அளிக்கும் பரிசுத் திட்டம்.

பரிசுத் திட்டம்: சில குறிப்புகள்.

1. 1987-ம் ஆண்டு ஜனவரி 1 முதல் டிசம்பர் 31-ம் தேதிக்குள் நூல்வடிவில் வெளியிடப்பட்ட நாவலாக இருக்க வேண்டும்.
2. நாவலைப் படைத்த எழுத்தாளரோ அல்லது வெளியீட்டாளரோ இத்திட்டத்தில் கலந்து கொள்ளலாம்.
3. இப்பரிசுத் திட்டத்தில் சேர ஒருவரே தாங்கள் எழுதிய ஒன்றிற்கு மேற்பட்ட நாவல்களையும் அனுப்பலாம். சொந்தக் கற்பனையில் உதித்த படைப்புகளாக இருக்க வேண்டும். தழுவல்கள், மொழிபெயர்ப்புகள், மறு பதிப்புகள் போன்றவை தகுதி பெரு.
4. குறைந்தது 160 பக்கங்களுக்கு மேல் உள்ள நாவல்களே பரிசுத் திட்டத்தில் சேர முடியும்.
5. பரிசுத் திட்டத்தில் பங்குபெற நாவலின் 6 பிரதிகளை அனுப்ப வேண்டும். எக்காரணம் கொண்டும் அவை திரும்ப அனுப்பப் படமாட்டா.
6. உங்கள் நாவல்களை நேரிலோ, பதிவுத் தபாலிலோ, வரும் ஜூலை 15-ம் தேதிக்குள் ''பரிசு நாவல் திட்டம்'' என்ற குறிப்புடன் சேர்ப்பிக்க வேண்டும்.
7. பரிசுத் திட்டத்தில் சேர அனுப்பப்படும் ஒவ்வொரு நாவலுடனும் பூர்த்தி செய்யப்பட்ட விபரப் படிவத்தை இணைத்து அனுப்ப வேண்டும். பரிசுத் திட்டத்தின் விதி முறைகள் மற்றும் விபரப் படிவங்களை எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

''ஸ்ரீராம் டிரஸ்ட்''
(அமுத சுரபி)
145, லிங்கிச் செட்டி தெரு,
சென்னை 600 001.

எம்.ஜி.ஆரின் உண்மையான அரசியல் வாரிசு



இவர்தான் முதல்வர்:

ஜெயலலிதா ஆரம்பத்தில் அ.தி.மு.க. வில் சாதாரண உறுப்பினராக இருந்து படிப்படியாக முன்னேறியவர். புரட்சித் தலைவரால் அரசியல் உலகிற்கு அடையாளம் காட்டப்பட்டவர். சத்துணவுத் திட்ட உயர் மட்டக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பிறகு ராஜ்ய சபா உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்ற அ.தி.மு.க.—வின் துணைத் தலைவராகவும் இருந்தார். எனவே எம்.ஜி.ஆரின் உண்மையான அரசியல் வாரிசு இவர்தான்.

நாடாளுமன்றம் கூடும் போதெல்லாம் அங்கே கொண்டு வரப்படும் மசோதாக்கள் மீது இவர் தம்முடைய கருத்தை ஆங்கில மொழியில் அழகாகப் பேசியதுண்டு. நன்கு படித்தவராதலால், படித்தவர் ஆதரவு இவருக்கு இருக்கும்.

கொ. ப. செ. என்ற முறையில் முதலில் திருச்செந்தூரில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். புரட்சித் தலைவருக்கு எந்த அளவுக்கு மக்கள் கூடுவார்களோ, அந்த அளவுக்குக் கூட்டம் கூடியது. புரட்சித் தலைவருக்குப் பின் மக்களைக் கவர்ந்து இழுக்கக் கூடிய சக்தி இவர் ஒருவருக்குத்தான் உண்டு. புரட்சித் தலைவர் அமெரிக்க மருத்துவ மனையில் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த போது, அவருடைய ஆட்சியைக் கொண்டு வரத் தேர்தல் நேரத்தில் இருபது நாட்களில் ஐந்நூறுக்கு மேற்பட்ட பொதுக் கூட்டங்களில் பேசி, கட்சியின் வெற்றிக்காகப் பாடுபட்டார். மக்களிடம் அசாத்தியச் செல்வாக்குப் பெற்றுள்ளார். குறிப்பாகத் தாய்மார்களின் ஆதரவை அதிகமாகப் பெற்றுள்ளார்.


ஜெயலலிதாவுக்குக் குடும்பம் கிடையாது. அவர் கஷ்டப்பட்டுச் சினிமாவில் சம்பாதித்த சொத்தே போதும். அரசியலில் பணம் பண்ண முயல மாட்டார். மத்திய அரசுடன் சுமுகமான நல்லுறவை வளர்த்துத் தொழில் திட்டங்களுக்கு நல்லாதரவு பெறுவார்.

புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை மக்களையும், எல்லா சமூகத்தினரையும் எப்படி அரவணைத்துச் சென்றாரோ, அது போல இவரும் அவர் வழியில் செல்வார்.

இளைய தலைமுறையைச் சேர்ந்தவர். இளைஞர்கள், இவர் முதல்வராவதையே விரும்புவர். பிற மொழிகள் பல அறிந்தவர். தொழில் துறையில் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகக் கொண்டு வரக் கூடிய சிந்தனைத் திறன் உள்ளவர். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

நீட்டிய இடத்தில் எல்லாம் கையெழுத்துப் போடக் கூடியவர் அல்ல. "Mind your own business" என்று சொல்லக் கூடிய துணிச்சல் அவரிடம் இருக்கிறது. போர்க்களத்தில் ஆயிரம் வீரர்கள் கிடைக்கலாம். ஆனால் தலைமை தாங்கித் திறமையாகச் செயல்படத் தலைவர் தேவை. சமீபத்திய பல நிகழ்ச்சிகள் ஜெயலலிதாவின் துணிச்சலையும் தலைமை ஏற்கும் தகுதியையும் எடுத்துக் காட்டும்.

— ஏ. ஜி. அசோகன், சென்னை—4.


அணு யுத்த அபாயம்
உச்சி மாநாடு ஒப்பந்தம்
புறாவுக்கு நிழல் சுகமா இருக்கும்!
ரேகன்
உலக அமைதி
தும்தலகிடி தும்மா.. பார்லிமெண்டு சீட்டு வேணும்.. ஜெயலலிதா கூட்டு வேணும்...
அதை விட இது நல்லாருக்கே!
தனித்து நிற்போம்! துணிந்து நிற்போம்! தீம் தரிகிட தகிட தக ஜொணு.. ஜொணு தக!
எம்.பி.எல்
நான் ஐஸ் வெச்சா ஏமாத்த முடியும்?
காங்கிரசை எதிர்த்து கருணாநிதி அமைத்துள்ள தேர்தல் கூட்டில் சிவாஜியையும் சேர்த்துக் கொள்ளும்படி எம்.பி.எல். கோரியுள்ளார்!



கல்கி

1988 ஜூன் 12
மலர் 46 இதழ் 46
விபவ வைகாசி 30



தமிழக காங்கிரஸின் தலையெழுத்து!

தமிழக இ. காங்கிரஸ்காரர்கள் புதுதில்லிக்குப் பட்டாளமாகச் சென்று ராஜீவைச் சந்தித்து இரு விஷயங்களை வற்புறுத்தியிருக்கிறார்கள். ஒன்று தேர்தலை ஒத்திப் போட வேண்டும் என்பது. மற்றொன்று தனித்துப் போட்டியிட வேண்டும் என்பது. இரண்டாவது முடிவு சரியானது எனினும் தேர்தலை ஒத்திப் போடுவதால் அதற்கான பழி சுமப்பது தவிர வேறு லாபமில்லை. தேர்தலை ஒத்திப் போட்டால் கட்சியைப் பலப் படுத்திக் கொள்ள அவகாசம் கிடைக்கும் என்றும் எம். ஜி. ஆர். அனுதாப அலை ஓயும் என்றும் எதிர்பார்ப்பு இருக்கலாம். ஆனால் இது தவறான கணிப்பு. எம். ஜி. ஆர். அனுதாப அலை அக்கட்சியைக் கோடரி போட்டுப் பிளந்தவர்கள்பால் மக்களுக்கு இருக்க நியாயமில்லை. அதுமட்டுமல்ல, இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் வசை பாடிக் கொண்டும் ஒருவர் மீது ஒருவர் ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டும் இருக்கும் போது அனுதாப அலை அல்ல; வெறுப்பு அலைதான் பெருகும். அனுதாப அலை ஓயட்டும் என்று தவறான கணிப்பில் காத்திருக்கும் நேரத்தில், இந்த வெறுப்பு அலையும் அடங்கிவிடலாம்! ஓரிரு மாதங்கள் தாமதிப்பதால் காங்கிரஸுக்கு இப்போது இல்லாத ஆதரவு புது வெள்ளமாகப் பெருகி விடவும் போவதில்லை. எனவே தேர்தலை ஒத்திப் போடுவது சாணக்கியம் அல்ல.

தனித்துப் போரிடுவது சரியான முடிவு. இத்தனை காலம் முதுகுச் சவாரி செய்ததில் கேலிக்குள்ளானது மட்டுமல்ல; காங்கிரஸ், ஊக்கமிழந்து செயல்திறனும் அற்றுப் போயிருக்கிறது. அதனை உடனே தன் கால்களில் நிற்கச் செய்ய வேண்டும். அப்போது நொண்டியடித்தாவது முன்னேறும். அடுத்த தேர்தலில் பார்த்துக் கொள்ள லாம் என்றும் தொடர்ந்து முதுகுச் சவாரி செய்ய அனுமதித்தால், அதன் கால்கள் மேலும் சூம்பிப் போய் நிற்கவும் பலமிழந்து நொடியும்.

எப்படிப் போராடினாலும், காங்கிரஸ், ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சந்திக்கத் தான் வேண்டியிருக்கும். ஆனால் போஃபர்ஸ், நீர்மூழ்கி பேரங்கள் எல்லாம் மத்திய அரசு தொடர்பானவை. தமிழக காங்கிரஸ் தலைவர்கள் மீது அப்படியொன்றும் யாரும் பயங்கர லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவிடவில்லை. பினாமி அவசரச் சட்டத்துக்குப் பிறகு, மூப்பனார் மீது, 'பினாமி நிலம் வைத்திருக்கிறார்' என்ற குற்றச் சாட்டுக் கூட வலுவிழந்துதான் ஒலிக்கும். எனவே திராவிட பாரம்பரியக் கட்சிகளை விடவும் காங்கிரஸ், இந்த விஷயத்தில் அனுகூல நிலையில் இருப்பதாகவே சொல்லலாம். நேர்மையான ஆட்சியை அமைப்பதாகவும், வேலை வாய்ப்புக்கள் பெருகச் சீரிய திட்டம் அமுல்படுத்துவதாகவும் கூறி வோட்டுக் கேட்கலாம். இளைஞர்கள், முதியவர்கள் ஆகிய இருதரப்பினரையும் இத்தகைய ஒரு கொள்கையும் செயல்திட்டமும் கவர்ந்திழுக்கும்.

துணிந்து தேர்தலைச் சந்தித்த பின்னர், ஆட்சியைப் பிடிக்க முடியவில்லை என்றே வைத்துக் கொள்வோம். ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. சக்திவாய்ந்த எதிர் கட்சியாகச் சிறப்பான ஜனநாயகப் பணி ஆற்றலாம். ஜனநாயகத்தில் ஆட்சியைப் பிடிப்ப தைவிட முக்கியமானது, சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கி, ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர் களின் குற்றம் குறைகளை எடுத்துக் காட்டித் திருத்துவதுதான். ஜெயலலிதா கோஷ்டி யுடன் கூட்டணி அமைத்தாலோ ஆளவும் முடியாது; எதிர்ப்புப் பணி ஆற்றவும் முடியாது! தமிழக காங்கிரஸ் ஒன்றுக்கும் உதவாமல் போகும். சுயபலத்தில் எதிர்க்கட்சியாக விளங்கி னால், அடுத்த தேர்தலுக்குள் தனது செல்வாக்கைக் காங்கிரஸ் அதிகரித்துக் கொள்ள நிறைய வாய்ப்பு இருக்கும். அடிமட்ட ஊழியர்களை ஊக்கப்படுத்தலாம்; உட்கட்சி ஜன நாயகத்தைப் பலப்படுத்தலாம்; ஒற்றுமையை வளர்க்கலாம்; சாமானிய மக்களின் சுகதுக் கங்களில் பங்கு கொண்டு அவர்கள் நல்லெண்ணத்தைச் சம்பாதிக்கலாம். 'காங்கிரஸ் சார்பில் விளக்குக் கம்பத்தை நிறுத்தினாலும் வோட்டு விழும்' என்று பேசப்பட்ட பெரு மிதம் மிக்க காலத்தைத் திரும்பப் பெற முயற்சி செய்யலாம்.

இந்த நியாய வாதங்களை ராஜீவ் ஏற்றுக் கொண்டு தமிழக காங்கிரஸ் தலைவர் களை ஊக்குவிக்க வேண்டும். ஆனால் ராஜீவுக்கு நாடாளுமன்றத்தில் தனக்கு ஆதரவு குறைந்து போகுமோ என்ற கவலை இருக்கிறது. அடுத்து வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் அவர் நினைவில் உறுத்துகிறது. போஃபர்ஸ் பயமுறுத்துகிறது. அதனால்தான் தடுமாறுகிறார். ஜெ. கோஷ்டியுடன் கூட்டணி அமைக்க அவர் தீர்மானித்தால், காங்கிரஸ் நலனை விட, தமிழகத்தின் நலனை விட, சுயநலனே அவருக்கு முக்கியமாகி விட்டது என்பது தான் அர்த்தம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

நீலகிரி மாவட்ட ரீ—விசிட்:

பிரச்சனைகள் தொடர்கி

நீலகிரி ரீ—விசிட்டுக்காக ஊட்டிக்கு வந்து சேர்ந்த போது, பல இடங்களில் ஜரூராக வேலை நடந்து கொண்டிருந்தது. புதிய தார் ரோடுகள் என்ன, ராஜ்பவனுக்குத் தனியாக, தடிமனான தண்ணீர்க் குழாய் அமைப்பது என்ன, வழி நெடுகப் போலீஸ்காரர்கள் என்ன — ஒரே அல்லோலகல்லோலமாய் இருந்தது. இருக்காதா பின்னே? மலர்க் காட்சி: கோடை விழா ஒரு பக்கம். ஊருக்குள்ளேயே ஆளுநர் இன்னொரு பக்கம். இதற்கெல்லாம் மேலே, பிரதமர் ராஜீவ் மாவட்ட ஆட்சியர் மாநாடு நடத்த வரப் போகிறார் என்றால் சும்மாவா? (கடைசி நிமிடத்தில் பிரதமர் தமது நீலகிரி விஜயத்தை ஒத்தி வைத்து விட்டார் என்பது வேறு விஷயம்). இதற்கெல்லாமாகப் பல லட்சம் ரூபாய் செலவாகி இருக்கும் என்று உள்ளூர்ப் பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்! இவை தவிர, பிரதமரே தமது



கிருஷ்ணன்: "நீலகிரியைக் காப்பாற்றுங்கள்..."

கப்பட்டிருக்கிறது. ஆனால் கேத்தியில் இயங்கி வரும் ஒரு தொழிற்சாலைக்கு,

உள்ளங் கைக்குள் அடக்கம் என்பது போல் பேகம் ஜெயலலிதாவின் விஜயமும் 'நீலகிரியைக் காப்பாற்றுங்கள்' இயக்கத்தினர் நடத்திய ஓட்ட ஊர்வல நிகழ்ச்சியும் எல்லாமாகச் சேர்ந்து கொள்ள உதகமண்டலம் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது.

"நீலகிரியின் இயற்கைச் சூழலை எத்தனை சிதைக்க முடியுமோ அத்தனை சிதைத்தாயிற்று. இனி என்ன செய்யப் போகிறோம்? குறைந்தபட்சம் நடந்து விட்ட கொடுமையைச் சீர் செய்யலாம். இந்தச் சீரமைப்புச் செலவு, அழிவைத் தடுத்து நிறுத்துகிற செலவை விட அதிகம் தான் என்கிறது ஜியலாஜிகல் சர்வே ஆப் இந்தியா. அதனால்தான் காடுகளையும், ஏரி—ஓடைகளையும், வனவிலங்குகளையும், வனாந்தரச் சூழல்களையும் அழித்து விடாமல் அப்படியே காப்பது ஒவ்வோர் இந்தியக் குடிமகனின் கடமை என்று அரசியல் நிர்ணயச் சட்டமே சொல்கிறது. ஆனால் யார் இதை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளுகிறார்கள்!" என்று அங்கலாய்க்கிறார் 'நீலகிரியைக் காப்பாற்றுங்கள்' என்ற அமைப்பை நடத்திவரும் கிருஷ்ணன்.

ஓர் எடுத்துக்காட்டு: முதுமலை வனவிலங்குச் சரணாலயத்தை ஒட்டியுள்ள ஐந்து கிலோ மீட்டர் வட்டத்துக்குள் எந்தத் தொழிற்சாலையும் ஏற்படுத்தக் கூடாது என்று 1969—லேயே அரசுச் சட்டம் (ஜி.ஓ. 2837) பிறப்பிக்கப்பட்டு, கலெக்டர் தேவையான நடவடிக்கை எடுக்க அதிகாரம் வழங்



இதே ஐந்து கிலோ மீட்டர் வட்டத்துக்கு உட்பட்ட மாசினகுடியில் 'எலக்ட்ரோ பிளேட்டிங்' தொழிற்சாலை அமைக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது! இதனை அறியாமை என்பதற்கில்லை: அதிகார துஷ் பிரயோகமே. 'சிப்கோ' இயக்கத் தலைவர் பகுகுணா இங்கே சென்ற மாதம் வந்திருந்த போது, இதைச் சுட்டிக்காட்டி, லூதியானா வில் இதே போல் சைக்கிள் தொழிற்சாலை கள் ஆரம்பித்த 'எலக்ட்ரோ பிளேட்டிங்' கினால் சுற்றியுள்ள தண்ணீர் முழுதும் சயனைட் விஷமாகி விட்டதாக எச்சரிக்கை செய்திருக்கிறார். அப்படியிருந்தும் அரசு லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை!

மற்றொரு உதாரணம்: கூடலூரில் கன்னி வன நிலங்களில் (Virgin forest lands) 30,000 ஏக்கர்களைத் தமிழ்நாடு பிளாண்டர்ஸ் அசோசியேஷன் தேயிலைத் தோட்டங்கள் போடுவதற்காகக் கேட்கிறதாம்! இவை நிலாம்பூர் கோவிலகம் என்னும் ஜமீன்தார் குடும்பத்தைச் சேர்ந்த 'ஜன்மம் நிலம்'. 1969-ல் ஜன்மம் நில ஒழிப்புச் சட்டத்துக்குப் பின் மொத்த நிலமும் தமிழ்நாடு அரசுக்கே சொந்தமாயிற்று. பதினெட்டு வருடங்களாக இந்த வழக்கு நடைபெற்று வருகிறது. "ஐயா, தேயிலைக்கு மாற்றுக் கிடைத்து விடும். காடுகளுக்கு மாற்று எங்கேயிருந்து கிடைக்கும்?" என்று கேட்

ன்றனே...



ராமன் குடும்பத்தினர்: இன்னும் உதவி கிடைக்க வில்லை.



நீலகிரியின் அழகு கெட்டுப் போகக் காரணமாகின்றது...

கிறார் கிருஷ்ணன்.

ஜன நெருக்கம்: மோசமான சாலைகள்: நிரந்தரக் குடிநீர் தட்டுப்பாடு: தேவைக்கு மிகவும் குறைவான கழிவுநீர் வடிகால் அமைப்பு - இவை, 'நீலகிரியைக் காப்பாற்றுங்கள்' இயக்கத்தைத் தீவிரமாகச் செயல்பட வைத்திருக்கும் சில பிரச்னைகள்.

இனி -

மறு விஜயத்தினையொட்டி வந்த சில கடிதங்களில் ஒன்றிரண்டைப் பார்ப்போம்.

●● தமிழ் நாட்டிலுள்ள இரண்டே இரண்டு கண்டோன்மெண்ட்டுகளில் ஒன்று செயின்ட் தாமஸ் மவுண்ட் (சென்னை); இன்னொன்று வெலிங்டன் (நீலகிரி). இவை உள்ளாட்சி அமைப்புக்கள்தாம். பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்குபவை; இவற்றின் பட்ஜெட்டே பாதுகாப்புச் செலவு பட்ஜெட்டோடு சேர்த்துத் தயாரிக்கப்படுகிறது. பல எம்.பி.-களுக்கு இந்த அமைப்புக்களைப் பற்றியே தெரியாது. 'இங்கு வாழும் மக்கள் படும் அல்லல்களும் தொல்லைகளும் ஏராளம்.



* கலெக்டர் ஸ்ரீபதி

குடிநீர் சப்ளை ஒரு பெரும் பிரச்னை. 1981—லேயே நின்று போய்விட்ட குடிநீர் வழங்கும் திட்டத்துக்கு, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் பிரச்னை தீரவில்லை. எங்கள் ஊர் எம்.பி.யே எங்கள் பிரச்னைகளின் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லையே!'' என்கிறார் வெலிங்டன் 'மக்கள் நலக் குழு'வின் செயலர் கேசவ முதலியார்.

●● கோத்தகிரி தாலுகாவில் உள்ள பெப்பேனு, பன்னீர், கேசிலாடா ஆகிய ஊர்களில் வசிப்பவர்கள் ஏழை விவசாயக் குடும்பத்தினர். சாலை வசதியோ, பேருந்து வசதியோ, மருத்துவ வசதியோ, கல்விக்கூட வசதியோ அருகில் கூட்டுறவுப் பண்டக சாலையோ, குடிநீரோ எதுவுமே இல்லாத ஊர்கள். அரசாங்கத்தால் அளிக்கப்படும் பல சலுகைகள் இவ்வூர்களுக்குக் கிடைத்ததேயில்லையாம். இதுவரை எந்த மாவட்ட ஆட்சியாளரும் இந்த ஊர்களுக்குள் எட்டிப் பார்த்ததும் இல்லையாம்; குறைகளைக் கேட்டதும் இல்லையாம்!

கலெக்டரைச் சந்தித்தோம். முன்பிருந்த அதே கலெக்டர் ஸ்ரீபதி.

''கோத்தகிரி அருகிலுள்ள பாக்யா நகரில் மக்கள் மறுவாழ்வு மன்றம் கட்டிய இருபத்தியொரு விடுகளை, அரசு தர வேண்டிய 6000 ரூபாயைத் தராததால் இலங்கை அகதிகள் சிலர் பெற முடியவில்லையே?'' என்று கலெக்டரிடம் கேட்டோம்.

''நான் விசாரித்து விட்டேன். அவர்களுக்கு அந்தச் சலுகை பெறும் தகுதி இல்லை. அவர்கள் நீலகிரி மாவட்டத்தில் குடியேற அனுமதிக்கப்படாதவர்கள். நான் முதலிலேயே சொன்னது மாதிரி, எந்தெந்த மாவட்டத்துக்கு இலங்கை அகதிகள் போய்க் குடியேற வேண்டும் என்று இருக்கிறதோ, அங்கேதான் அவர்கள் குடியேறலாம். சிலர் தங்கள் டாகுமெண்ட்களைத் தொலைத்து விட்டு நிற்கிறார்கள். அவை பற்றிய முழு விசாரணையும் முடியவில்லை. ஆரம்பத்தில் அவர்களுக்குக் குறிக்கப்பட்ட மாவட்டங்களில் குடியேறுவதே நல்லது.''

''மாயாரிலிருந்து நடுவட்டம் வரை புதர்கள் மிகுந்த மலைப் பாதையில் நடந்து வந்து சாமான்களை வாங்கிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறதே?''

''இது மாதிரி இடங்கள் நீலகிரியில் நிறைய இருக்கின்றன. ஆலம்பள்ளம் 17 கிலோ மீட்டர் நடக்க வேண்டும். சடையன் கோம்பை, சின்னாக் கோம்பை, மூப்பேர்க் காடு இவை எல்லாவற்றுக்கும் நடந்தேதான் போக வேண்டும். நானே இது போன்ற இடங்களுக்குப் பதின்மூன்று, பதினான்கு கிலோ மீட்டர் தூரம் நடந்தேதான் போய் வந்திருக்கிறேன். இவை எல்லாம் பழங்குடி மக்கள் வசிக்கும் இடங்கள். நீங்கள் சொல்லும் இடமோ இங்கே வந்து குடியேறிவர்களுக்கான குடியிருப்பு உள்ள இடம்... முன்னுரிமை அளித்து இது போன்ற இடத்துக்கு வசதி செய்து கொடுக்க இயலாது. வருங்காலத்தில், நிதி நிலைமை இடம் கொடுக்கும் பட்சத்தில் இது போன்ற இ ங்களுக்கு வசதிகள் ஏற்படலாம்.''



* மாயார் கிராமம்: விடிவு காலமே இல்லையா?

''மாயாரிலேயே ராமன் என்பவரின் மகன் சடையாண்டி, யானையால் மிதிபட்டு இறந்து போனான். முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நீங்கள் கொடுப்பதாகச் சொன்ன ஆயிரம் ரூபாய் இன்னும் கொடுக்கப்படவில்லையே?''

''பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பி விட்டோம். அநேகமாகக் கொடுக்கப்பட்டு விடும். (பி.ஆர்.ஓ. ஜான் விசாரிப்பதற்காகக் குறித்துக் கொள்ளுகிறார்.)

''உதகை நகராட்சியில் ஆரம்பப்பள்ளி ஆயாவாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற மீனாட்சிக்கு, நகராட்சி எந்தவிதமான ஓய்வூதியமும் தரவில்லையாமே?''

''நீங்கள் குறிப்பிட்ட ஆயா 30.6.83—ல் ஓய்வு பெற்றிருக்கிறார். மாற்றியமைக்கப் பட்ட சம்பள விகிதம் பற்றிய அரசு ஆணை 1.10.84—ல்தான் வெளியாகியது. அதனால் அவருக்கு இதன் பலன் கிடைத்திருக்காது. சட்டப்படி எவ்வளவு கொடுக்கப்பட வேண்டுமோ அது கொடுக்கப்பட்டு விட்டது.''

''நடு வட்டம் கிராமக் கர்ணமாயிருந்த சி. வேலாயுதத்துக்கு எட்டு மாத ஊதியம் இரும்ப வழங்கப்படாதது குறித்து விசாரிப்பதாகச் சொன்னீர்கள்....

''நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.'' (பி.ஆர்.ஓ. குறித்துக் கொள்கிறார்.)

''ஊட்டியிலுள்ள கட்டணக் கழிப்பிடங்களில் கூடுதலாக வசூல் செய்கிறார்களே?''

''இது நகராட்சி கவனிக்க வேண்டிய பிரச்னைதான். இருந்தாலும் நானும் சேர்மனும் சில 'ரவுண்ட்ஸ்' போய்ப் பார்க்கத்தான் செய்தோம். அதிகப்படி வசூல் செய்யக் கூடாது என்று உத்தரவு இட்டிருக்கிறோம். மீறி வசூலிப்பவர்களைப் பணி நீக்கம் செய்து விடுவோம் என்று கண்டித்துச் சொல்லியிருக்கிறோம்.

''இம்பட்டி என்னும் கிராமத்தில் பெண்கள் சினிமாவுக்குப் போகக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்ததே. இப்போது எப்படியிருக்கிறது?''

''விசாரித்துப் பார்த்தேன். அதுவொரு பெரிய விஷயமாகத் தெரியவில்லை.''

'' 'நீலகிரியைக் காப்போம்' என்று ஒரு தீவிர இயக்கமே நடத்த வேண்டிய அளவுக்கு, நீலகிரி அழிக்கப்பட்டு வருகிறதே. இந்த இயக்கத்தின் சில முயற்சிகளைத் தொடங்கி வைத்தவர் என்ற முறையில், உங்கள் ஒத்துழைப்பு இவ் வியக்கத்துக்கு எந்த அளவுக்கு இருக்கும்?''

''எந்த நல்ல பணிக்கும் என் ஆதரவும் ஒத்துழைப்பும் நிச்சயம் உண்டு. பொது மக்கள், அமைப்புக்கள் என்று எல்லாத் தரப்பினரும் நீலகிரி நமக்குச் சொந்தம் என்பதை உணர்ந்து செயல்பட்டால் நல்லது. வனச் செல்வங்களைப் பாதுகாப்பது நமது கடமை என்று எல்லோரும் உணர வேண்டும். பாதுகாப்பது என்பது முக்கியமானதுதான். ஆனால் பாதுகாப்பும், முன்

* இம்பட்டி கிராமப் பெண்கள்: ''இவர்கள் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையே இல்லை--என்கிறார் கலெக்டர்.



னேற்றமும் இணைந்து, கை கோத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்று கருதுபவன் நான்!''

இவை தவிர, ரீ விசிட்டின் போது வந்த சில பிரச்னைகளும் கலெக்டரிடம் சுட்டிக் காட்டப்பட்டன. தொட்டபெட்டாவிலுள்ள ராணி என்பவர், தாம் சின்கோனாத் துறையில் இன்னும் நிரந்தரமாக்கப் படவில்லை என்பதோடு தம்மை அலைக் கழிக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருந்தார். இதில் தாம் நேரடியாகத் தலையிட முடியாது என்றாலும் சின்கோனாத் துறை இயக்குநர் பரிவுடன் கவனிக்க வேண்டும் என்று அரசுக்குக் கடிதம் எழுதுமாறு பதில் அனுப்பப்பட்டிருப்பதைக் குறிப்பிட்டார்.

அருவங்காடு சரகத்தில் உள்ள கூட்டுறவுப் பண்டக சாலையில் உள்ள ஊழல் குறித்து எழுதிய இருவருக்குப் பதில் சொல்கிற போது, கார்டுதாரருக்கு தலா பதினைந்து லிட்டர் கிரசின் முனிசிபாலிடி ஊர்களிலும், பத்து லிட்டர் டவுன் பஞ்சாயத்துக்களிலும், ஐந்து லிட்டர் கிராமப் பஞ்சாயத்துக்களிலும் கொடுக்க உத்தரவிட்டிருப்பது, தமிழ்நாட்டிலேயே இந்த ஒரு மாவட்டத்தில்தான் என்றார் ஆட்சித் தலைவர். தவிர, தாலுகா சப்ளை ஆபீசர் முறையாக திடீர் சோதனைகள் நடத்தி வருவதாகவும், ஊழல்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இறுதியாக, நாம் ரீ—விசிட் முடிந்து திரும்பிய போது, குன்னூரிலும் கோவையிலும் செயல்படும் எஸ்டேட் ஊழியர்கள் நலச் சங்கத்தின் தலைவர் டாக்டர் டேனியல், செயலர் ஜகந்நாதன், உதவிச் செயலர் பெனீஸர் ஆகியோர் நம்மை வந்து சந்தித்தார்கள். சுமார் 50,000 ஊழியர்களைப் பாதிக்கும் பிரச்னை பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்தார்கள். (இச் சங்கத்தின் முன்னாள் தலைவர்: இப்போதைய குடியரசுத் தலைவர் ஆர். வி. அவர்கள்.)

''பெரிய எஸ்டேட்டுகளைச் சிறு சிறு துண்டுகளாக்கிப் பல பெயர்களில் பிரித்து விட்டு, ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தை ஒரேயடியாகக் குறைத்து விடுகிறார்கள். குழந்தைகள் காப்பகம் போன்ற வசதிகளும் செய்து கொடுப்பதில்லை. இப்படிச் சிறு சிறு துண்டுகளாக்கி விட்டால் வேலைப் பாதுகாப்பு இருப்பதில்லை. மருத்துவ வசதி செய்து கொடுப்பதில்லை. இந்தத் துண்டாடல் கடந்த மூன்று வருடங்களாகத்தான் நடைபெற்று வருகிறது. சென்னையிலுள்ள 'பிளான்டேஷன் லேபர் அட்வைசரி கமிட்டி' முன் இந்தப் பிரச்னையை வைக்கப் போகிறோம். பாராளுமன்ற அங்கத்தினர்களுக்கு ஒரு மகஜர் தயாரித்து அளிக்கப் போகிறோம்.

''அந்த மகஜரில் அரசுக்கும் கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டமாகி வருகிறது என்பதைச் சுட்டிக் காட்டப் போகிறோம். துண்டு போடுவது என்றால் வெறும் காகித அளவில் மட்டுமே. அதனால் மூன்றரை லட்ச ரூபாய் கட்ட வேண்டிய ஒரு எஸ்டேட் அதிபர் 50,000 ரூபாய் கட்டினால் போதும்! வரியில்தான் இப்படி என்றால், ஸ்டாம்ப் ட்யூட்டியிலும் அரசுக்கு ஏராளமாக நஷ்டம் ஆகிறது. குறைந்தபட்சம் ஓர் ஏக்கருக்கு ஒன்பதாயிரம் ரூபாய் ஸ்டாம்ப் ட்யூட்டி ஆகிற இடத்தில் மூன்றரை ரூபாயே கொடுக்கிற போது எத்தனை நஷ்டம் என்று யோசித்துப் பாருங்கள்! இதே போல்தான் சொத்து வரியிலும் பாதிக்குப் பாதி நஷ்டமாகிறது. போதாக்குறைக்கு, நில விற்பனையில் பத்திரங்களைத் தயாரிப்பதில் ஏகத்துக்கு விலை குறைத்துப் போடுவதால் கறுப்புப் பணம் தாராளமாக விளையாடுகிறது! ஊழியருக்கு நியாயமாகச் சேர வேண்டிய சலுகைகள், சட்டப்படி கிடைக்க வேண்டிய சலுகைகள் — இப்படி நிலங்கள் துண்டாடப் படுவதால் மறுக்கப்படுவது அநியாயமாகப் படுகிறது!'' என்கின்றனர் இந்தச் சங்கத்தினர். ஆக, நமது ரீ—விசிட் பணிகள் முடிந்தாலும் பிரச்னைகள் ஓய்ந்தபாடில்லை!

— சாருகேசி

அட்டையில் ஊட்டி ஏரியின் ஒரு காட்சி.
வண்ணப்படம்: கே. வி. ஆனந்த்



''ரொம்ப நாளா யோசனை பண்ணி இன்னிக்குத்தான் தர்மம் பண்ணணும்னு முடிவுக்கு வந்தார் போலிருக்கு!''

''எப்படி சொல்றே?''

''பின்னே பாரேன். இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலத்து நாணயம் ஒண்ணு போட்டிருக்கார்!''

— ஒய். கே. சங்கர்.


Godrej
Marvel
மார்வல்-இதம் தரும் தன்மை
காஞ்சிப்பட்டுப் போன்ற மென்மை.
ஸ்பன் ஸில்க் போன்ற தன்மை. காஞ்சீவரம் பட்டுப் போன்ற மென்மை. தேங்காய் எண்ணெயின் இயற்கையான நற்குணங்கள் தரும் நுரைவளத்தின் செழுமை.
மற்ற சோப்புகளை விட
3 மடங்கு அதிகம் தேங்காய் எண்ணெய் கொண்டது



பற்களைப் பற்றிய ஒரு பெரிய உண்மை
வாய் துர்நாற்றம் என்பது பற்களைவிட அதிகம்,
ஈறுகள் சம்பந்தப்பட்டதாகும்.
மற்றுமொரு பெரிய உண்மை
போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட்டில்
உள்ள ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் மட்டுமே ஈறுகளை
வலுவாக்கி அவற்றை ஆரோக்கியமாக வைக்கிறது.
அதனால் வாய் துர்நாற்றம் ஏற்பட வாய்ப்பே இல்லை.
நுரை வளமுள்ள
போர்ஹென்ஸ்
—நீல நிறப் பேக்கிலே.
FOAMING
Forhan's
TOOTHPASTE
Forhan's
கட்டுப்படுத்தப்பட்ட
நுரையுள்ள
—ஆரஞ்சு பேக்கிலே.
போர்ஹென்ஸ்
பராமரிப்பு
32 என்றும் பத்திரம்
ஒரு பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்.

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப் போட்டி - 1988



முதல் பரிசு	ரூ.	1500
இரண்டாவது பரிசு	ரூ.	750
மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்	ரூ.	750

ஆக மொத்தம் ரூ. 3000 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 125 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

• கதைகள் சொந்தக் கற்பனை என்றும், இதற்கு முன் வேறு எந்த உருவிலும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.

• அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லைஎன்றும்போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

• நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

• உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

• பிரசுரத்துக்குஏற்கப்படாதகதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

• கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

• எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

• சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

• போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 7 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

• எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை— 600 032.

வி.பி. சிங் போட்டியும் இ.காங்கிரஸின் பயமும்



அலகாபாத் இடைத் தேர்தல்:

மகாத்மா காந்தி தண்டியாத்திரையை மேற்கொண்ட பொழுது அதன் நோக்கம் ஜவாஹர்லால் நேருவுக்கே விளங்கவில்லை. ஆனால் ஒவ்வொரு தினமும் செல்லச் செல்ல காந்திஜி ஏழை எளியவர்களைக் காந்தம் போல் பற்றி இழுக்கிறார் என்பது அவருக்குப் புரிந்தது. மகாத்மா ஒரு கொள்கைக்காக உப்புச் சத்தியாகிரகத்தைத் துவக்கினார்.

மகாத்மாவுடனோ அல்லது அவருடைய முறைகளுடனோ எதையும் ஒப்பிட முடியாது. உண்மையிலும் நேர்மையிலும், கைப்பிடிக்கும் முறைகளிலும் ஒரு சிறு மாசு கூட இல்லாதவர் அவர். ஊழலும் லஞ்சச் சூழ்நிலையும் உண்மைக் கலப்பில்லாத செய்கைகளும் மண்டிய இன்று, மகாத்மாவை நினைவூட்டும் வகையில் செயல்படுபவர் வி. பி. சிங், முன்னாள் நிதி, பாதுகாப்பு மந்திரி.

துவக்கத்தில் அவர் ராஜீவ் காந்திக்கு உறுதுணையாக விளங்கினார். தேங்கிக் கிடந்த வர்த்தக, தொழில் மந்திரி சபைகளைத் தட்டியெழுப்பினார். பொருளாதாரம் பிரகாசிக்க ஆரம்பித்தது. அவர் நிதி மந்திரியான பொழுது வரி ஏய்ப்பு, அந்நியச் செலாவணி மோசடிகள் நாட்டையும் பொருளாதாரத்தையும் சீர் குலைக்கின்றன என்பதை அறிந்து கொண்டார். அவர் எடுத்த கடும் நடவடிக்கைகள் இத்தாலியத் தொழில் அதிபர்களைப் பாதிக்காத வரையில், பிரதமர் ராஜீவுக்குப் பிடித்திருந்தது. பின்னர் பாதுகாப்பு மந்திரி சபையில் நடந்த லஞ்ச பயங்கரங்களை வி. பி. சிங் ஆராய்ந்த பொழுது, எப்படியும் அவற்றை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார். அவற்றில் ஒன்று பிரபல ஹிந்தி சினிமா நடிகரான அமிதாப்பச்சனின் லீலைகள். அவர் தம்பி அஜிதாப் பச்சன் எண்பது லட்ச ரூபாய்க்கு ஸ்விட்சர்லாந்தில் சொகுசு வீடு வாங்கித் தம் பிள்ளைகளை அங்கு படிக்க வைக்கச் செய்தது வி. பி. சிங்கைத் திகைக்க வைத்தது. வட இந்தியாவிலுள்ள சில தொழில் துறைத் திமிங்கலங்கள் கோடானு கோடி ரூபாய்களை ஸ்விட்ஸர்லாந்து வங்கிகளில் பதுக்கி வைப்பது பல பத்தாண்டுகளாக நடக்கும் கதை. ஆனால் ஒரு தனி நபர் இவ்வளவு பெரிய தொகையை மத்திய அரசு, ரிசர்வ் வங்கி அனுமதியின்றி எப்படி வெளியே எடுத்துச் சென்றார் என்பது கேள்வி. இதை ஆராய முனைந்த போது, ஒரு பெரிய கை நிறுத்து என்று சிங்கின் முன் தோன்றியது. அது பிரதமரின் கை. இந்தியாவிலுள்ள கள்ளக் கடத்தல்காரர்களையெல்லாம் எதிர்க்க வேண்டும். ஆனால் சிலரது பொருளாதாரக் குற்றங்களை மட்டும் கண்டு கொள்ளாமல் விட்டு விட வேண்டும் என்ற போக்கு சிங்குக்குப் பிடிக்கவில்லை. ஒரு தனி நபருக்குப் பரிந்து



• சுனில் சாஸ்திரி: வி. பி. சிங்குக்கு எதிராக......

பிரதமர் செயல்படுகிறார் என்பதை மகளுக்கு விளங்க வைக்க அமிதாப் பச்சனுடன் மோதத் தயாரானார் சிங். பிரதமரின் பக்க பலம், அமிதாபுக்கு உண்டு என்றால் காங்கிரஸ் கட்சி ஊழல், பொய், பித்தலாட்டம் எல்லாவற்றிற்கும் வக்காலத்து வாங்கியாக வேண்டும். கட்சியில் உள்ளவர்கள் வருங்காலம் பற்றிச் சிந்தித்திருந்தால் அவர்கள் அமிதாப்பச்சனை உடைப்பில் போட்டிருப்பார்கள். ஆனால் அந்தத் துணிவு, பிரதமரை எதிர்த்துக் கொள்ளும் நெஞ்சுறுதி காங்கிரஸுக்கு இல்லை.

வேட்பு மனு தாக்கல் செய்யும் தினம் அமிதாப்பச்சனின் விலாசமே தெரியவில்லை. இது, சிங்கின் மாபெரும் சாதனை! களத்தை விட்டு ஒரு பிரபல புள்ளி ஓடி விடுவது என்பது கேள்விப்படாத விஷயம்.

வி. பி. சிங் அலகாபாத்தைத் தேர்ந்தெடுத்ததற்கு அமிதாப்பச்சன் மட்டும் காரணமில்லை. அந் நகரம் அரசியலில் ஒரு தனிப்பெரும் இடத்தைப் பெற்றிருக்கிறது. அலகாபாத் உயர் நீதி மன்றம் நீதித் துறையில் புகழ் பெற்றது. சர்தேஜ் பகதூர் ஸப்ரு, டாக்டர் கே. என். காட்ஜு போன்றவர்கள் செயல்பட்ட நகரம். மோதிலால் நேரு இந் நகரத்தில்தான் புகழுடனும் செல்வத்துடனும் வாழ்ந்தார். ஜவாஹர்லால் நேரு சுதந்திர இயக்கத்தில் குதித்த பிறகு மோதிலால் நேரு, அரண்மனை போன்ற ஸ்வராஜ் பவனைக் காங்கிரஸுக்கு அன்பளிப்பாகக் கொடுத்து விட்டார். அந் நாட்களில் இது அகில இந்தியாவின் கவனத்தையும் கவர்ந்தது. ஒரு கட்டம் வரை காங்கிரஸுக்கு உழைத்த மதன் மோகன் மாளவியா அலகாபாத்தில் கொடி கட்டிப் பறந்தவர். காசியில் ஹிந்து கலாசாலையை நிறுவியவரும் இவரே.



''இவர்தாங்க நம்ம கட்சியோட பிரசார பிரங்கி!''

''அப்படியா, என்ன பிரசாரம் பண்றார்?''

''பிரங்கி பேரத்துல எந்த ஊழலும் இல்லைன்னுதான்!''

— சேத்தூர் அன்பழகன்.



நிருபர்: காதல் காட்சிகளில் நடிக்கும் போது கன்னங்களில் குழி விழ, இயற்கையாகச் சிரிக்கிறீர்களே, எப்படி?

நடிகை: அந்தச் சமயத்தில் என்னுடைய பல் செட்டைக் கழற்றி விடுவேன். அவ்வளவுதான்!

— அ. குமார்.

''ஒண்ணுக்கு நாலா நாய் வளர்க்கறீங்க சரி, ஆனா அதுங்களுக்கு ஏமாளி, சோமாறி, பேமானி, கஸ்மாலம்னு பெயரு வைச்சிருக்கீங்களே, ஏன்?''

''எனக்குப் பிடிக்காத தலைவர்களை நேரிடையா திட்ட முடியாது பாருங்க; அதனாலேதான்....!''

— எஸ். ராகவேந்திரா.



இதைத் தவிர அலகாபாத், தொழிற் சங்கத் துறையிலும் பெயர் பெற்றது. எச். என். பகுகுணா இங்கிருந்துதான் தேர்ந்தெடுக்கப் பட்டுத் தொழில் மந்திரியானார். இந் நகரின் லோக் சபைத் தொகுதியில்தான் வி. பி. சிங்கின் குடும்பம் உள்ளது. பரம் பரையாகவே உயர்ந்த அந்தஸ்தும் செல் வமும் படைத்த குடும்பம். 'ராஜா சாகேப்' என்பது அவருடைய மூதாதையர் காலத் திலிருந்து உபயோகப்படுத்தப்பட்டு வரும் அடைமொழி. அக் குடும்பத்தில் உள்ளவர் களுக்குச் சுய கௌரவம், மரியாதை முதலி யவற்றில் அக்கறை உண்டு. இவர்களும் சுதந்திர இயக்கத்தில் ஈடுபட்டவர்கள். இன் றும் வி. பி. சிங் அவருடைய மூத்தவர்களின் வார்த்தைகளை எதிர்த்து எதையும் செய்ய மாட்டார். வி. பி. சிங் தம் பதவியை உதறித் தள்ள வேண்டி வந்தது என்று தெரிந்ததும் அவர் சகோதரர் வெளிப்படுத்தியது ஒரே ஒரு பெருமூச்சு மட்டுமே! அதன் மூலம் நடைமுறை அரசியலுக்கு எதிராகத் தம் வெறுப்பைத் தெரியப்படுத்தினார். ஆத லால் சிங்கின் இயக்கத்திற்கு அவர் குடும் பம் மட்டும் அல்ல; லோக் சபைத் தொகு தியே ஆர்ப்பரித்து ஆதரவாக எழுந்திருக் கிறது.

போஃபர்ஸ் ஊழல், ஜெர்மன் நீர் மூழ் கிக் கப்பல்கள் பேரம் முதலியவை பார்லி மெண்டில் கிளம்பியதிலிருந்து வி. பி. சிங் உத்திரப் பிரதேசத்தைச் சுற்றி வந்து, அந்த ஊழல்களின் பரிமாணத்தை விளக்கி வந் திருக்கிறார். இன்று அந்த ஊழல்கள் என்ன என்று மக்களுக்குத் தெரியும். இன்று அம்மாநிலத்தில் பொதுத் தேர்தல் நடந் தால் காங்கிரஸ் கட்சி குப்பைத் தொட்டி யில் இருக்கும் என்பது பற்றிச் சந்தேக மில்லை.

அலகாபாத் தொகுதியில் சென்ற பொதுத் தேர்தலில் அமிதாப்பச்சன் வெற்றி பெற் றார் என்றால் அது இந்திரா காந்தி கொலை யுண்டதையடுத்து நிகழ்ந்த அனுதாப வெற்றியாகும். அமிதாப்பின் விசிறிகள் கங் கைக்குத் தீ வைத்து விடப் போவதில்லை. அவர்களால் முடியாது. தமிழ் நாட்டில் உள்ள எம்.ஜி.ஆர். மன்றங்கள் போல் அவற்றுக்கு அரசியல் பின்னணி கிடை யாது. இது வி. பி. சிங்குக்குத் தெரியும்.

அமிதாப்பச்சனுக்குப் பாதுகாப்புத் தரு வதற்காகப் பிரதமர் ராஜீவ், நிதிப் பொறுப் பிலிருந்து வி. பி. சிங்கை விடுவித்து பாது காப்பு அமைச்சுக்கு மாற்றினார். அப்போது எதிர்க் கட்சித் தலைவர்கள் அந்த நட வடிக்கையை வி. பி. சிங் எதிர்க்க வேண் டும் என்று சொன்னார்கள். ஆனால் பாது காப்பு அமைச்சகத்திலும் மண்டிக் கிடந்த ஊழல்களை அவர் வெளிக் கொண்டு வர ஆரம்பித்ததும் எதிர்க் கட்சித் தலைவர்கள் அவருடைய பணி தொடரட்டும் என்று வாழ்த்தலானார்கள். சீக்கிரமே வி. பி. சிங் பாதுகாப்பு அமைச்சகத்திலிருந்து மட்டு மல்ல; மந்திரி சபையிலிருந்தே விலக நேர்ந் ததில் வியப்பில்லை.



CLARION/B/GS/49/173 TAM

விஸ்வநாத் பிரதாப் சிங் வெளியேறியதும், அவர் கூட அனுப்பப்பட்டவர்கள் சாதாரணப் புள்ளிகள் அல்லர். அருண் நேரு அரசியலில் ஊறிய அழுத்தமான புள்ளி. வித்யாசரண் சுக்லா மத்திய அரசில் பல்வேறு துறைகளில் மந்திரி பதவிகளைப் பொறுப்புடன் வகித்தவர். ஆரிஃப் முகமத் கான் முஸ்லிம் பெண்களின் நலன் கருதித் தம் மந்திரி பதவியை உதறியெறிந்தவர். ராம் தன் வெகுகாலமாகவே இளம் துருக்கியர் அணியில் செயல்பட்டவர். ஆகவே இவர்கள் துவக்கிய ஜன மோர்ச்சா படிப்படியாக பலம் பெற்றது.

மத்திய அரசுக்குள் இருந்தவர் — திறமைக்குப் பெயர் பெற்றவர். ஆகையால் வி. பி. சிங்கை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். அவரை மையமாக வைத்துக் கொண்டு ஒரு புதிய கட்சி ஆரம்பிக்க வேண்டும் என்று கூடச் சொன்னார்கள். ஆனால், சுதந்திரமான சிந்தனையுள்ள சிங் ஜனமோர்ச்சா ஓர் இயக்கம்; அது மற்ற கட்சிகளை ஒன்று சேர்க்க வேண்டும் என்று சொல்லி விட்டார். மெச்சத் தகுந்த தீர்மானம் இது. இதனால் இன்று கம்யூனிஸ்ட்டுகள் உள்பட பலரும் அவரை ஆதரிக்க வழி பிறந்திருக்கிறது. வேட்பு மனுத் தாக்கல் தினத்தன்று சுமார் முந்நூறு எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் அவருடன் ஊர்வலமாகச் சென்றார்கள் என்றால் அது அரசியலில் ஓர் ஆச்சர்யமான திருப்பமே.

அலகாபாத் லோக சபை உபதேர்தல் ஒரு பெரிய அரசியல் உண்மையை நிரூபிக்கும். அதாவது எதிர்க்கட்சிகள் இணைந்து செயல்பட்டால், காங்கிரஸுக்கு எதிராக நாடெங்கும் எல்லாத் தொகுதிகளிலும் ஒரே வேட்பாளர் என்கிற நிலை ஏற்பட்டால் காங்கிரஸ் தனக்குத்தான் நாட்டை ஆள நிரந்தரப் பட்டா வழங்கப்பட்டு இருக்கிறது என்ற நினைப்பை விட்டுவிடும். வெற்றுக் கோஷங்களுக்கு இடம் இருக்காது. எந்தெந்த ஊழல்கள் அம்பலமானதோ அவையெல்லாம் ஏவுகணைகளைப் போல் சீறும். மக்கள் மன்றம் காங்கிரஸை எதிர்த்துத் தீர்ப்பு வழங்கும் போது, எந்தக் கமிட்டி அறிக்கையும் வந்து அவர்களைக் காப்பாற்றாது.

இதை எழுதும்பொழுது வி. பி. சிங்குக்கு எதிரி சுனில் சாஸ்திரி என்பது தெளிவாகி விட்டது. காலஞ்சென்ற பிரதமர் சாஸ்திரிக்கு இந்நாட்டில் நிலவும் புகழ் கொஞ்ச நஞ்சமல்ல. அவருடைய புதல்வர் இளைஞர். இவ்வளவு சிறியவருடன் மோதுவதை சிங் விரும்பவில்லை. ஆனாலும் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பாடம் கற்பிக்க எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. அதனால் போட்டியிட ஒப்புக்கொண்டிருக்கிறார். வீரபத்திர சிங், முதல்வர் என்ற ஹோதாவில் மாநில அரசின் வசதிகளைக் கட்டாயம் துஷ்பிரயோகம் செய்வார். உத்திரப்பிரதேசம், பீஹார் மாநிலங்களில் வாக்குப் பெட்டிகளையே அப்புறப்படுத்துவது வெகு சகஜம். ஆனால் இன்று உள்ள சூழ்நிலையில் பொது மக்களும் நேர்மைக்காக உழைக்கும் இளைஞர்களும் எப்பேர்ப்பட்ட குண்டர்களின் கூட்டுச் சதியையும் முறியடிப்பார்கள். ஆதலால் இன்று, காங்கிரஸின் கவலையெல்லாம், தோற்றாலும், கேவலமாகத் தோற்கக் கூடாதே என்பதுதான்.

அரசியலில் நேர்மைக்கும் பொதுஜன அபிப்பிராயத்துக்கும் இடம் உண்டு என்பதை இந்தத் தேர்தலின் முடிவில் பிரதமர் ராஜீவ் உணர்வார். மத்திய அரசு இத்தாலியக் கம்பெனிகளின் ஆணைக்குட்பட்ட அமைப்பு அல்ல என்பதை சிங் விளக்கிக் காட்டுவார். அந்தமான், லட்சத்தீவுகள் போன்ற உல்லாச விடுமுறைகளுக்குக் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்யப்பட்டால் அதைத் தட்டிக் கேட்கலாம் என்று மக்கள் உணர்வார்கள். பார்க்கப் போனால் லோக் சபைத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு குறிப்பிட்ட பிரச்னையை வைத்து எதிர்க்கட்சிகள் ஜெயிக்கலாம். தேவை, ஒற்றுமை மட்டுமே!

— கே. ஸ்ரீனிவாஸன்

வி. பி. சிங் வண்ணப்படம்: சுபா ரவிசங்கர்

அவசரம்... அவசரம்... குதியுங்கள்...


"விமானத்தில் கோளாறு: கீழே விழுந்து நொறுங்கப் போகிறது' என்றார் பைலட். பாரா சூட் மாட்டிக் கொண்டார். 'என்னைப் பின்பற்றுங்கள் ஆனால் ஒரு சிக்கல். நீங்கள் ஐந்து பேர்; பாக்கி இருப்பது நாலு பாராசூட்கள்தான். குட் லக்.' பைலட் விமானத்திலிருந்து குதித்து விட்டார்.

அவரைத் தொடர்ந்து விஞ்ஞானி, 'என்னை விட்டால் 21ம் நூற்றாண்டின் கதி என்னாவது' என்று கேட்டுக் கொண்டே ஒரு பாராசூட்டை எடுத்து மாட்டிக் கொண்டார். குதித்தார். அடுத்து ராணுவ அதிகாரி ஒரு கணப்பிலேயே மற்றவர்கள் அடங்கச் செய்து பாராசூட் அணிந்து பாய்ந்தார். மூன்றாவதாக ஓர் அரசியல்வாதி 'என் சேவை நாட்டுக்குத் தேவை' என்று கூறியபடி ஒரு பாராசூட்டைத் தரித்தார். பாய்ந்தார்.

பாக்கி இருந்தவர்கள் ஒரு பாதிரியும் மாணவனுமே. பாதிரி, 'நீ இளைஞன். எதிர்காலம் உன் கையில். எனவே பாக்கியிருக்கும் ஒரு பாராசூட்டை நீ உபயோகி' என்றார்.

அமைதியாக மாணவன் சொன்னான்: 'நம் இருவருக்குமே இரு பாராசூட்கள் பாக்கியுள்ளன. அரசியல்வாதி அவசரத்தில் முதுகில் அணிந்தது பாராசூட்டை அல்ல; என் ஸ்கூல் பையை!'

— விருதை மணி



கற்பனைச் சுகங்கள்......

'நான் சர்வாதிகாரியாக இருந்தால் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் வசூலிக்கப்படும் 'டொனேஷன்' களை ஒழித்துக் கட்டி விடுவேன்...' என்று சென்னைக்கு வந்திருந்த ஆர். வெங்கடராமன் பேசினார். நடக்கவா போகிறது? கற்பனையிலாவது கண்டு மகிழ்வோமே!

எல்லாவற்றையும் விட மேலான பலம் ஆன்ம பலம்










- அறிவுக்கு தெய்வம் விநாயகர்
- ஆற்றலுக்குத் தெய்வம் சுப்ரமணியர்
- வித்தைக்குத் தெய்வம் வாணி
- செல்வத்துக்கு தெய்வம் லக்ஷ்மி.



இவர்களுககு எல்லாம் தெய்வமாக இருப்பவர் பரம்பொருள் அல்லது மஹாவிஷ்ணு.

செல்வமும் அறிவும், ஆற்றலும் நமக்குப் பலத்தைத் தருகின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலான பலம் ஆன்ம பலம் ஆகும். எனவே ஆன்ம பலத்தைத்தரும் மஹாவிஷ்ணு ஈஸ்வரருக்கும் ஈஸ்வரராக இருக்கின்றார்.

தர்மச்சக்கரம்

ஆன்ம பலம் பெற்ற நல்லோருக்கு கிராண்ட் ஸ்வீட் வாங்கி விநியோகியுங்கள்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர் முள்ளுத் தேன் குழல், தேன் குழல், அதிரசம், திரட்டுப்பால், அப்பம், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு, காந்தி நகர்,
அடையாறு, சென்னை-600 020. போன்: 412557

இறுக மூடிய கதவுகள்!

ஆர். சூடாமணி

பார்வை மங்கியது. எதிரில் கிடந்த அம்மாவின் முகம் பனிப்படலத்தினூடே மொத்தையாய்த் தெளிவின்றித் தெரிந்தது. கண் டாக்டர், மருந்து போட்டுக் கண் பாப்பாக்களை விரித்து வைத்தால் இருக்குமே, அந்த மாதிரி.

கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

இந்தக் கண்ணீர் ஏதோ நிமோனியாவில் காய்ச்சல் தகிக்க ஆக்ஸிஜன் குழாயினால் மூச்சு விட்டுக்கொண்டு நினைவின்றிப் படுத்திருக்கும் அம்மாவுக்காக மட்டும்தானா?

எனக்காகவும்தான்.

மற்றவருக்காக அழும்போது அந்த அழுகை பெரும்பாலும் நமக்காகவேதான் இருக்கிறது. நாம் அவருக்குச் செய்யத் தவறிய கடமைகளுக்காக, அவரிடம் காட்டாத அனுதாபத்துக்காக, அவரைப் புரிந்து கொள்ளாமல் போனதற்காக.

அம்மாவுக்கு மாநிறம். இப்போது காய்ச்சல் வேகத்தில் கறுப்பாகவே தெரிந்தாள். கரிய முகத்தில் ஜுரப் பளபளப்பு. கரிய முடியில் தலை சாமான் வைத்துக் கட்டியது போல், வகிட்டையொட்டி நெற்றியின் மேல் விளிம்பில் இருபுறமும் வெள்ளை முடி. திலகமில்லாத வெறும் நெற்றி. எனக்கு நினைவு தெரிந்த நாளாக வெறுமையாய் இருந்து வரும் நெற்றி.

டாக்டர் இனி அதிக நம்பிக்கை இல்லை என்று சொல்லி விட்டார். அதாவது, ''பார்ப்போம் மிஸ்டர் கேசவன், நம்மாலான முயற்சியெல்லாம் செய்யறோம். காட் இஸ் க்ரேட்'' என்று சொன்னார்.

அறைக் கதவிடை சலனம். வேகமாய்த் திரும்பிப் பார்த்தேன். என் மனைவிதான். என் முகம் விழுந்துவிட்டதா? என் ஏமாற்றத்தை அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

''யாரை எதிர்பார்க்கிறீங்க?''

''ம்? யாரையுமில்லே.''

''இந்தநேரத்துக்கு நான்தான் வருவேன்னு உங்களுக்குத் தெரியும்.''

''ஆமாம்.''

''பின்னே?''

''பின்னே? ஒண்ணுமில்லே.''

''நாலு நாளா கவனிக்கறேன். வீட்டிலேயும் சரி, இங்கேயும் சரி, அடிக்கடி வாசல் பக்கமே பார்த்துக்கிட்டிருக்கீங்க. யாரை எதிர்பார்க்கறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?''

அவள் குரலில் சற்று சூடு உறைத்தது. நியாயம் இருக்கும் இடத்தில் சூடு அவசியம் இருக்கும். அன்பான மனைவி. முகம்கோணாமல் என் தாயைக் கவனித்துக் கொள்பவள். நான் யாரை எதிர்பார்க்கிறேன், யாருக்கு அம்மா உடல்நிலை பற்றி எழுதி அனுப்பியிருக்கிறேன் என்று அறிந்து கொள்ள அவளுக்கு உரிமை இல்லையா என்ன? ஆனால் அது அம்மாவின் உரிமையில் குறுக்கிடுவதாயிருந்தால்? யாருக்கும் தம் அந்தரங்கத்துக்கான உரிமை உண்டல்லவா?

''முக்கியப்பட்ட யாருமில்லை நீலா'' என்று பொய் சொன்னேன்.

''இருந்தாலும் எனக்குச் சொல்றது! யாரது?''

''எங்களோட ஒரு பழங்காலக் குடும்ப நண்பர். அப்பாவுக்கு ரொம்ப வேண்டியவர். சொந்தம்னு அதிகமா யாருமில்லாத எங்களுக்கு அவரை ஒரு சொந்தக்காரராய் நினைச்சு, அம்மா முடியாமல் படுத்திருக்கிறதைத் தெரிவிச்சிருக்கேன். அவ்வளவுதான்'' என்றேன், அதில் அதிக சிரத்தை இல்லாதவன் போல்.

மிஸ்டர் செல்லப்பா இந்த ஊரில் இருந்ததே எனக்குத் தற்செயலாய்ச் சென்ற மாதம் தான் தெரிய வந்திருந்தது. அப்போதிலிருந்தே அம்மாவிடம் சொல்லலாமா என்ற எண்ணம். அவரை வீட்டுக்கு அழைக்கவேண்டும் என்ற துடிப்பு. என் நினைவில் தெரிந்த வாலிப செல்லப்பா வெளியூருக்கு மாற்றலாகிச் சென்று இப்போது வயோதிகச் செல்லப்பா தம் இலாகாவின் தலைவராய்ச் சென்னைக்கே வந்து சேர்ந்திருக்கிறார். முடி பஞ்சாய் நரைத்திருக்குமோ? வழுக்கை? கைத்தடி? சேசே, அவருக்கு ஐம்பத்தைந்து ஐம்பத்தாறு வயதுக்கு மேல் இருக்காதே. நிமிர்ந்த உடலும் கறுகறுப்பான நடமாட்டங்களும் கருமை மாறாத தலை முடியுமாய்

நாற்பது என்று மதிக்கத்தக்க எத்தனையோ ஐம்பத்தைந்துகளை நான் பார்த்ததில்லையா என்ன? இது ஓர் அசட்டுத்தனம், நமக்கு முந்தைய தலைமுறை என்றதுமே தொண்டுக் கிழமாய்க் கற்பனை செய்து கொள்வது. குழந்தைக் கண்களுக்குத்தான் முப்பது என்றாலே முதுமை. என் வயதிலுமா?

அவரை நான் வீட்டுக்கு அழைக்கவில்லை. அம்மாவிடம் சொல்லக் கூட இல்லை. சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டே இருக்கையில் அம்மா கடுமையான நிமோனியாவில் படுத்துவிட்டாள்.

அம்மா முகத்தைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். மனம் உணரும் உணர்ச்சிகளையெல்லாம் பேச நாவுக்குத் திறமை இல்லை. ஆனால் கண்களுக்கு உண்டு. உணர்ச்சிகள் வெள்ளமிட்டு வரும்போது கண்களால் மட்டும்தான் பேச முடிகிறது. புலன் ஆற்றல் ஒன்று இடம் மாறிப் போகிறது.

"என்ன அப்படியே உட்கார்ந்திருக்கீங்க? எழுந்து வீட்டுக்குக் கிளம்புங்க. நான்தான் வந்துட்டேனே."

நான் மெள்ள எழுந்து கொண்டேன்.

"அப்பப்பா! இன்னிக்கு அந்த ரெண்டு வாலுங்களையும் ஸ்கூலுக்கு அனுப்பறதுக்குள் போதும் போதும்னு ஆயிடிச்சு. 'அப்பா லீவு போட்டிருக்காரே, நாங்க மட்டும் போடக் கூடாதோ?'ன்னு ஒரே ரகளை. சாயங்காலம் அதுங்க வர்றப்பக் கொஞ்சம் அதட்டி கொஞ்சம் நயமாப் புத்தி சொல்லி, டிபன் சாப்பிட்டுட்டுப் பாடம் படிக்கச் சொல்லுங்க" என்றாள் நீலா.

"ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கணும்னு அருண் நேத்தே சொன்னான். சாயங்காலம் அழைச்சிட்டு வரட்டுமா? பார்த்துட்டு உன்கூட வீட்டுக்குத் திரும்பிடட்டுமே?"

அவள் கணநேரம் யோசித்தாள். "எதுக்கு... இப்ப எதுக்குங்க? சின்னப் பையன். இந்த ஆக்ஸிஜன் குழாயையெல்லாம் பார்த்துப் பயந்துப்பான். நாலு நாள் போகட்டுமே. அதுக்குள்ள அத்தைக்கும் கொஞ்சம் குணம் தெரிஞ்சு டாக்டர் ஆக்ஸிஜனை எடுத்துடலாமில்லையா?"

ஆக்ஸிஜனை எடுத்துவிடலாம் என்பது உண்மை. குணம் தெரிவதால்தானா? இன்னொரு சாத்தியக்கூறு பற்றி நாங்கள் பேசிக் கொள்ளவில்லை. எங்கள் மௌனத்துள் அது ஆயிரம் நாவுகளோடு பதுங்கியிருந்தது.

நீலா பகலுணவு சாப்பிட்டாகி விட்டது. கையில் கொண்டு வந்திருந்த புத்தகத்தையும் பிற்பகல் காப்பி இருந்த பிளாஸ்கையும் மூலையிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டுக் கட்டிலை நெருங்கிக் குனிந்து, என் தாயின் பிரக்ஞையற்ற வடிவைச் சில கணங்கள் உற்றுப் பார்த்தாள். பிறகு என் முகம் நோக்கி நிமிர்ந்தாள். நோயாளியின் நிலையில் எவ்வித மாற்றமுமில்லை. எங்கள் கண்கள் சந்தித்தபோது பேச இவ்வளவுதான் விஷயம்.

"அப்ப, நான் கிளம்பறேன் நீலா."

"ம். ஸிஸ்டர் வந்து இன்ஜெக்ஷன் போட்டுட்டாங்க, இல்லே?"

"ஆச்சு. டாக்டர் பன்னிரண்டு மணிக்குத்தான் வருவாராம்."

"நான் பார்த்துக்கறேன்."

தெருவில் இறங்கினேன். முற்பகல் வெயில் கள்ளென்று உறைத்தது. நான் வீடு வந்து சேர்ந்தபோது மணி பத்தரை. ஆஸ்பத்திரியிலிருந்து நடக்கும் தூரத்தில்தான் வீடு. குளித்தேன். 'ஹாட் ஃப்ளாஸ்கில் நீலா எனக்கு வைத்திருந்த உணவை உண்டுவிட்டு ஆயாசத்துடன் படுத்துக் கொண்டேன். ஆயாசம் வெயிலினால். ஐந்து நாட்களாய் ஆபீசுக்கு லீவு போட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்குமாய் அலைவதனால். அம்மாவைப் பற்றிய கவலையினால். மனப் பாரத்தால்.

இரவு முடிய ஆஸ்பத்திரியில் அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கண் விழித்திருந்ததால் இப்போது கண்கள் எரிந்தன. மூடிக் கொண்டேன். விட்டுவிட்டுத் தூக்கம். அதில் கனவென்று சொல்ல முடியாத தாறுமாறான பிம்பங்கள். அமுங்கி அமுங்கி வெளிவரும் அம்மாவின் முகம். கூட ஓர் எட்டு வயதுச் சிறுவன். ஒருவிநாடி கண்களைத் திறந்து விட்டு மூடினேன். மறுபடியும் தூக்கமா? இப்போது வேறொரு முகம். சிவந்த, நீள வாட்டு முகம். இதமான புன்சிரிப்பு. பிரகாசக் கண்களில் ஆழமான பார்வை. குருட்டை கிராப். நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அந்த முகமும் நழுவியது. திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன்.

புரண்டு படுத்தேன். மறுபடியும் அரைத் தூக்க நிலை. கண்களுள் மீண்டும் இளம் அம்மாவின் முகம். அதில் ஒருவித ஆவல். உதடுகள் ஏதோ சொல்கின்றன. சிறுவனின் கண்களில் அதிர்ச்சி. மறுப்புக் குறியில் தலை இடவலமாய் அசைகிறது. மறுபடியும் விழித்துக் கொண்டேன். உடல் முழுவதும் வியர்வை. ஆழ்ந்த, தொடர்ச்சியான உறக்கமில்லாததால் ஓய்வு எடுத்த உணர்வே இல்லை. எழுந்து உட்கார்ந்து கடிகாரத்தைப் பார்த்தேன். பிற்பகல் மூன்று மணி. போய் முகம் கழுவிக் கொண்டு காஸ் அடுப்பை ஏற்றிப் பாலைக் காய்ச்சி உப்புமா செய்தேன்.

வாசல் மணி ஒலிப்பது கேட்டது. ஓடிப் போய்க் கதவைத் திறந்தேன். தபால்காரர். ஒரு நண்பர் வீட்டுத் திருமணத்துக்கு வந்திருந்த அழைப்பிதழைக் கொடுத்துவிட்டுப் போனார்.

நான் எதிர்பார்த்தவர் வரவே மாட்டாரா? அம்மாவின் உயிர் பிரியுமுன் அவள் முகத்தையாவது அவர் பார்க்கட்டும் என்று எண்ணி அவள் உடல்நிலை பற்றியும் மற்ற விவரங்களையும் அவருக்கு எழுதியிருந்தேனே, அந்த அற்பப் பணி செய்வதுகூட எனக்குக் கொடுத்துவைக்கவில்லையா? நேரில் போய்ச்

சொல்லலாமென்றால் காலையும் மாலையும் அவர் வீட்டில் இருக்கும் போது நான் ஆஸ் பத்திரியில் அம்மாவுடன் இருக்கிறேன். பகல் முடிய எனக்கு நேரம் இருக்கும் போது அவர் அலுவலகம் போயிருப்பார். நீலா வைப் போய்ச் சொல்லச் சொல்லலாமென் றால் அவளுக்கு இவ்விஷயத்தின் முக்கியத் துவம் தெரியாது. அதை அவளுக்கு விளக்க எனக்குத் தயக்கம்தான். இன்று மாலை ஆஸ் பத்திரிக்குப் போனபின் சிறிது நேரம் பணிப் பெண் எவளையாவது அறைக்குள்ளேயே இருக்கச் சொல்லிவிட்டு நானே போய் அவரிடம் சொல்லி விட்டு வந்தால் என்ன? டாக்டரின் முகமோ, 'இன்னும் அதிக கால மில்லை' என்று சொல்லிவிட்டது. இன்னும் இரண்டு நாட்கள் ஞாயிற்றுக்கிழமைக்காகக் காத்திருந்தால் காலம் கடந்து விடலாம்.

மாலை நாலரை மணிக்கு என் குழந்தை கள் பத்மாவும் அருணும் பள்ளியிலிருந்து திரும்பினார்கள். அவர்களுக்குச் சிற்றுண் டியும் காப்பியும் கொடுத்துவிட்டு நீலா வுக்குத் தனியாய் எடுத்து வைத்துவிட்டு நானும் உட்கொண்டேன்.

''பாட்டி இன்னிக்கு எப்படிப்பா இருக் காங்க?'' என்றான் அருண்.

''அப்படியேதான். புதுசா ஒண்ணு மில்லே.''

''நான் உங்ககூட ஆஸ்பத்திரிக்கு வந்து பாட்டியைப் பார்க்கறேம்ப்பா!''

''அண்ணா வந்தா நானும் வருவேன்'' என்றாள் பத்மா.

''ரெண்டு பேருமே இப்ப வேணாண்டா கண்ணு.'' பத்மாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன். ''ஒருநாள் ரெண்டு நாள் போகட்டும். பாட்டிக்கு எப்படி இருக் குன்னு பார்த்துக்கிட்டு நானே உங்களை அழைச்சுக்கிட்டுப் போறேன்.''

''இப்ப கொஞ்ச நேரத்தில் நீங்க ஆஸ் பத்திரிக்குப் போயிடுவீங்க. நாங்க ரெண்டு பேரும் தனியாத்தானே இருக்க வேண்டி யிருக்குது?''

''தனி என்ன? ஒரு அரை மணி நேரம் பக்கத்து வீட்டு ஆன்ட்டிகிட்டப் போய் இருக்கப் போறீங்க. அரை மணியில் அம்மா ஆஸ்பத்திரியிலேர்ந்து திரும்பி உங்களை வந்து அழைச்சுக்கிட்டு இங்கே வந்துடப் போறாங்க.

''நீங்க எப்பப்பா மறுபடியும் ராத்திரியில வீட்டிலே இருப்பீங்க? எனக்குக் கதை செ லுவீங்க?'' என்று என்மேல் நெருங்கி ஒன்றிக் கொண்டாள் பத்மா. அவள் தலை முடியைக் கோதி முத்தமிட்டேன்.

''பாட்டி ஆஸ்பத்திரியில் இருக்கிற வரைக்கும் நான் அவங்க கூடத் துணைக்கு அங்கே இருக்க வேணாமா கண்ணு? சொந்த மனுஷங்க யாரானும் கூடவே



இருக்கணும்னு டாக்டருங்க சொல்றாங் களே. அதனாலதானே அம்மாவும் நானும் மாத்தி மாத்திப் பாட்டியோடு இருக் கோம்.''

''ஊஹூம், நீங்க இங்கேதான் இருக் கணும். ஆஸ்பத்திரிக்குப் போகக் கூடாது...''

அழத் தொடங்கிய குழந்தையைத் தேற் றிச் சமாதானப்படுத்தினேன். "அழக் கூடா தும்மா கண்ணு. சமர்த்தில்ல? ராத்திரியில் பாட்டி கண் விழிச்சுப் பார்த்து 'ஐயோ, நம்ம மகன் இங்கே இல்லையே' அப்ப டின்னு வருத்தப்படக் கூடாதில்லையா? பாட்டி வீட்டுக்கு வந்ததுமே நானும் வந்துடு வேனே! அப்புறம் ராத்திரியிலேயும் வீட்டில் தான் இருப்பேன், பத்மாவுக்கு ஒவ்வொரு ராத்திரியும் புதுப் புதுக் கதையெல்லாம் சொல்லுவேன்....''

இந்தக் குழந்தை சொல்வதைக் கேட்டு நான் ஆஸ்பத்திரிக்குப் போகாமலே இருந் தால் எவ்வளவு தவறாக, அநியாயமாக இருக்கும்! குழந்தைகளுக்கு என்ன தெரியும்? அவர்களுடைய பேச்சில் எதைப் பெரிதாய் எடுத்துக் கொண்டு மதிப்பளிக்க வேண்டும் என்னும் அறிவும் தெளிவும் பெரியவர் களுக்கல்லவா இருக்க வேண்டும்?

அம்மா ஏன் அந்த எட்டு வயதுச் சிறு வனின் பேச்சைக் கேட்டாள்?

மறுபடியும் மாலையில் ஆஸ்பத்திரி, அம்மாவின் பிரக்ஞையற்ற உருவம்.

''டாக்டர் வந்தாரா நீலா?''

''ம்.''

''புதுசா ஏதானும் சொன்னாரா?''

''ஊஹூம். மருந்துகள், இன்ஜெக்ஷன், ஆக்ஸிஜன், காட் இஸ் க்ரேட் எல்லாமே வழக்கம் போல்.''

சற்றுத் தயங்கி விட்டு ''அவர் வந்திருந் தாரா? அதான், நான் சொல்லியனுப்பி னேன்னு சொன்னேனே, அந்தாளு'' என் றேன்.

''யாரும் வரல்லே'' என்றவள் என்னைக் கூர்ந்து பார்த்தாள். 'முக்கியப்பட்டவ ரில்லை' என்கிற ஒருவருக்காகவா இப்படிப் பறக்கிறாய்? இதை என்னை நம்பச் சொல் கிறாயா?' என்று கேட்கும் பார்வை.

நான் தலையைத் திருப்பிக் கொண்டேன். நீலாவுக்குச் சொல்ல வேண்டியதுதான். ஆனால் அவளுக்குச் சம்பிரதாய மனம். அம்மாவைப் பற்றிக் குறைவாக நினைத்து விட்டால்?

''அப்போ நான் வீட்டுக்குப் போகவா?''

''ம், கிளம்பு. குழந்தைங்க எதிர்பார்த்துக் கிட்டிருக்கும்.''

அவள் போன பின் அம்மாவின் பக்கத் தில் உட்கார்ந்து கொண்டேன்.

அம்மா சலனமின்றிப் படுத்திருந்தாள். செயற்கை சுவாசத்தில் நோயின் முனகல் கள் ஏதுமில்லை. மார்பு சீராய் ஏறி இறங் கியது. ஒருகால் இந்த மயக்கத்தின் திரைக் குப் பின்னே, ஆழ் மனத்தில், வேறேதோ ஒரு காலத்தில் இப்போது வாழ்ந்து கொண் டிருக்கிறாளா?

நெற்றியின் கோடுகள். வாழ்வின் தடங் கள். அதில் ஒரு தடத்தில் நிற்கும் அம்மா. இளைய அம்மா. பயம் கலந்த ஒரு சந்தோ ஷத்தில் உருவமே வேறாகி ஒளியால் நிறைந் தது போன்ற அம்மா. அவள் அணைப்பி னுள் எட்டு வயதுப் பையன்.

'செல்லப்பா அங்க்கிளை உனக்குப் பிடிச்சிருக்குதா கேசவா?'

'ஓ, ரொம்பப் பிடிக்குமே!'

'எனக்கு.... எனக்குக் கூட அவரைப் பிடிக்குதுடா கண்ணா!'

'நல்ல அங்க்கிள் அவரு.'

'அவரை... அந்த நல்ல அங்க்கிளை... உனக்கு அப்பாவாய்ப் பண்ணட்டுமா?'

பையன் முகத்தில் ஒன்றும் புரியாத வெற் றுப் பார்வை. அது ஒரு தடை என்பது போல், அம்மாவின் முகத்தில் கணநேரத் தடுமாற்றம்.

'என்னம்மா?'

'அவரை.. நான் கல்யாணம் செய்துக் கட்டுமா?'

இப்போது அதிர்ச்சியே வடிவாய் உரு மாறும் மகன்.

'ஊஹூம், கூடாது, அது தப்பு!'

'உனக்கு ஒரு அப்பா கிடைப்பார்டா கண்ணா!'

'என் அப்பா செத்துப் போய்ட்டார். நீ என் அம்மா, அம்மால்லாம் தப்புச் செய்யக் கூடாது....'

மறுப்பில் தலையாட்டும் மகன்.


அந்தத் தலையாட்டலில் ஒரு வாழ்க்கைக் கதவை இறுக மூடிப் பூட்டி விட்டதை அந்தச் சிறுவன் அறிய மாட்டான். நான் தான் அதை அறிந்து, உணர்ந்து, நொந்து, வெட்கி, அதற்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தேன்.

குழந்தைகளின் உலகம் சுயத்தில் தொடங் கிச் சுயத்தில் முடிகிறது. தம்முடன் சம்பந் தப்படுத்தித்தான் எதையும் அவர்களால் பார்க்க முடியும். என் அம்மா. என் அப்பா. என் தம்பி. என் நண்பன். என் டீச்சர்.

மனிதர்களைத் தனி மனிதர்களாய்ப் பார்க்கும் ஆற்றல் ஒரு குழந்தைக்கு எப்படிச் சாத்தியமாகும்? அவனைப் பொறுத்தவரை அம்மா ஒரு பெரியவள், தன் அம்மா, தன் னைப் பார்த்துக் கொள்கிறவள், தன் பாது காப்பான பின்னணி.

அம்மாவை முப்பது வயதான வாலிப மங்கையாக, எதிர்பார்ப்புகள் நிறைந்தவ ளாக, வருங்காலம் தன் முன் நீண்டு கிடக் க்க் காண்பவளாக, இனம் கண்டு கொள் கிற முதிர்ச்சியும் விலகி நின்று வெறும் பார்வையாளராய்ப் பார்க்கும் தெளிந்த கண்ணோட்டமும் ஒரு குழந்தைக்கு எப்படி வரும்?

அந்தக் குழந்தையின் பேச்சை நீ ஏனம்மா கேட்டாய்? தன் அம்மா என்பதற்கு மேல் நினைக்கத் தெரியாத குழந்தையின் பேச்சை



"இவனுக்கு நகம் கடிக்கிற கெட்ட பழக்கம் இருக்கு, டாக்டர்!"

"இந்தப் பழக்கம் நிறைய பேருகிட்டே இருக்கு."

"அதுக்கில்ல டாக்டர், கைநகம் தீர்ந்ததும் கால் நகத்தைக் கடிக்கிறான். அதுவும் தீர்ந்துட்டா மத்த வங்க நகத்தையும் கடிச்சிடறான்!"

— சேத்தூர் அன்பழகன்.

ஏன் கேட்டாய்? விதவை மறுமணம் தவறு என்று கருதும் ஒரு மரபுச் சமுதாயத்தின் வார்ப்படமான குழந்தையின் பேச்சை ஏன் கேட்டாய்? முதலில், ஒரு குழந்தையிடம் யோசனை கேட்பதே தவறில்லையா? குழந்தையைக் குழந்தையாகவே வைத்து விட்டு உன் இதயம் காட்டிய வழியில் நீ சென்றிருந்தால் அந்தக் குழந்தை முதலில் முரண்டியிருக்கலாம், ஆனால் நான் புரிந்து கொண்டிருப்பேன், மகிழ்ந்திருப்பேன். இரண்டு பேரின் சந்தோஷ வாய்ப்பைக் கெடுத்து விட்ட குற்றச் சுமையை நெஞ்சில் தாங்கி இப்படி வருஷக் கணக்காய்ப் பரிதவித்துக் கொண்டிருக்க மாட்டேன்.

எல்லாம் வேறு விதமாய் நடந்திருந்தால்!

அம்மாவின் நெற்றியில் குங்குமம், சிரிப்பில் சந்தோஷம், முகத்தில் பிரகாசம். முதுமையும் மரணமும் யாருக்கும் நேர்வது தான். ஆனால் தனிமை இருந்திருக்காது. நாளுக்கு நாள் வளர்ந்து பெரியவனாகித் தன் வாழ்வை நோக்கிக் கிளை பிரிந்து போகும் மகன் — அடுத்த தலைமுறையினன் — எத்தனை பாசமிருந்தாலும் எந்த அளவுக்குத் தோழனாயிருக்க முடியும் பெற்றவளுக்கு?

அம்மாவின் தலைமுடியைத் தடவிக் கொடுத்தேன். கன்னத்தை மெல்லத் தீண்டினேன். கையைப் பற்றினேன். எதற்குமே அவளிடம் எதிர் விளைவு இல்லை. உடம்பில் அசைவில்லை.

அம்மா, அம்மா. உன்னை எப்படி எட்டுவேன்? உன்னுடன் நான் எத்தனையோ பேச வேண்டும். எனினும் என் நாவு புரளவில்லை. நான் பேசினாலும் உனக்குக் கேட்காது. ஆனால் உன் மனம் என் மனத்தை உணர்கிறதா? என் அன்பை, என் துயரத்தை, என் கழிவிரக்கத்தைப் பேச்சின்றியே புரிந்து கொள்கிறாயா? இப்போது உடல் குலுங்க நான் மௌனமாய்க் கொட்டும் இந்தக் கண்ணீர் உனக்காக மட்டுமல்ல, எனக்காகவும்தான் என்பதை நீ உணர்கிறாயா அம்மா? உணர்ந்து என்னை மன்னிக்கிறாயா?

நெடு நேரம் ஆகியிருக்குமென்று நினைக்கிறேன். தலை நிமிர்ந்து மூக்கை உறிஞ்சிக் கண்களைத் துடைத்துக் கொண்டேன். குளியலறைக்குச் சென்று வாளியிலிருந்து சிறிது நீரை முகத்தில் இறைத்துக் கழுவிக் கொண்டேன்.

மணி எட்டை நெருங்கியிருந்தது. ஒரு நர்ஸை அழைத்து அம்மா பக்கத்தில் அமர்த்தி விட்டு மிஸ்டர் செல்லப்பாவின் வீட்டுக்கே நான் போய்...

எண்ணம் முடியவில்லை. எதிரே, அறைக் கதவுக்கு வெளியே, நின்றிருந்தவரை என் கண்கள் கண்டு கொண்டன.

சிவந்த நீளவாட்டு முகத்தில் இப்போது சில சுருக்கங்கள். சுருள் முடியில் அங்கங்கே நரை. எனினும் அந்த முகத்தின் நேர்த்தியை, இதமான புன்சிரிப்பை, ஒளிமிக்க விழிகளை, எட்டு வயதுப் பையனுக்குப் பரிச்சயமான அவன் அப்பாவின் நண்பரை, எனக்கும் அடையாளம் புரிந்தது.

பேசத் தெரியாமல் அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன். வந்து விட்டார். வந்து விட்டார். வந்து விட்டார்.

"கேசவ்? கேசவன்தானே? நான் செல்லப்பா."

அந்தக் குரலும் மாறவில்லை.

"தெரியும்" என்று எப்படியோ தடுமாறிக் கூறினேன்.

"நான் ரெண்டு வாரமா ஊர்ல இல்லே. இன்னிக்குச் சாயங்காலம்தான் வந்தேன். உன் — உங்க — லெட்டரைப் பார்த்தேன். உடனே கிளம்பி வந்தேன்."

அவர் கண்கள் படுக்கை மீது கிடந்த உருவத்தில் சென்று நிலைத்தன. உதடுகள் லேசாய்த் துடிப்பது தெரிந்தது. அவர் பார்வையில் ஒரு வாழ்நாளின் உணர்ச்சிகள் அனைத்தும் ஒருங்கே கட்டவிழ்ந்து உடைந்தன. கணப் பொழுதில் அம்மாவுடன் அவர் அங்கே தனியாய் இருந்தார். இது அவ்விருவருடைய கணம். அவர்களுடையதாய் இருந்திருக்க வேண்டிய எத்தனையோ ஆண்டுகளின் ஒரு சின்னஞ் சிறு, கடைசிப் பிரதிநிதி.

"உள்ளே வந்து உக்காருங்க ஸார். நான் இதோ வந்துடறேன்" என்று கூறி அந்த அறையை விட்டு நான் வெளியேறினேன்.



அத்தியாயம் 15

காலாமுகர்கள்

உதய சூரியனுடைய செங்கதிர்கள் வந்தியத்தேவனுடைய முகத்தில் சுளீர் என்று பட்டு அவனைத் துயிலெழுப்பி விட்டன. உறக்கம் தெளிந்ததும் எழுந்திருக்க அவனுக்கு மனம் வரவில்லை. கண்ணை விழித்துப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் பயங்கர ரூபமுள்ள இரண்டு சாமியார்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய திரித்து விட்ட சடை, ஒரு கையில் பிடித்த திரிசூலம், இன்னொரு கையில் அக்கினி குண்டம் இவற்றிலிருந்து அவ்விருவரும் காலாமுக வீரசைவர்கள் என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இவர்களுடன் வாதப் போர் செய்வதற்கு ஆழ்வார்க்கடியான் இங்கு இல்லையே என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அந்தக் காலாமுகச் சாமியார்கள் போகும் வரையில் கண்ணை மூடிக் கொண்டு தூங்குவது போல் பாசாங்கு செய்வதென்று தீர்மானித்தான்.

அவர்கள் அவன் பக்கத்தில் வந்து நிற்பதாக அவன் உணர்ந்த போதும் கண்களைத் திறக்கவில்லை. அவர்களில் ஒருவர் அருகில் வந்து கனைத்த போதும் அவன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை.

''சிவோஹம்! பையன் நல்ல கும்பகர்ணனாயிருக்கிறான்'' என்றார் ஒருவர்.

''சிவோஹம்! இவனைப் போல் ஒரு வாலிபப் பிள்ளை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்று சொன்னார் இன்னொரு சாமியார்.

''சிவோஹம்! ஆளைப் பார்த்து,

அமரர் கல்கி

பொன்னியின் செல்வன்



முகம் களையாயிருக்கிறதே என்று சொல்லுகிறாய்! இவனால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. வெகு சீக்கிரத்தில் இவனுக்கு ஒரு பெரிய ஆபத்து வரப் போகிறது!'' என்றார் முதல் வீர சைவர்.

மேலும் தூங்குவது போல் பாசாங்கு செய்ய, மூச்சு விட முடியாமல் திணறும் உணர்ச்சி வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. எனினும் அச்சமயம் விழித்தெழுந்தால் தன் பாசாங்கு வெளியாகிவிடும். மேலே அவர்கள் ஏதாவது பேசுவதைக் கேட்க முடியாமலும் போய்விடும். தனக்கு என்ன பெரிய ஆபத்து வரப் போகிறது என்பதையும் இவர்கள் ஒருவேளை சொல்லலாம் அல்லவா?......

ஆனால் அவன் எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை.

''சிவோஹம்! அவனவனுடைய தலையெழுத்து! நீ வா போகலாம்!'' என்று ஒரு வீர சைவர் கூற, இருவரும் அங்கிருந்து நகர்ந்து சென்றார்கள்.

அவர்கள் சற்றுத் தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு வந்தியத்தேவன் எழுந்தான். ''சீக்கிரத்தில் இவனுக்குப் பெரிய ஆபத்து வரப் போகிறது!'' என்ற வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக் கொண்டிருந்தன.

பழைய காபாலிகர்களின் பரம்பரையில் வந்தவர்கள் காலாமுகர்கள். காபாலிகர்களைப் போல் அவர்கள் நரபலி கொடுப்பதில்லை. மற்றபடி காபாலிகர்களின் பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். அவர்கள் மயானத்தில் அமர்ந்து கோரமான தவங்களைச் செய்து வருங்கால நிகழ்ச்சிகளை அறியும் சக்தி பெற்றிருந்ததாகப் பலர் நம்பினார்கள். சாபங்கொடுக்கும் சக்தி அவர்களுக்கு உண்டு என்றும் பாமர ஜனங்கள் எண்ணினார்கள். ஆகையால் காலாமுக சைவர்களின் கோபத்துக்கு ஆளாகாத வண்ணம் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யப் பலர் ஆயத்தமாயிருந்தனர். சிற்றரசர்கள் பலர் ஆலயங்களில் காலாமுகர்களுக்கு வழக்கமாக அன்னமளிப்பதற்கு நிவந்தங்கள் விட்டிருந்தனர். இதுவரையில் சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் மட்டும் காலாமுகர்களுக்கு எவ்வித ஆதரவும் காட்டவில்லை.

இந்தவிவரங்களையெல்லாம் அறிந்திருந்த வந்தியத்தேவன், ''அவர்கள் ஏதாவது உளறிக் கொண்டு போகட்டும். இதுவரையில் நேராத ஆபத்து நமக்குப் புதிதாக என்ன வந்து விடப் போகிறது?'' என்று எண்ணித் தன்னைத் தானே தைரியப்படுத்திக் கொண்டான். ஆயினும் வருங்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆசை அவன் மனத்தை விட்டு அடியோடு அகன்று விடவில்லை.

வந்தியத்தேவன் எழுந்து நின்று பார்த்த போது அந்தக் காலாமுகர்கள் சற்றுத் தூரத்தில் ஒரு பழைய மண்டபத்தின் அருகில் போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். மண்டபத்துக்கு அருகில் செயற்கைக் குன்றம் ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு குகை



சிங்க முகத்துடன் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. பழைய நாட்களில் திகம்பர ஜைனர்கள் கட்டிக் கொண்டிருந்த அந்தக் குகைகளைக் காலாமுகர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே சென்று அவர்களுடன் சிறிது பேச்சுக் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. குதிரையைக் கட்டியிருந்த இடத்திலேயே விட்டு விட்டுச் செய்குன்றை நோக்கிப் போனான். மண்டபத்தை நெருங்கிய போது காலாமுகர்கள் குகையின் மறு பக்கத்தில் நின்று பேசியது அவன் காதில் லேசாக விழுந்தது.

"அந்தப் பையன் பொய்த் தூக்கம் தூங்கவில்லை. உண்மையாகவேதான் தூங்கியிருக்க வேண்டும்" என்று சொன்னார் ஒருவர்.

"அது எப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?" என்றான் இன்னொருவன்.

"'அபாயம் வரப் போகிறது' என்ற வார்த்தைகளைக் கேட்ட பிறகு, அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பாத மனிதன் யாரையும் நான் இதுவரையில் கண்டதில்லை."

"பையன் நல்ல தீரனாகத் தோன்றுகிறான். அவனை நம்மோடு சேர்த்துக் கொண்டால் நன்றாய்த்தான் இருக்கும். நீ என்ன சொல்லுகிறாய்?"

"இவனைப் போன்ற வாலிபர்கள் எதற்காக? இன்னும் கொஞ்ச நாட்களில் இந்தச் சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறப் போகிறவனே காலாமுகத்தைச் சேரப் போகிறான்......"

"யாரைச் சொல்லுகிறாய்?"

"வேறு யாரை? மதுராந்தகத் தேவனைத்தான் சொல்லுகிறேன்! இதுகூட உனக்குத் தெரியவில்லையா?"

"அது எப்படி? மற்ற இரண்டு பேர்!"


"ஒருவன்தான் கடலில் முழுகி இறந்து விட்டானாம். இன்னொருவனுடைய காலம் குறுகிக் கொண்டிருக்கிறது...."

வந்தியத்தேவன் அதற்குமேல் அந்தக் காலாமுகச் சாமியார்களின் பேச்சைக் கேட்கச் சிறிதும் விரும்பவில்லை. அவர்களுடன் பேச்சுக் கொடுக்கவும் எண்ணவில்லை.



விரைவிலே பழையாறையை அடைந்து இளவரசியிடம் செய்தியைச் சொல்லிவிட்டுக் காஞ்சிக்குப் போக விரும்பினான். எல்லாருக்கும் மேலாகத் தான் அதிகம் கடமைப்பட்டிருப்பது ஆதித்த கரிகாலருக்கு அல்லவா? அவரை எத்தனையோ வித அபாயங்கள் சூழ்ந்திருப்பது உண்மை. பார்த்திபேந்திரன் கூடப் பழுவூர் ராணியின் மாயவலையில் விழுந்துவிட்டான். எந்தக் காரியத்திலும் படபடப்புடன் இறங்கக் கூடியவரான ஆதித்த கரிகாலர் எப்போது எந்த வித அபாயத்துக்கு உள்ளாவாரோ, தெரியாது. அவரிடம்சென்று அவரைக் காத்து நிற்பது தன் முதன்மையான கடமை. வழியில் வீண் பொழுது போக்குவது பெருங்குற்றம். இந்தக் கணமே சென்றுவிட வேண்டும்.

வந்தியத்தேவன் சத்தமில்லாமல் திரும்பிச் சென்று குதிரை மீது ஏறிக்கொண்டான். குதிரையை வேகமாகத் தட்டி விட்டான். காலாமுகர்களின் குகையோரமாகச் சென்றபோது அவர்கள் தன்னை வெறித்து நோக்குவதைக்கண்டான். ஒரு முகம் அவன் எப்போதோ பார்த்த முகம் போலத் தோன்றியது. ஆனால் நின்று பார்க்க விருப்பமின்றி மேலே சென்றான்.



வழியில் ஜன நெருக்கமான பல கிராமங்களை அவன் பார்த்தான். அங்கேயெல்லாம் இளவரசர் கடலில் மூழ்கியது பற்றிய செய்தி இன்னும் பரவவில்லையென்று தெரிந்தது. ஏனெனில் ஜனங்

கள் சாவதானமாக அவரவர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அது வரையில் நல்லதுதான். இளவரசரைப் பற்றிய செய்தி பழையாறையை அடைவதற்குள் தான் அங்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டும். இளைய பிராட்டியிடம் உண்மையை அறிவித்து விட வேண்டும். குந்தவை தேவியின் காதில் வேறு விதமான செய்தி விழுந்தால் ஏதாவது விபரீதம் நேரிட்டு விடலாம் அல்லவா? இளைய பிராட்டியாவது நம்புவதற்குத் தயங்கலாம். அந்தக் கொடும்பாளூர் இளவரசி உயிரையே விட்டாலும் விட்டு விடுவான்!... இந்த எண்ணம் வந்தியத் தேவனுக்கு மிக்க பரபரப்பை உண்டாக்கிற்று. ஆனால் அவனுடைய அவசரம் குதிரைக்குத் தெரியவில்லை. கால்களில் புதிதாக லாடம் அடிக்கப்பட்டிருந்த அக்குதிரை வழக்கமான வேகத்துடனே கூட ஓட முடியாமல் தத்தளித்தது. கடைசியாகப் பிற்பகலில் சூரியன் அஸ்தமிப்பதற்கு இரண்டு நாழிகை இருந்த போது தான் பழையாறைக் கோட்டையின் பெரியசுவர் அவனுக்குப்புலப்பட்டது.

அதோ கோட்டை வாசல் துர்க்கையின் கோவில் தெரிகிறது. கோட்டைக்குள் எப்படிப் பிரவேசிக்கிறது என்பதைப் பற்றி எத்தனையோ யோசனைகள் அவன் உள்ளத்தில் மின்னல் வேகத்தில் படை எடுத்து வந்தன. ஆனால் ஒன்றும் காரிய சாத்தியமாகத் தோன்றவில்லை. பனை முத்திரை மோதிரமோ இங்கே பயன்படாது. ஏனெனில், அந்த மோதிரத்துடன் வருவான் என்பது முன்னமே கோட்டைக் காவலர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. இப்போது மோதிரத்தைப் பார்த்ததும் வேறு விசாரணையின்றிச் சிறைப்படுத்தி விடுவார்கள். சின்னப் பழுவேட்டரையரிடம் அவனை அனுப்பி விடுவார்கள். இளைய பிராட்டி குந்தவை தேவியைப் பார்ப்பதற்கு முன்னால் அவ்விதம் அகப்பட்டுக் கொள்ள அவன் சிறிதும் விரும்பவில்லை.



யோசனை செய்த வண்ணம் குதிரையின் வேகத்தை அவன் குறைத்துக் கொண்டு கோட்டை வாசலை நெருங்கிய போது மற்றொரு திசையிலிருந்து ஒரு கூட்டம் வருவதைக் கண்டான். வேல் பிடித்த வீரர்கள், விருதுகளைச் சுமந்தவர்கள், குதிரைகள் மேல் ஏறி வந்தவர்கள்,— இவ்வளவு பேருக்கும் நடுவில் தாமரைப் பூ வடிவமாக, அமைந்த ஒரு தங்க ரதம். ஆஹா! அந்த ரதத்தில் வீற்றிருப்பது யார்? இளவரசர் மதுராந்தகத் தேவர் அல்லவா? கடம்பூர் அரண்மனையிலும் தஞ்சாவூர்ப் பொக்கிஷ நிலவறையிலும் பார்த்த அதே இளவரசர்தான்!—கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு யுக்தி என்னவென்பது உடனே வந்தியத்தேவன் மனத்தில் தோன்றி அவனுக்கு உணர்ச்சியூட்டி விட்டது.

"ஆபத்து வரப் போகிறது என்ற வார்த்தை காதில் விழுந்தால் அதைப் பற்றி அறிந்து கொள்ள விரும்பாதவனை இதுவரை நான் பார்த்ததில்லை." — இவ்விதம் காலாமுகர்களில் ஒருவர் கூறிய வார்த்தைகள் அவன் மனத்தில் பதிந்திருந்தன. அவனே அந்த ஆவலுக்கு இடங் கொடுத்து விட்டான் அல்லவா? அந்தக் காலாமுகரின் யுக்தியை இங்கே கையாண்டு பார்க்க வேண்டியது தான்.

தாமரை மலரின் வடிவமான தங்க ரதத்தை நோக்கி வந்தியத்தேவன் களைப்படைந்திருந்த தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான்.

மதுராந்தகத் தேவருடைய பரிவாரங்களில் யாரும் அவ்விதம் ஒருவன் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவனை யாரும் தடுக்க முன் வருவதற்குள் குதிரை

ரதத்தின் சமீபத்தை அடைந்து விட்டது. அந்தச் சமயத்தில் வந்தியத்தேவன் குதிரை மீது எழுந்து நின்றான். ரதத்தில் வீற்றிருந்த மதுராந்தகரை உற்றுப் பார்த்தான். பார்த்துவிட்டு "ஓ! அபாயம்!" என்று ஒரு குரலைக் கிளப்பினான். உடனே தடால் என்று குதிரை மீதிருந்து தரையில் விழுந்து உருண்டான். குதிரை சில அடி தூரம் அப்பால் சென்று நின்றது.

அவ்வளவும் சில வினாடி நேரத்தில் நடந்து விட்டது. மதுராந்தகத் தேவரின் பரிவாரத்தைச் சேர்ந்த சிலர் அவனுடைய குதிரை ரதத்தை நோக்கிப் போவதைக் கண்டு அவசரமாகக் கத்தியை உறையிலிருந்து எடுத்தார்கள். சிலர் வேலை எறிவதற்குக் குறி பார்த்தார்கள். அதற்குள் அவன் குதிரை மேல் நிற்க முயன்று கீழேயும் விழுந்து விட்டபடியால் அவர்களுடைய கவலை நீங்கியது.

பிறகு கீழே விழுந்தவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். மதுராந்தகரும் சிரித்தார். அதற்குள் ரதம் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் கையைக் காட்டிச் சமிக்ஞை செய்யவே, வீரர்கள் இருவர் வந்தியத்தேவன் அருகில் சென்று அவனைத் தூக்குவதற்குச் சென்றார்கள். அதற்குள் அவனே எழுந்து உட்கார்ந்திருந்தான். வீரர்களுடைய உதவியில்லாமல் குதித்து எழுந்து நின்றான். தான் விழுந்தது பற்றிச் சிறிதும் கவனியாதது போல் இளவரசர் மதுராந்தகரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவனை இப்படி அருகில் கொண்டு வாருங்கள்!" என்றார் இளவரசர்.

வீரர் இருவரும் வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று ரதத்தின் பக்கத்தில் நிறுத்தினார்கள். இன்னமும் அவனுடைய கண்கள் மதுராந்தகர் முகத்தின் பேரிலேயே இருந்தது.

"அப்பனே! நீ யார்?" என்று இளவரசர் கேட்டார்.

"நான்... நான்தான்! சக்கரவர்த்திப் பெருமானே! என்னைத் தெரியவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன உளறுகிறாய்?.... அடே! நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்!" என்றார் மதுராந்தகர் மற்ற வீரர்களைப் பார்த்து. வீரர்கள் விலகினார்கள்.

"என்னை யார் என்று எண்ணிக் கொண்டாய்?" என்று மறுபடியும் மதுராந்தகர் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும், இளவரசே! தவறாகச் சொல்லி விட்டேன். தாங்கள் இன்னும்.... இன்னும்...." என்று தட்டுத் தடுமாறிப் பேசினான்.

"இதற்கு முன் எப்பொழுதாவது என்னை நீ பார்த்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்...... இல்லை; பார்த்ததில்லை......"

"என்னைப் பார்த்திருக்கிறாயா? இல்லையா? உண்மையைச் சொல்!"

"நேற்றிலிருந்து நான் உண்மையைச் சொல்வதென்று வைத்திருக்கிறேன். அதனால்தான், நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை!"

"ஓகோ! நேற்று முதல் நீ உண்மை பேசுகிறவனா? நல்ல வேடிக்கை!" என்று மதுராந்தகர் சிரித்தார்.

"அதனால் நிச்சயமாய்ச் சொல்ல முடியாமற் போவானேன்?" என்று மறுபடியும் கேட்டார் மதுராந்தகர்.

"இந்தக் காலத்தில் எதைத்தான் நிச்சயமாய்ச் சொல்ல முடிகிறது? ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்கிறார். ஒருநாள் மூடு பல்லக்கில் இருந்தவர் இன்னொரு நாள் ரதத்தில் இருக்கிறார்...."

"என்ன சொன்னாய்?" என்று மதுராந்தகர் சிறிது திடுக்கிட்ட குரலில் வினவினார்.

"ஒருவரைப் போல் இன்னொருவர் இருப்பதால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை என்றேன்!"

"நான் யாரைப் போல இருக்கிறேன்?"

"இரண்டு தடவை தங்களை நான் பார்த்திருக்கிறேன். அல்லது தங்களைப் போன்றவரைப் பார்த்திருக்கி

றேன். தாங்கள் தாங்கள்தானா அதாவது நான் பார்த்தவர்தானா என்று சந்தேகமாயிருந்தது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்... சற்று முன்...."

"குதிரை மேல் ஏறி நின்று அப்படி உற்றுப் பார்த்தாயா?"

"ஆம், ஐயா!"

"என்ன தெரிந்து கொண்டாய்?"

"தாங்கள் நான் பார்த்தவராகவும் இருக்கலாம், இல்லாமலுமிருக்கலாம் என்று தெரிந்து கொண்டேன்."

மதுராந்தகருக்குக் கோபம் உண்டாகத் தொடங்கியதென்பது அவருடைய முகத்திலிருந்தும் குரலின் தொனியிலிருந்தும் தெரிந்தது.

"நீ சுத்தப் போக்கிரி. உன்னை...."

"இளவரசே! கோபிக்க வேண்டாம். நான் தங்களையோ, தங்களைப் போன்றவரையோ பார்த்தது எங்கே என்று சொல்கிறேன். பிறகு, தாங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் சொல், சீக்கிரம்!"

"ஒரு பெரிய கோட்டை. நாலாபுறமும் நெடிய மதில் சுவர். வீராதி வீரர்கள் பலர் அங்கே கூடியிருந்தார்கள். நடு ராத்திரி. சுவரில் மாட்டிய பெரிய அகல் விளக்கிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சத்தில் அவர்கள் ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுவர் ஓரமாக ஒரு பல்லக்கு இருந்தது. அந்த வீரர்களின் தலைவரை மற்றவர்கள் ஏதோ கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டார்கள். அவருக்குக் கோபம் வந்து விட்டது. வேகமாக எழுந்து போய்ப் பல்லக்கின் அருகில் நின்றார். பல்லக்கை மூடியிருந்த பட்டுத் திரையை விலக்கினார். பல்லக்கின் உள்ளேயிருந்து ஒரு சுந்தர புருஷர் வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே கூடியிருந்த வீரர்கள் அனைவரும் 'வாழ்க! வாழ்க!' என்று கோஷித்தார்கள். 'பட்டத்து இளவரசர் வாழ்க!' என்றும் சிலர் கூவினார்கள். 'சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷித்ததாகவும் ஞாபகம். ஐயா! அப்போது பல்லக்கிலிருந்து வெளிவந்தவருடைய முகம் தங்கள் முகம் போலத்தான் இருந்தது. ஏதாவது நான் தவறாகச் சொல்லியிருந்தால் தயவு செய்து மன்னிக்க வேண்டும்."

நடுவில் குறுக்கிடாமல் இத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருந்த மதுராந்தகத் தேவருடைய நெற்றியில் வியர்வை துளிக்கலாயிற்று. அவருடைய முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது.

"நேற்று முதல் உண்மை சொல்லுகிறவனே! அந்த வீரர்களின் கூட்டத்தில் நீ இருந்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! சத்தியமாக இல்லை."

"பின் எப்படிக் கூட இருந்து பார்த்தது போலச் சொல்கிறாய்?"

"நான் கண்ட காட்சி உண்மையாக நடந்ததா அல்லது கனவிலே கண்டதா என்று எனக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. இன்னொரு காட்சியையும் கேளுங்கள். இருள் அடர்ந்த ஒரு நிலவறை. அதில் ஒரு சுரங்கப் பாதை. வளைந்து வளைந்து கீழே இறங்கி மேலே ஏறிப் போக வேண்டிய பாதை. அதன் வழியாக மூன்று பேர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் ஒருவன் தீவர்த்தி பிடித்துக் கொண்டு போனான். பின்னால் ஒருவன் காவல் புரிந்து கொண்டு வந்தான். நடுவில் ஒரு சுந்தர புருஷர் — வடிவத்தில் மன்மதனையொத்த ராஜகுமாரர்— வந்து கொண்டிருந்தார். தீவர்த்தியின் வெளிச்சம் அந்த நிலவறையின் மூலை முடுக்குகளில் பரவிய போது, அங்கேயெல்லாம் பொன்னும் மணியும் வைடூரியங்களும் ஜொலிப்பது போலத் தோன்றியது. அது மன்னாதி மன்னர்களின் இரகசியப் பொக்கிஷங்களை வைக்கும் நில்வறையாக இருக்கலாம் என்று தோன்றியது. தூண்களில் கோரமான பூத வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அத்தகைய சுரங்க வழியில் வந்து கொண்டிருந்த மூன்று பேரிலே நடுவில் வந்த சுந்தரபுருஷரின் முகம் தங்கள் திருமுகம் போலிருந்தது. அது உண்மையா, இல்லையா என்பதைத் தாங்கள்தான் சொல்ல

வேண்டும்....''

இளவரசர் மதுராந்தகர், ''போதும்; நிறுத்து!'' என்றார். அவருடைய குரலில் பீதி தொனித்தது.

வந்தியத்தேவன் சும்மா இருந்தான்.

''நீ நிமித்தக்காரனா?''

''இல்லை, ஐயா! அது என் தொழில் இல்லை. ஆனால் நடந்ததையும் சொல்லுவேன்; இனிமேல் நடக்கப் போவதையும் சொல்லுவேன்.''

மதுராந்தகர் சிறிது யோசித்து விட்டு ''குதிரை மேல் நின்ற போது ஏதோ கத்தினாயே, அது என்ன?'' என்று கேட்டார்.

''அபாயம் என்று கத்தினேன்.''

''யாருக்கு அபாயம்?''

''தங்களுக்குத்தான்!''

''என்ன அபாயம்?''

''பல அபாயங்கள் தங்களைச் சூழ்ந்திருக்கின்றன. அது போலவே பெரும் பதவிகளும் காத்திருக்கின்றன. அவற்றைக் குறித்துச் சாவகாசமாகச் சொல்ல வேண்டும். என்னுடைய கத்தியைக் கூடத்தான் தங்கள் வீரர்கள் பிடுங்கிக் கொண்டு விட்டார்களே? தங்களுடன் என்னைக் கோட்டைக்குள் அழைத்துக் கொண்டு போனால்...''

''ஆகட்டும்: என்னுடன் வா! சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்!''

மதுராந்தகத் தேவர் தம்முடன் வந்த வீரர்களின் தலைவனைக் கை காட்டி அருகில் அழைத்தார். வந்தியத்தேவனைச் சுட்டிக் காட்டி அவனை அவர்களுடன் கோட்டைக்குள் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அந்தக் கட்டளை அவ்வீரர் தலைவனுக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. ஆயினும் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து வந்தியத்தேவனையும் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் பழையாறைக் கோட்டைக் கதவு திறந்தது.

மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் வந்தியத்தேவனும் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

(தொடரும்)




அருள்வாக்கு

பக்தி என்பது ஈசனிடம் வைக்கும் அன்புதான்.

அன்புக்கே அது யாரைக் குறித்து வைக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து வேறு வேறு பேர்கள் உண்டு. ஸம வயஸினரிடம் வைக்கும் அன்புக்கு ஸ்நேஹிதம், நட்பு என்று பேர். பெரியவர்களிடம் வைக்கிற அன்பு — மரியாதை. குழந்தையிடம் வைக்கும் அன்பு — வாத்ஸல்யம். கதாநாயகன் — நாயகி அன்பு கொள்வது சிருங்காரம். நம் மாதிரி ஸாதாரணப்பட்டவர்கள் நம்மைவிட தீனர்களிடமும் கஷ்டப்படுகிறவர்களிடமும் வைக்கும் அன்புக்குப் பரிவு என்று பெயர். அதுவே நம்மைவிட மஹா பெரியவர்கள் நம்மிடம் வைக்கும்போது அருள், க்ருபை என்றெல்லாம் பேர் எடுக்கிறது. வெறுமே பரிவாக ஓர் ஆறுதல் தருவதாக மட்டுமின்றி தீன நிலையை, கஷ்ட ஸ்திதியைப் போக்கடிக்கும் சக்தியே மஹான்களின் அருளுக்கு இருக்கிறது. அதன் உச்சிதான் ஈச்வரன் நம்மிடம் வைக்கும் பரிவான அன்பு. பரம கருணை, அநுக்ரஹம் என்று அதற்குப் பேர் சொல்கிறோம். அந்த ஈச்வரனிடம் நாம் வைக்கிற உசந்த அன்பு தான் பக்தி என்பது.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கணவன்



பசி, வித்யாவின் வயிற்றைப் புரட்டியது.

நேற்று மதியம் கொஞ்சம் சாப்பிட்டதுதான்.

இராத்திரி கணவனுக்குப் பரிமாறி, குழந்தைக்கும் ஊட்டி முடித்த போது மணி ஒன்பதாகி விட்டது.

"இன்னும் உன் சாப்பாட்டுக் கடை முடியல்லையா?" என்று அதட்டினான், வைத்தி — கணவன்.

"பத்து மணிக்கு பஸ் வந்துடுமாம். டிரஸ்களை எல்லாம் பெட்டியில் எடுத்து வைக்கணும். பிரவுண் பேண்ட் கிளிப் அறுந்துடுச்சு. 'தைச்சு வை' என்று ஒரு வாரமாச் சொல்லிட்டிருக்கேன். அதுவும் தைச்ச பாடில்லை. உன் தம்பி என்னவோ காமிராக் கொண்டு வருவான் என்

றாய். அவனையும் காணோம்....''

மொட மொடத்துக் கொண்டே இருந்தான், அவன்.

விட்டுப் போன காரியங்களை நினைக்கத் தட்டில் போட்ட சாதம் வேம்பாய்க் கசந்தது. வித்யாவுக்கு. எடுத்துப் போட்டு விட்டு எழுந்தாள் அவள்.

எல்.டி.சி.யில் பம்பாய் டூர் போகிறார்கள், அவர்கள்.

ஆனால், பத்து மணிக்கு வரவேண்டிய பஸ், விடிய விடிய எல்லாரையும் விழிக்க வைத்து. அதிகாலை ஐந்து மணிக்குத்தான் வந்தது.

வித்யாவுக்கு அப்போதே நல்ல பசி.

'உள்ளூரிலேயே ஹோட்டலில் ஏதேனும் சாப்பிடலாம்' என்று நினைத்தாள்.

ஆனால் —

பஸ், தாமதமாக வந்தது பற்றிய புகாரிலும், கண்டனத்திலும் அதையெல்லாம் யோசிக்க, டூர் அமைப்பாளருக்கு அவகாசமில்லை.

அவளாலும் வாய் திறந்து சொல்ல முடியவில்லை. பெண் ஆயிற்றே. வயிற்றைக் கட்ட வேண்டிய ஜன்மம்.

வீடாக இருந்தாலாவது பசி பொறுத்துக் கொள்ளலாம். பிரயாணத்தில் அது சிரமம் என்பதை உணர்ந்தாள் வித்யா. வயிறு காய்ந்து, உலர்வது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது. ஓடும் பஸ்ஸில் என்ன பண்ண முடியும்?

சீடை, முறுக்கு ஏதாவது செய்து கொண்டு போகலாம் என்ற அவள் யோசனையை, 'வேண்டாம்' என நிராகரித்து விட்டான் வைத்தி.

மகேஷுக்கு வாங்கிய பிஸ்கட் பாக்கெட்டுகள் இருந்தன.

அத்தனை பேருக்கு முன்னால், குழந்தைக்காக வாங்கிய பிஸ்கட்டைப் பெற்றவள் தின்பது இங்கிதமாய் இருக்காது.

மணி பத்தடிக்க, பஸ் சேலத்தில் வந்து நின்றது.

'அப்பாடா... வயிற்றுக்குப் பதில் சொல்ல இந்த மட்டிலாவது பஸ்ஸை நிறுத்தினார்களே!' என்று ஆசுவாசத்துடன் மகிழ்ந்தாள் வித்யா. பஸ் நிறுத்தத்துக்கு அருகிலேயே ஓர் ஓட்டல்.

மகேஷைத் தோளில் போட்டுக் கொண்டு, கை வீசி நடக்கும் கணவனுடன் போட்டியாக நடந்தாள். பசி, அத்தனை வேகமாக அவளை விரட்டியது.

முறுகல் நிறத்துடன் மொறு மொறுவென்று தோசை.பார்க்கும் போதே நாவில் நீர் சுரந்தது.

வித்யா, அதை விண்டு சட்னியில் தோய்த்தாள்.

மடியில் இருந்த மகேஷ், வாய் திறந்தவனாய்க் கைகளை நீட்டி நீட்டித் தோசையை நோக்கித் தாவினான்.

பாவம், அவனுக்கு மட்டும் பசிக்காதா என்ன!

என்னதான் இடையிடையே அவன் பிஸ்கட் சாப்பிட்டாலும், அதெல்லாம் தோசை மாதிரி ஈடு கொடுக்குமா!

வீடாக இருந்தால் இந்நேரம் இரண்டாம் தரம் சிற்றுண்டி சாப்பிட்டிருப்பானே.

எடுத்த தோசை விள்ளலைக் குழந்தையின் வாயில் திணித்தாள், வித்யா.

''சீக்கிரம் சாப்பிடு. பஸ் பத்து நிமிஷங்கள்தான் நிற்குமாம்.''

பக்கத்தில் இட்லி, பூரியை அடுத்துத் தோசைகளைப் பிட்டுப் போட்டுக் கொண்டிருந்த வைத்தி, மனைவியைத் துரிதப்படுத்தினான்.

மூன்று வயதுப் பாலகன். பெரியவர்கள் மாதிரி 'லபக்... லபக்'கென்று விழுங்க முடியுமா என்ன?

மெள்ள, மென்றுதான் சாப்பிட்டான்.

''என்ன வித்யா, இன்னுமா சாப்பிடுகிறாய்?''

சாப்பிட்டு முடித்துக் கை கழுவ எழுந்த வைத்தி மனைவியிடம் குறை கண்டவனாய், வாஷ் பேசினை நோக்கி நடந்தான்.

பாம்....பாம்..

''நம்ம பஸ்தான். சத்தம் கொடுக்கிறான். எல்லோரும் சாப்பிட்டுப் போயிட்டாங்க. நீதான் இன்னும் அரைக்கிறாய்.''

''இதோ.... ஆயிடுச்சுங்க.''

அந்தத் தோசையின் கடைசி விள்ளலையும் குழந்தையின் வாயில் திணித்து விட்டு அவசரமாக எழுந்தாள் வித்யா.

குழந்தைக்கு வாயைக் கழுவி, அவள் கையை அலம்பிக் கொண்டாள்.

''நான் இன்னும் சாப்பிடல்லை. ஒரு தோசை பார்சல் வாங்கிக் கொள்ளுங்களேன்....'' என்று சொல்லலாமா?

யோசித்துக் கொண்டே வந்தாள், வித்யா.

''அதான் சாப்பிட்டாச்சுல்ல. இன்னும் என்ன மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு வர்றே?'' என்று அதட்டினான் வைத்தி.

அந்த முறைப்பில், அவளது பார்சல் யோசனை பஸ்பமாய் எரிந்து போயிற்று.

பஸ்ஸில் ஏறியதும் டூர் அமைப்பாளர் அமர்த்தலாகச் சொன்னார்:

''என்ன மிஸ்டர் வைத்தி, நீங்கள்தான் கடைசி.''

''எல்லாம் இவளால்தான், சார். கொஞ்சம் கூட கோவாபரேஷனே கிடையாது. வீடு மாதிரி நீட்டி நிதானமா உட்கார்ந்து சாப்பிடுகிறாள்....'' என்று அலுத்துக் கொண்டான் வைத்தி.

நினைவுகளை விலைசப் பழக்கிய போது...

சட்டென்று அவளிடம் ஒரு மாறுதல்.... கோபம்.

கோபத்திலும் இது ஜாடை மாடை கோபம் இல்லை. 'வந்திருக்கிறேன் — பார்த்துக் கொள்...' என்று முகத்திற்கு நேரே நிற்கிற கோபம்.

பாஸ்கர் சற்றுப் பின்வாங்கினான்.

''விமலா, உன்னிடம் சொல்லாமல் — உன் அனுமதியில்லாமல் அவர்களைக் கூப்பிட்டது தப்புத்தான். ஆனால் கொஞ்சம் நான் சொல்றதைக் கேளு... அவன் கல்யாணத்திற்கே நாம் போகல்லே. வீட்டிற்குக் கூப்பிட்டு ஒரு வேளைச் சாப்பாடாவது போடலேன்னா....''

''இந்த இடத்தில், நாலு பேர் மதிக்கிற மாதிரி கௌரவமா, கண்ணியமா நாம் இருக்கோம். இங்கே அவள் வந்தால்...''

''விமலா, அவ இப்ப....''

''பெண் என்கிற வார்த்தைக்கே இவர்களால் அவமானம், கேவலம்... எங்கேயோ...? எத்தனை லாட்ஜோ...? எத்தனை பேரோ...? உங்கள் நண்பருடைய மனைவியாக அவள் ஆகிவிட்டால் மட்டும் புனிதமாயிடுமா? மறைஞ்சு போயிடுமா?''

இவனுக்குச் 'சே' என்று போய் விட்டது. சந்திரனுடன் நெருக்கமான பழக்கம். ஆபீசில் கூட வேலே செய்கிறவன். 'வழுக்கி விழுந்து விட்ட ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கிறேன்' என்று திடீரென்று இப்படி ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து நிற்கிறான். தெரியாத்தனமாக அவர்களைக் கூப்பிட்டும் ஆயிற்று. இப்போது என்ன செய்வது?

''இந்தக் கல்யாணம், வாழ்க்கை, எல்லாம் இன்னும் எத்தனை நாளைக்கு? ம்.. நாள்னு சொல்றது கூட அதிகம்தான். ரொம்ப அதிகம்... மணிக்கணக்கு... அவ்வளவுதான்! இவளுக்கெல்லாம் ஒரு கல்யாணம், கணவன், விருந்து....'' என்று முனகிக் கொண்டே சென்றாள் விமலா.

அதோடு பாஸ்கர் நிறுத்தி விட்டான். மேலே எதுவும் பேசவில்லை. குளித்தான், சாப்பிட்டான், ஆபீஸ் கிளம்பி வந்து விட்டான்.

சந்திரனிடம் எப்படிச் சொல்லுவது என்று புரியவில்லை. இரண்டு மூன்று தடவை மனத்தில் ஒத்திகை பார்த்தான். எழுந்து அவன் மேஜை வரை போனான். தயக்கமாக இருந்தது. வந்து விட்டான்.

மாலையில், சந்திரனே இவனைத் தேடி வந்தான்.

''பாஸ்கர், எப்ப வந்தால் சரியா இருக்கும்?''

''உட்கார். வந்து... அதைப் பற்றித் தான்....''

இவன் நிறுத்தினான். ஒரு முறை அவனை நிமிர்ந்து பார்த்தான்.

''...ம்.... விமலாவுக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லே. தலைவலி. வாமிடிங்... அதனாலே....''

''இன்னொரு நாள் பார்த்துக்கலாம். டாக்டர் கிட்டே காட்டினியா?''

''ம்... வந்து... இன்னிக்கே முடிச்சுடலாமே. உங்களைக் கூப்பிட்டாச்சு. எதற்கு இன்னொரு நாள்? என்ன சொல்றே? வீட்டில் முடியலேன்னா ஹோட்டல்லே.''

''ஓ. கே.! ஒரு 'கெட் — டு — கெதர்.' அது தானே முக்கியம். நீ விமலாவை அழைச்சிண்டு வா... நான் தனியாக....''

''விமலாவால் வர முடியாது. கஷ்டம். நான் வரேன்.''

முகத்தில் அறை வாங்கின மாதிரி இருந்தது. சந்திரன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். கல்யாணம் ஆன பிறகு இப்படி அறை வாங்கப் பழக்கப்படுத்திக் கொண்டாயிற்று.

கல்யாணம் என்றபோதே... பொண்ணு யாரு? ப்ராத்தலா? எந்த ஊரு ப்ராத்தல்? கிண்டல்கள்...'இவன் இப்படி ஒருத்தியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணின்டதே பிரமோஷன் வாங்கத்தான். நீ வேணாப் பாரு... எண்ணி ஆறே மாசம்... அப்புறம் பய எங்கே போயிடறான்னு...' என்று பலரும் கிசுகிசுத்தார்கள். இத்தனை பேர் இருக்கிற ஆபீசில் யாரும் கல்யாணத்திற்கு வரவில்லை. ஆபீசில் இவன் ஒதுக்கப்பட்டான். கேலிப் பொருளாக்கப்பட்டான்...

ஆனால் பாஸ்கர் அப்படியில்லை. ஆதரவாய் இருந்தான். அதனால்தான் அவன் வீட்டுக்கு அழைத்ததும் ஒப்புக் கொண்டான். அதுவும் இப்படியா ஆக வேண்

ஜி. நாராயணன்

டும்... எனினும் புரிந்து கொண்டு சமாதான மானான்.

நளினி தயாராக இருந்தாள். மனத்தில் கொஞ்சம் பரபரப்பு இருந்தது. எதிர் பார்ப்பு இருந்தது.

'அந்த விமலா எப்படி இருப்பாள்...? சிவப்பாக.... உயரமாக... எல்லாப் பெண் களையும் போல்....'

சந்திரன் அவளைப் பற்றிச் சொல்லி யிருக்கிறான். அவன் சொன்னதையெல் லாம் வைத்து அந்த விமலாவுக்கு இவள் மனத்தில் ஓர் உருவம் கொடுத்து வைத்திருந் தாள்.

இன்னும் சிறிது நேரத்தில் அவளை நேரில் பார்க்கும் போது, என் ஊகம் எத் தனை தூரம் சரியாக இருக்கிறது என்பது புரிந்து விடும்.

இவர் ஏன் இன்னும் வரவில்லை?

வாசலில் வந்து எட்டிப் பார்த்தாள்.

எதிர் வீட்டு — பக்கத்து வீட்டு ஜன்னல் கள் உடன் திறக்கப்பட்டன.. நாலைந்து மீசைகள் — ஷேவ் செய்யப்படாத முகங்கள் தெரிந்தன. அத்தனையும் சாக்கடைப் பார் வைகள். சட்... கதவை அடைத்தாள்.

வீட்டிற்குள்ளேயே எத்தனை நேரம் அடைந்து கிடப்பது...? வீடும், அப்படி யொன்றும் வசதி இல்லை. இது மூன்றாவ தாக மாறி வந்த இடம். முன் இரண்டு இடங்களில் அவளுக்கு ஏற்பட்ட அனுபவங் கள் கசப்பானவை.

சந்திரன் வந்து விட்டான்.

''விமலாவுக்கு உடம்பு சரியில்லையாம். தலைவலி, வாமிடிங்... அதனாலே நாம் ஹோட்டலுக்குப் போறோம்!''

''எல்லாரும்தானே...? அவங்களும் — விமலாவும் வராங்களா?''

இவளிடம் ஓர் ஆவல்...

''ச்சு... இல்லே... பாஸ்கர் மாத்திரம் தான் வரான். அதான் உடம்பு சரியில் லையே, அவ எப்படி வர முடியும்?''

இவளுக்குச் 'சப்'பென்று போய் விட் டது.

''இந்தப் புது வருஷப் பார்ட்டிக்கு நானும் வரணுமா? அவசியமா? நீங்க போனாப் போறாதா?''

''போறாது!'' — ஒற்றை வார்த்தையில் சொன்னான் சந்திரன்.



''ஆபீஸ்காரங்க எல்லாரும் வருவாங்களா?''

''வருவாங்க...''

''அப்ப, நான் அங்கே அசிங்கமா...''

''நீ என் மனைவி...! யார் எது சொன்னாலும் உன்னை அழைத்துக் கொண்டு தான் போகப் போகிறேன்...''

நளினி மௌனமாக இருந்தாள். யோசனை செய்தாள். ஒரு விநாடி தயக்கத்திற்குப் பின், கேட்டாள் ''அவங்க வருவாங்களா? அதான், உங்க நண்பர் பாஸ்கர்... அவர் மனைவி விமலா...?''

இவளிடம் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகள். எப்படியும் இந்த முறை அந்த விமலாவை நேரில் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை.

மானேஜர் வீடு. எதிரே விஸ்தாரமாக இருந்த 'புல்வெளியில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. பாட்டில்கள் திறக்கப்பட்டுக் கண்ணாடித் தம்ளர்கள் 'சியர்ஸ்' என்று தொட்டுக் கொள்ள...

பெண்கள் வரிசையில் ஓர் ஓரமாக நளினி உட்கார்ந்திருந்தாள். கூடிய வரை தன்னை மற்றவர்களிடமிருந்து மறைத்துக் கொண்டு எல்லாரையும் பார்த்தபடி வந்தவளின் பார்வை சட்டென்று நின்றது. இரண்டாவது வரிசையில் உட்கார்ந்திருந்த அவள்... அந்த நீலப் புடைவை... அவளை எங்கேயோ பார்த்திருக்கிறேன்... பிரமையா? இல்லை நிஜம்.

மெல்ல எழுந்திருந்தாள். இருட்டோடு நடந்தாள். அவள் அருகில் சென்றாள். நின்றாள். சிரித்தாள். நீலப் புடைவையும் இவளைப் பார்த்துச் சிரித்தது. முகம் மாறியது. 'விருட்'டென்று எழுந்தது. இவளை ஓர் ஓரமாக இருட்டிற்குள் அழைத்தது.

''நீ... நீ... யாரு? இங்கே?''

''என் பெயர் நளினி. உன்னை... உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன். ம்... அதான்....''

நெற்றியைச் சுருக்கினாள். நினைவுகளை வரிசைப்படுத்த முயன்றாள்.

''நளினி அப்புறம் பேசலாமே... இங்கே எல்லாரும் பார்க்கிற மாதிரி.....''

''ம்.... நினைவு வந்துடுத்து. அந்த ராஸ்கல் ராஜசேகரன்... உன்னை ஏமாத்தி சேலத்திலே.... லாட்ஜிலே தவிக்க விட்டுட்டுப் போனானே.... உன் பெயர் கூட வந்து.... விமலாவா...?''

எதிரே தெரிந்த முகம் திடீரென்று இருண்டது. பயந்தது. வேதனை அனுபவித்தது. இவளை இன்னும் ஒதுக்குப்புறமாக அழைத்துப் போனது.

''நளினி.... பழசெல்லாம் மறந்துட்டேன். கெட்ட கனவா... இப்ப நான் கண்ணியமா, ஒருவர் மனைவியா இருக்கேன்... அழகான கணவன், நிறையச் சம்பளம், குழந்தை... பழைய கதை சுத்தமா யாருக்கும் தெரியாது. தெரிய எந்தக் காரணமும் இல்லை. உனக்கு... உனக்கு மட்டும் தெரிஞ்சதை... ரகசியத்தை.... நீ....''

என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்வை சொல்லிற்று. கெஞ்சியது...

நளினி! இவர்தான் பாஸ்கர். உனக்குத் தெரியும். இது அவர் மனைவி விமலா...! 'பார்க்கணும் — பார்க்கணும்... எப்படி இருப்பாங்க'ன்னு துடிச்சுக்கிட்டு இருந்தியே... இப்பப் பாரு...


பார்த்தாள்.

'பழசெல்லாம் நான் மறந்துட்டேன். அழகான கணவன், நிறையச் சம்பளம், குழந்தை. உனக்கு... உனக்கு மட்டும் தெரிஞ்சதை... ரகசியத்தை நீ....' சற்றுமுன் கெஞ்சின அதே கண்கள்....

சின்னதாய் ஒரு பெருமூச்சு விட்டாள்.

அப்பொழுதுதான் விமலாவை முதன் முதல் பார்க்கிற மாதிரி, அவள் பக்கம் திரும்பிச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பு அப்புறம் நிற்கவேயில்லை. நினைத்து நினைத்து வெகு நேரம் வந்து கொண்டேயிருந்தது!



காதலி: ''கண்டல் விக்கிறவன்கிட்டே, கடன்பாக்கி வைக்காதீங்கன்னு சொன்னேனே கேட்டீங்களா?''

காதலன்: ''என்னாச்சு...?''

காதலி: ''நம்ம காதல் பத்தி, என் வீட்டுக்கு 'மொட்டைக் கடிதாக' போட்டுட்டான்.''

— ஆர். வசந்த குமார்.



கனம் கோர்ட்டார் அவர்களே...

கூாபரே ஆடும் சிலுக்கு ஸ்மிதா. அவருடைய அண்ணன் சந்திரசேகர். இந்த இருவருக்கும் சேர வேண்டிய சொத்தை ஒரு மொட்டை வில்லன் கபளீகரம் பண்ணி விட, மொட்டை வில்லனைப் பழிவாங்க, சொத்துக்களை அவரிடமிருந்து மீட்க, மலேஷியாவிலிருந்து மொட்டை வில்லனைத் துரத்திக் கொண்டு சந்திரசேகரும் சிலுக்கும் மெட்றாஸிற்கு வந்திருக்கிறார்கள். மொட்டை வில்லன் ஆள், படை ஆயுதம் என்று இன்ன பிற சமாசாரங்களோடு ராஜ்யம் நடத்திக் கொண்டிருக்க, கண் இல்லாத சந்திரசேகர் வெறும் சத்தத்தை வைத்துக் கொண்டு துப்பாக்கியால் குறி தவறாமல் சுடப் பழகிக் கொண்டிருக்கிறார்.

இந்த சிலுக்கின் மீது ஆசைப்பட்டுக் கொண்டு சீனியர் வக்கீல் எஸ். எஸ். சந்திரன், மொட்டை வில்லனிடம் லீகல் அட்வைஸராகப் பணிபுரிந்து கொண்டிருப்பதை உதறுகிறார்.

மொட்டை வில்லன் சிலுக்கு ஸ்மிதாவை ஆள் வைத்துக் கொன்று விட, கொன்றது எஸ். எஸ். சந்திரன்தான் என்று சந்திரசேகர் சொல்ல மகா மகா ஸீனியர் வக்கீல் கொலைப் பழியில் மாட்டிக் கொள்கிறார்.

புத்திசாலி வக்கீலாக இருந்தும் வாய்ப்பே கிடைக்காத சத்யராஜ், அந்த ஸீனியர் வக்கீலிடம் ஜூனியர் வக்கீலாக வேலைக்குச் சேர்ந்து விட, ஸீனியரைக் கொலைப் பழியில் இருந்து காப்பாற்றப் புறப்படுகிறார்.

அட, கதை பரவாயில்லையே என்று ஓர் ஓரம் தோன்றினாலும் கூட அதைப் படமாகக் கொடுத்திருக்கும் விதம் இருக்கிறதே....

அய்யா, சத்யராஜ் என்று ஒரு அபாரமான நடிகர். அவருக்கு என்ன மேக்கப் போட்டாலும் அதில் ஜமாய்த்து விடுவார். இந்த நம்பிக்கை தப்பில்லை.... ஆனால்....

தோட்டத்தைக் கொத்திச் சமன்படுத்தும் மண்வெட்டி (சத்யராஜ்) மட்டும் பளப்பளவென்று, கூர் முனையுடன் இருந்து விட்டால் போதுமா? தோட்டக்காரர் (டைரக்டர்) கொஞ்சமாவது தன் திறமையைக் காட்ட வேண்டாமா?

இடைவேளைக்கு முன் ஜனகராஜ் அடையார் பார்க் ஹோட்டல், அப்புறம் சித்ரா ஒயின்ஸ் அப்புறம் கள்ளச் சாராயம் என்று தகுதியை மாற்றிக் கொண்டே சத்யராஜை இழுத்தடித்துக் கொண்டு 'தண்ணி' போடும் ஸீன் நல்ல கலகலப்பு.

ஸ்ரீவித்யாவிற்கும், சத்யராஜிற்கும் இடையில் அம்மா — மகன் உறவைச் சில 'பளிச்' வசனங்களுடன் நிறுவியிருப்பது நல்ல துடி துடிப்பு.

தண்ணீருக்கடியில் சண்டை, நூறு வெள்ளை மாருதிகளின் அணிவகுப்பு, சத்யராஜ் ஒவ்வொரு டெலிபோன் பூத்தாகத் தேடி மோட்டார் சைக்கிளில் சீறுவது ஆகிய இடங்களில் நல்ல பரபரப்பு.

சத்யராஜ் வழக்கம் போல் நன்றாக நடித்திருக்கிறார். அம்பிகா ஓ.கே. எஸ். எஸ். சந்திரனுக்கு குணசித்திர வேடம். இது ஓர் ஆச்சரியம் என்றால் அதில் காமெடி வாசனை கொஞ்சம் கூட வராமல் அந்த பாத்திரத்தை எஸ். எஸ். சந்திரன் மெருகேற்றி இருப்பது இன்னொரு ஆச்சரியம்.

க்ளைமாக்ஸுக்காகக் காத்திருக்கும் நேரத்தில் ஒரு அனாவசியப் பாட்டு. அதில் ஆர்மி டிரெஸ், நேவி டிரெஸ், ஏர் ஃபோர்ஸ் டிரெஸ் மாட்டிய முந்நூறு எக்ஸ்ட்ராக்கள். யார் கேட்டார்கள்?

டிஸ்கோ சாந்தி அரைகுறை டான்ஸ் ஆடி முடித்த பிற்பாடு நீருக்கடியில் மூழ்கடிக்கப்பட்டு சாகடிக்கப்படுகிறாரே எதற்காக? சந்திரசேகர் நாய்கள் கடித்ததாலா கண் பார்வை அற்றவராக மாறிப் போனார்? சந்திரசேகரும் சத்யராஜும் வில்லன் கோட்டையில் மாட்டிய பின் சூப்பர்மேன் சத்யராஜ் எப்படித் தப்பித்தார்? சத்யராஜ் மெஷின் கன்னால் சுட்டால் வெடிகுண்டை வீசி எறிந்த மாதிரி ஒரு எஃபெக்ட் கிடைக்கிறதே, எப்படி? நான்கு டிஜிடல் வாட்ச்களை ஜட்ஜ் டேபிளில் வைத்துக் காட்டுகிறார்களே அந்த வாட்ச்களில் என்ன மர்மம் பொதிந்து இருந்தது?

இடைவேளைக்கப்புறம் கொஞ்சம் புத்திசாலித்தனமாக்த் திரைக்கதையை அமைத்திருக்கலாம். அதை விட்டு விட்டுக் குட்டி விமானங்கள், கிளைடர் விமானம், வெடிகுண்டுகள், கார் துரத்தல்கள், இயந்திரத் துப்பாக்கிகள், டிஸ்கோ சாந்தி டான்ஸ், நீருக்கடியே சண்டை என்று மணிவண்ணன் என்னென்ன வண்ணங்கள் முடியுமோ அத்தனை வண்ணங்களையும் சேர்த்துச் சொதப்பி விட்டார் சொதப்பி.

— ஜெயமன்மதன்

ஆகவே, செக்‌ஷன் 302 படி...

22

அறையின் கதவைச் சாத்தி விட்டு, கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டிக் கொண்டு சில வினாடிகள் நிவிதாவையே சலனமில்லாமல் பார்த்தான் ஷியாம்.

நிவிதா பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள். அவனின் உணர்ச்சியைப் பிரதிபலிக்காத பார்வையின் பொருள் விளங்காமல் நின்றாள்.

அவளுக்கு மிக அருகில் வந்து நின்றான்.

"நேத்து நான் போன்ல உங்கக்கிட்டே பேசினதை யோசிச்சுப் பார்த்தீங்களா? என்னை மன்னிச்சீங்களா?"

நிவிதா மௌனமாக நின்றாள்.

"ரோஷமுள்ள எந்தப் பெண்ணாலையும் முடியாது. எனக்குத் தெரியும். நீங்க இன்னும் என் மேல் ஆத்திரத்தோடதான் இருக்கீங்க. கழுத்தை நெரிச்சா என்னன்னு சிந்திக்க வைக்கிற கோபத்தோடதான் இருக்கீங்க. அப்படித்தானே?"

என்ன பதில் சொல்வது என்று புரியவில்லை. ஆமாம் என்று உண்மையைச் சொல்வதா? இல்லை என்று பொய் சொல்வதா? நேற்று நடந்த சம்பவங்களுக்குப் பிறகு... அடியோடு ஒரு மனிதன் மாறிவிடச் சாத்தியம் இருக்கிறதா? என்னிடம் மன்னிப்புக் கேட்டு நல்லுறவை வளர்த்துக் கொள்ள ஏன் பிரயத்தனப்படுகிறான்?

"நிவிதா!"

"என்ன?"

சில வினாடிகள் அமைதியாக இருந்துவிட்டு, "என்னை மன்னிச்சிடுங்க; ப்ளீஸ் என்னை மன்னிச்சிடுங்க" என்று அவள் எதிர்பாராத விதமாகச் சட்டென்று அவள் கால்களில் விழுந்தான் ஷியாம்.

அவசரமாக விலகிக் கொண்டாள்.

"என்ன இது? எந்திரிங்க."

"உங்க கால்ல விழறதை நான் கேவலமா நினைக்கவே இல்லைங்க. தப்பில்லைங்க. நேத்தோட என் ஈகோ செத்துப் போச்சுங்க. நீ ஒரு மனுஷனாடான்னு என் மனசாட்சியே என்னைக் கேள்வி கேட்க ஆரம்பிச்சிடுச்சிங்க..." என்று எழுந்து கொண்டான் ஷியாம்.

அமைதியாகத் தன் நாற்காலியில் அமர்ந்தான். பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே சொன்னான்: "நடந்தது நமக்குள்ளேயே இருக்கணும்னு நான் விரும்பறேன். நேத்தோட அதை ரெண்டு பேரும் மறந்துடணும்னு ஆசைப்படறேன். நேத்து வாட்ச்மேனுக்குப் போலீஸ் வந்தது தெரியும். எதுக்காகன்னு விவரமாத் தெரியாது. அவனைக் கேக்க வேண்டிய கேள்விகளைக் கேட்டுட்டு ஹாலுக்கு வெளில அனுப்பிட்டார் இன்ஸ்பெக்டர். நான் அவனைக் கூப்புட்டு 'ஆபீஸ் ரகசியம் இது. அதனால் போலீஸ் வந்தது பத்தி யார்கிட்டேயும் சொல்லக் கூடாது'ன்னு சொல்லிட்டேன். நடந்த கசப்பான சம்பவத்தை நீங்களும் வெளில யார் கிட்டேயும் சொல்ல மாட்டீங்கன்னு நம்புறேன்."

"ஆபீஸ்ல நான் எல்லார்கிட்டேயும் சொல்லி உங்க மானத்தை வாங்கிடப் போறேனேங்கிற பயமா?"

"ஆமாம். சேலை அனுப்பினதுக்கே நோட்டீஸ் போர்டிலே நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி லெட்டர் எழுதி வச்சீங்க. அதான்...."

"என் டைப் தெரிஞ்சுக்கிட்டிங்கல்ல, அதுக்கப்புறமும் எவ்வளவு நாடகம் நடத்தினீங்க?"

"ப்ளீஸ்... இன்னும் கூடா நீங்க என்னைத் திட்டலாம். நீங்க திட்டத் திட்ட என் மேல் உங்க கோபம் குறையும். அதான் எனக்கு வேணும்."

"மிஸ்டர் ஷியாம், இது ஒரு வகையான வழிமுறை. அடிக்க வர்றவனை, அடிச்சுடுவியான்னு கோபமாக் கேட்டா அவன் வெறி தூண்டப்படும். அதே சமயம் 'இப்ப என்ன, என்னை அடிக்கணும். அவ்வளவுதானே, அடிச்சுக்க'ன்னு சொன்னா அவன் வேகம் இறங்கும். ஆச்சர்யப்பட்டு நிப்பான். அது மாதிரி நரித்தனமா, நயவஞ்சகமா எல்லாம் நடத்திட்டு, அதிலே தோத்ததும்... இன்னும் பாதிப்புகள் உங்களுக்கு ஏற்பட்டுடாமத் தப்பிச்சிக்கறதுக்காக இப்படித் தடால்னு பல்டியடிச்சிட்டீங்க. மன்னிப்பு, மன்னிப்புன்னு உருகறது எல்லாம் ஹம்பக்! யார்கிட்டே நடிக்கிறீங்க?"

ஷியாம் அமைதியாகக் கேட்டான்.

"பேசி முடிச்சிட்டிங்களா? நான் தவறை உணர்ந்து நொந்து போய்ப் பேசறேன். அதை ஹம்பக்ன்னு சொல்றீங்க. எப்படி நிரூபிக்கணும்னு சொன்னீங்கன்னா, அப்படி நிரூபிக்கத் தயாரா இருக்கேன்."

"ஷ்யூர்?"

"ஷ்யூர்!"

"நேத்து நீங்க என்கிட்டே நடந்துக்கிட்டதை உங்க கைப்பட எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தர்றீங்களா?"

"நிச்சயமா" என்று ஷியாம் மேஜை

மேலிருந்த தனது கம்பெனி லெட்டர் ஹெட்டையும், பேனாவையும் தயார்ப்படுத்திக் கொண்டு, "வாக்கியத்தை நீங்க சொல்றீங்களா, இல்லை நானே எழுதிக்கட்டுமா?" என்று கேட்டான்.

கொஞ்சம் திணறித்தான் போனாள் நிவிதா. இவனைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே.. மறுப்பான், சமாளிப்பான் என்று நினைத்தால் எழுதித் தருகிறேன் என்கிறானே...

"சரி. நானே எழுதறேன்."

ஷியாம் சரசரவென்று எழுதி, கையெழுத்துப் போட்டு விட்டு, "படிக்கிறேன். சரியா இல்லைன்னா சொல்லுங்க. வேறே எழுதித் தர்றேன். இந்த நிறுவனத்தின் ரீஜனல் மேனேஜராகிய நான் இந்த அலுவலகத்தில் கணக்குப் பிரிவில் வேலை பார்க்கும் செல்வி நிவிதாவின் மேல் ஆசைப்பட்டு, அவளை நேர்மையற்ற முறையில் அடைய வேண்டும், அனுபவிக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன், அவளை அலுவலகத்தில் சில சிக்கல்களில் மாட்ட வைக்கத் தில்லு முல்லுச் செய்ததோடு, அதையே காரணம் காட்டி என்னுடன் ஒரு தடவை படுக்கையைப் பகிர்ந்து; கொள்ளச் சம்மதித்தால், இந்தச் சிக்கல்களில் இருந்து விடுவிக்கிறேன் என்று நிபந்தனை விதித்தேன். தன் புத்திசாலித்தனத்தால் அவள் தானாகச் சிக்கலில் இருந்து விடுபட்டு என் நிபந்தனைக்குச் சம்மதிக்கவில்லை. அவளிடம் நான் நாகரிகமற்ற முறையில் பேசியது முறையற்ற செயலே. இப்படிக்கு, ஷியாம்." படித்து முடித்து அவளிடம் நீட்டினான், "எதையும் விட்டுடலையே...?"

சற்றுத் தயங்கி விட்டு அந்தக் கடிதத்தை வாங்கிக் கொண்ட நிவிதா, "இதை வச்சிக்கிட்டு நான் என்ன வேணாலும் செய்யலாம், தெரியுமா?" என்றாள்.

"தெரியும். செய்யணும்னுதான் ஆசைப்படறேன். ப்ளீஸ்...! நேத்தே சொன்னேனே, எனக்குத் தண்டனை வேணும் — தயவு செஞ்சு தண்டியுங்கன்னு. இந்த லெட்டரை ஆபீஸ்ல அத்தனை ஸ்டாபுக்கும் ஜெராக்ஸ் எடுத்துத் தரணும்னு ஆசைப்படறீங்களா? செய்ங்க. அதிலே உங்க மனசு சமாதானமாகும்னாச் செய்ங்க."

"செய்ய மாட்டேன்ங்கிற நம்பிக்கையா?"

"நீங்க மனசில் என்னால் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கீங்க. அதுக்காக நான் வெக்கப்படறேன். அதுக்கான தண்டனைக்குத் தயாரா இருக்கேன். இது வேஷமோ,



செக்ஷன் 302 படி குற்றவாளி யார்? ஊகித்தால்

பரிசு ரூ 1000

இந்தக் கதையின் முடிவு நெருங்கும் போது வாசகர்களுக்கு ஒரு போட்டி காத்திருப்பதாகக் கூறினோம். இதோ:

1. இந்தத் தொடரில் உங்களைக் கவர்ந்த 'நறுக்'கென்ற வரிகள் யாவை?

2. செக்ஷன் 302—க்கான குற்றம் கொலை. கதையில் அந்தக் குற்றத்தைச் செய்யப் போகிறவர் யார்?

3. கொலை செய்யப்படும் நபர் யார்?

மூன்று பதில்களை ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி, உங்கள் விலாசத்துடன் அனுப்பவும். "செக்ஷன் 302 போட்டி" என்று தலைப்புத் தரவும். முடிவு தேதி: 22.6.88.

ஆசிரியர், கல்கி, சென்னை—600 032

நடிப்போ இல்லை. வேறே இன்னும் எப்படி நிரூபிக்கிறது நிவிதா?"

"ஒரு புகார் மாதிரி எழுதி, உங்க லெட்டரை இணைச்சி நம்ம கம்பெனி சேர்மனுக்கு அனுப்பி வச்சா என்ன ஆகும் தெரியுமா?"

"ஓ. அதுதான் உங்க நோக்கமா? அதுக்குதான் லெட்டர் கேட்டீங்களா? அப்படின்னா என் லெட்டருக்கும் அவசியமில்லை. நீங்க மெனக்கெட்டு அனுப்பணும்னே அவசியமில்லை. இதோ பார்த்தீங்களா போனோகிராம் கொடுக்கிறதுக்காகத் தயாரா செய்தி எழுதி வச்சிருக்கேன்."

குறிப்புப் பேடில் எழுதியிருந்ததைக் கிழித்து அவளிடம் காட்டிக் கொண்டே ரிஸீவர் எடுத்து போனோகிராம் சர்வீசுக்கான எண்களைச் சுழற்றினான். தனது எண்ணைச் சொன்னான். ரிஸீவரை வைத்தான்.

அதைப் படித்து விட்டு மிகவும் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள் நிவிதா. அந்த வாக்கியங்களை அவளால் நம்பவே முடியவில்லை.

டெலிபோன் ஒலித்தது. எடுத்தான்.

"யுவர் ஃபோனோகிராம் ப்ளீஸ்..."

அவளிடமிருந்து அந்தச் சீட்டை வாங்கி முதலில் கம்பெனியின் சேர்மன் விலாசத்தைச் சொல்லி விட்டு, "எனது சொந்தக் காரணங்களால் உடனடியாக நான் என் வேலையை ராஜினாமா செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருப்பதால், இதையே எனது ராஜினாமா கடிதமாக ஏற்றுக் கொள்ளவும். விரைவில் என்னை மாற்றி விட, மாற்று நபரை அனுப்பக் கோருகிறேன். நன்றி. ஷியாம், ரீஜனல் மேனேஜர்" என்று ஆங்கிலத்தில் சொன்னான். வைத்தான்.

அதிர்ச்சி மாறாமல் நின்றாள் நிவிதா.

"ஒரு ஜென்டில்மேன் மாதிரி இப்ப நடந்துக்கிற நீங்க ஏன் இப்படி நேத்து...."

"ப்ளீஸ்.. மறக்க விரும்புறேன் அதை. எனக்குள்ளே ஒரு திமிர் பிடிச்ச சாத்தான் நுழைஞ்சிருந்தது. எப்ப நான் தோத்தேனோ, அப்பவே அது ஓடிப் போய்டுச்சி. உங்களைக் கூப்பிட்டது மனப்பூர்வமா மன்னிப்புக் கேட்கத்தான். கேட்டுட்டேன். மன்னிக்கிறதும், மானத்தை வாங்கறதும் உங்க இஷ்டம். என்னைப் பொறுத்த வரைக்கும் எனக்கு நானே கொடுத்துக்கிற தண்டனைதான் இந்த ராஜினாமா. இன்னும் ஒரு வாரத்திலே எனக்கு ரிலீவர் வந்துடுவார். அது வரைக்கும் நான் எப்பவும் போல கௌரவமா இங்கே வேலையைத் தொடர உதவினாப் போதும்" என்று ஷியாம் எழுந்து வாசல் கதவின் தாழ் நீக்கி விட்டுத் தன் நாற்காலியில் அமர்ந்து கொண்டு அலுவலக சம்பந்தப்பட்ட ஃபைலை எடுத்துக் கொண்டான்.


வாக்குமூலம்மாக எழுதிக் கையெழுத்திட்டுத் தந்துள்ள அவனின் கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு ஒரு வினாடி யோசித்தாள் நிவிதா.

இதை என்ன செய்வது?

இதுவரை இவன் திருந்தியதாகச் சொன்னதை நம்புகிறோமோ, இல்லையோ... தன் வேலையை ராஜினாமாவே செய்திருப்பது என்பது... உண்மையில் பிரமிப்பு ஏற்படுத்தும் விஷயமாகத்தான் இருக்கிறது.

ஷியாம் என்னை அடைய நினைத்தது எல்லை மீறிய ஆசை. ஆனால் என்னை மடக்க அவன் கையாண்ட வழிகள் புத்திசாலித்தனமானவை. அந்த நடவடிக்கைகளில் என்னை அடையும் நோக்கத்தை விட, தன் புத்திசாலித்தனம் வெல்ல வேண்டும் என்கிற தவிப்பே அதிகம்.

அவன் புத்திசாலித்தனம் தோற்றதும் — மனத்தில் அழுக்கான எண்ணங்களின் மேல் விவேகமும், பக்குவமும் போர் தொடுத்திருக்கலாம். அவமானப்பட்டு நின்ற நிலை சுய இரக்கத்தை அதிகப்படுத்தி



அவளுக்கும் கவனிப்பு தேவை !

காலை உணவு தயாரித்தல், என் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப தயார் செய்தல், பகலுணவு தயாரித்தல், கடைகளுக்குப் போவது, வீட்டையும் குடும்பத்தையும் பார்த்துக் கொள்வது...நாள் முழுவதும் ஓயாத வேலை.


ஹார்லிக்ஸ் பருகினால் ஊட்டச்சத்து கிடைக்குமென என் டாக்டர் சிபாரிசு செய்தார். நாள் முழுவதும் எனக்கு வேண்டிய சக்தியையும், பலத்தையும் ஹார்லிக்ஸ் அளிக்கிறது—மதிப்பு மிக்க மாலை நேரங்களை என் குடும்பத்துடன் அனுபவிக்க புத்துணர்ச்சியோடு இருக்கிறேன்.

ஹார்லிக்ஸ் முக்கிய இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது. நாள் முழுவதற்கும் தேவைப்படும் சக்தியும் பலமும் தரும் புரதம், வைட்டமின்கள், தாதுப்பொருட்கள், மாவுச்சத்து, ஆகிய முக்கிய இயற்கை ஊட்டச்சத்துக்கள் இதில் உள்ளன.

டாக்டர்கள் உலகெங்கும் ஹார்லிக்ஸை சிபாரிசு செய்வதில் வியப்பில்லை. இது குடும்பம் முழுவதற்குமே ஊட்டச்சத்து அளிக்கும் மூலாதாரமான பானம் என்று நிரூபிக்கப்பட்டது.



இல்லத்தரசிக்கு
சக்தியூட்டும் பானம்.



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 5817 TAM

யிருக்கலாம். வெறிக்குப் பதிலாக விரக்தி! இல்லறம் பிடிக்காதவன் அதன் உச்சத்தில் இரண்டு வழிகளைக் கையாள்கிறான். ஒன்று தற்கொலை. மற்றது துறவற நிலை. அதே போல் தன் தோல்வியின் விளைவாகப் பழி வாங்கும் உணர்வு அதிகமாவதற்குப் பதிலாக 'ச்சே! ஒரு பெண்ணிடம் தோற்று விட்டோமே' என்கிற விரக்தி நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.

"நீங்க போகலாம் நிவிதா!" என்றான் ஷியாம்.

"இந்த லெட்டர்..."

"நீங்க அதை எப்படி வேணும்னாலும் பயன்படுத்திக்கலாம். கேட்டீங்க. எழுதிக் கொடுத்துட்டேன். நோட்டீஸ் போர்டிலே வேணும்னாலும் பியூனை விட்டுப் பின் பண்ணச் சொல்றேன் – அப்படி செஞ்சா உங்க மனசு திருப்தியாகும்னா."

"தேவையில்லை" என்ற நிவிதா அந்தக் கடிதத்தை இரண்டாக, நான்காக, எட்டாகக் கிழித்து அவன் மேஜைக்கு அருகில் இருந்த குப்பைக் கூடையில் போட்டாள்.

"மிஸ்டர் ஷியாம், உங்க மேல் எனக்கிருந்த கோபமும், ஆத்திரமும் பஞ்சாப் பறந்து போச்சின்னு என்னால் பொய் பேச முடியாது. இன்னும் ஒரு மூர்க்கமான வேகம் உள்ளே சுழண்டுக்கிட்டுத்தான் இருக்கு. மன்னிக்கவும், மறக்கவும் முயற்சி பண்றேன். உண்மையைச் சொல்லணும்னா, நீங்க ராஜினாமா பண்றது அதிர்ச்சியாவும் இருக்கு. அதே சமயம் நிம்மதியாவும் இருக்கு. உங்களுக்கு நீங்களே தண்டனை கொடுத்துக்கிறதாச் சொன்னீங்க. அதிலே தலையிடவோ, வேணாம்னு மறுக்கவோ நான் தயாரா இல்லை. ஒரு ஜென்டில்மேனா என்னைக்கும் இருங்க. நடந்ததை யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன்."

நிவிதா அறையை விட்டு வெளியேறினாள்.

ஷியாம் அமைதியாக அப்படியே அமர்ந்திருந்தான் – பல வினாடிகள். விடாமல் ஒலித்த போனை எடுத்தான். அலுவலக வேலைகளில் ஆழ்ந்தான்.


வீட்டின் உள்ளே வேகமாக வந்தான் தீபக்.

ஸோபாவில் படுத்துக் கொண்டு, புகை பிடித்துக் கொண்டு, விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த ஷியாமின் தோளைத் தொட்டு உலுக்கினான்.

"உன் ஆபீஸ் போய்ட்டு வர்றேன். என்ன ஆச்சு உனக்கு? பைத்தியம் பிடிச்சுப் போச்சா? ராஜினாமா தந்தி அனுப்பியிருக்கியாமே... ஏன்? சொல்லு... ஏன் ஷியாம்?"

பதில் சொல்லாமல் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

(தொடரும்)




குட்டிக்யூரா அழகி
Cuticura
TALCUM POWDER
SOOTHES
COMFORTS
BEAUTIFIES
குட்டிக்யூரா
டால்க்
இளம் பெண்கள் இதை
விரும்புவது இயற்கையே
CHAITRA-B-MP-2 TMR

தத்ரூப இயற்கை வர்ணம், அங்கே நீங்கள் அரங்கிலிருப்பது போலவே இருக்கும்.



PHX TRENDSET
ஒலிம்பிக் ஸ்டார்

இப்போது, ஸியோல் நகருக்கு வெளியே நடைபெறும் ஒலிம்பிக்ஸை நீங்கள் உங்கள் வீட்டில் அமர்ந்தபடியே கண்டு களிக்கலாம்—உறுதுணை நவீனப் பொலிவுள்ள புதிய வெர்ட்டிகல் PHX டிரெண்ட்ஸெட். இதனை நெருங்கி உற்று நோக்குவீரானால் புரியும்...

சிறுநுட்ப உத்தியாகிய குரோம் ஸர்க்யூட், வர்ணங்களை நிரந்தர இயற்கைப் பண்போடு நிலைபெறச் செய்கிறது.

இதுநாளையப் புதுநவீன ஆடியோ தொழில்நுட்பம், 12 வாட் உச்ச அவுட்புட் நிலையிலும் தெள்ளத் தெளிவான ஒலி வழங்குகிறது.

வேறெந்த டெலிவிஷன் செட்டையும் விட மேம்பட செயல்படுவதற்கென ஆறு இதர ஆட்டமேட்டிக் சிறப்புகள் அடங்கியது PHX ஒலிம்பிக் ஸ்டார்.

மேலும், எப்போதேனும் சர்விஸிங் உங்களுக்கு தேவைப்படுமானால், பிலிப்ஸ்- பயிற்சிபெற்ற தொழில் வல்லுனர், ஃபோன் மூலம் கூப்பிடு தூரத்திலே எட்டுகிறார் உங்களுக்கு. புதிய PHX டிரெண்ட்ஸெட், இதனை நெருங்கிப் பார்வையிடுங்களேன்.



தவிர, PHX 20Cயும் கிடைக்கிறது.

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்

இது ஹாலந்து நாட்டு N.V. பிலிப்ஸ் கம்பெனியின் இணை நிறுவனமாகும்.

* 1988 ஒலிம்பிக்ஸின் அதிகாரபூர்வமான ஏற்பாட்டு ஆதரவாளர்கள்.*


OBM/2556/TAM

கொஞ்சம் கொரிக்க...




● உங்கள் வீட்டிலும், எங்கள் வீட்டிலும் கொலு என்றால் என்ன வைப்போம்? சாமி பொம்மைகள், செட்டியார் கடை, தசாவதாரம் என்று இப்படி வழக்கமானவை. ஆனால் இளைஞர் சங்கர், வித்தியாசமானவர். ஒவ்வொரு வருஷமும், ஏதாவது ஓர் இடத்தை அப்படியே மினி மாடலாய்ச் செய்து, கொலுவில் வைத்து, வருகிறவர்களை ஆச்சரியப்படுத்தி விடுவார். லேட்டஸ்டாக அவர் செய்தது படத்தில் உள்ள அண்ணா மேம்பாலம்.

"பல கோணங்களிலும் அண்ணா மேம்பாலத்



தைப் படம் எடுத்துக் கொண்டு எடுத்தேன். கார்டு போர்டு, பிளைவுட், கலர் பேப்பர் இவைகளை உபயோகித்து மாடலை அமைத்தேன்." என்று கூறும் சங்கரின் ஆற்றலை அறிந்த தமிழ்நாடு சமூகநல வாரியம், ராஜாஜி ஹாலில் இவர் உருவாக்கிய பல மாடல்களைப் பொது மக்கள் பார்வைக்கு வைக்க ஏற்பாடு செய்தது. பார்த்தவர்கள் பாராட்டினார்கள்.

தகவல்: ஜானி.



● கடிகாரத்துக்குள் இப்போது கம்ப்யூட்டர் வந்து விட்டது. அதனால் இதய நோய் உள்ளவர்கள் தங்கள் இதயத் துடிப்பு சரியாக இருக்கிறதா என்று அவ்வப்போது கைக்கடிகாரத்தில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். பேசும் கடிகாரங்கள் உள்ளன. அது மணி கூறும்; நாழியாகி விட்டது என்று எச்சரிக்கும்! கடையில் சாமான்கள் வாங்கினால் விலைகளைப் பெருக்கி கூட்டி சரி பார்க்கலாம். மேலும் அன்று யார் யாரைப் பார்க்க வேண்டும்; ரயில் எத்தனை மணிக்கு போன்ற பன்னிரண்டு முதல் பதினாறு தகவல்கள் வரை பட்டனை அழுத்தினால் பெறலாம்!

— நியூஸ் வீக்.

● மொகலாய மன்னர் ஔரங்கசீப்புக்கும் ஸங்கீதத்துக்கும் உள்ள 'இனிய தொடர்பு' பற்றி எல்லோருக்குமே தெரியும். அவர் காலத்தில் இசைக் கலைஞர்கள் வறுமையில் வாடினர். தங்கள் அவதியை மன்னர் கவனத்துக்குக் கொண்டு வர அவர்கள், பாடை ஒன்று தயாரித்தனர். அதன் மேல் பரம ஏழை ஒருவனது சடலம் போல் பொம்மை உருவாக்கிக் கிடத்தி கந்தல் துணியால் போர்த்தி, நால்வர் தூக்கிச் செல்ல மற்ற இசைக் கலைஞர்கள் சோக கீதம் பாடிக் கொண்டு அரண்மனை வீதி வழியே சென்றனர். உப்பரிகையில் நின்ற மன்னர், "யாருடைய சவம்?" என்றார்.

"ஸங்கீதக் கலை அரண்மனையின் புறக்கணிப்பால் செத்து விட்டதல்லவா? அதைத்தான் தூக்கிச் செல்கிறோம்..."


சற்றும் தயங்காமல் மன்னர், "அப்படியா... சபாஷ்... சபாஷ்... நல்ல காரியம்.. செய்கிறீர்கள்! சவக்குழியை ஆழமாகத் தோண்டுங்கள்! ஆழமாகப் புதைத்து விடுங்கள்...!" என்றார்.

— தேதியூர் பாலு.

● விமானத் தயாரிப்பில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம்; வியக்கிறோம். ஆனால் விஞ்ஞானிகள் இயற்கையில் அற்புத விமானமான தட்டாம்பூச்சியைப் பார்த்து அதிசயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! ஒரே தட்டாம்பூச்சி, ஹெலிகாப்டர் போல நேரே மேலே ஏறுகிறது; கடல் விமானம் போல் தண்ணீர் மீது உராய்ந்தபடி பறக்கிறது; ஆகாயத்தில் முன்னோக்கிப் பறக்கிறது; ஒரே இடத்தில் நிலையாக இருந்து பறக்கிறது; பின்னோக்கியும் பறக்கிறது! நேர் கோணத்தில் திரும்புகிறது! செங்குத்தாகக் கீழே இறங்கி அமர்கிறது.

இத்தனை பறக்கும் வல்லமை கொண்ட வேறு பூச்சியோ பட்சியோ கிடையாது. விமான விஞ்ஞானிகள் பட்டாம்பூச்சியை ஆராய்வதன் மூலம் விமானத்தில் பல புதிய அம்சங்களைப் புகுத்த முடியுமா என்று பார்க்கிறார்கள். பின்னோக்கிப் பறக்கும் விமானமும் நேர் கோணத்தில் திரும்பும் விமானமும் இது வரை எந்த விஞ்ஞானியாலும் தயாரிக்கப்படவில்லை. தவிர, பலவித விமானங்கள் தனித்தனியே செய்கிற காரியத்தை ஒரே தட்டாம்பூச்சியால் எப்படி சாதிக்க முடிகிறது என்பது விஞ்ஞானிகளுக்கே ஒரே ஆச்சர்யம்!

—ஸ்பான்.



அது ஒரு திரைப்படத்தின் நூறாவது நாள் விழா. வழக்கமான 'பந்தா'வுடனும், செயற்கைத்தனங்களுடனும் விழா நடந்து கொண்டிருந்தது. நடிகர்களும், டெக்னீஷியன்களும் படத்தின் வெற்றிக்கு டைரக்டர் ராமநாதன் தான் காரணம் என்று புகழ்ந்து கொண்டிருந்தார்கள். டைரக்டர் ராமநாதனுக்கு இந்தப் படம் மூன்றாவது வெற்றிப் படம். அவருடைய மூன்று படங்களுமே வசூலில் சாதனையை ஏற்படுத்தியிருந்தன. பத்திரிகை நிருபர்கள் பலர் அவரைச் சுற்றிக் கொண்டு கேள்விகளால் துளைத்துக் கொண்டிருந்தனர். தம் ஒரு கையில் பைப்பைப் பிடித்துக் கொண்டு அதன் புகையை ரசித்த வண்ணம் மிகவும் அமைதியாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தார் ராமநாதன்.

''நீங்கள் புதுமுகங்களை வைத்தே படம் எடுப்பது ஏன்?''

''பெரிய, அனுபவம் வாய்ந்த நடிகர்களைப் போட்டால் அவர்கள் சொல்கிறபடி



அவரவர் விருப்பப்படியே...

தான் நாங்கள் படம் எடுக்க வேண்டியுள்ளது. ஆனால் புதுமுகங்களைப் போட்டால் அந்தத் தொல்லை இல்லை. மேலும் நான் எதிர்பார்க்கிற அளவிற்கு மேலேயே எனக்கு புதுமுகங்கள் 'கோவாப்ரேஷன்' கொடுக்கிறார்கள்.''

''உங்களின் அடுத்த படத்தை 'அவார்ட்' கிடைக்கும்படி எடுப்பீர்களா?''

''அரசு தரும் 'அவார்ட்' எனக்கு முக்கியமில்லை. ஜனங்களின் ஆதரவும், ரசிகர்களின் பாராட்டும்தான் எனக்கு 'அவார்ட்'. அதை நான் என்னுடைய ஒவ்வொரு படத்திற்கும் வாங்கிக் கொண்டுதானே உள்ளேன்'' என்று பதிலளித்த ராமநாதன் தம் உதவியாளரைப் பார்த்தார். அவர் அருகில் வந்ததும், ''லேசா நெஞ்சு வலிக்குது. பேட்டியைச் சீக்கிரம் முடிச்சிக்கிட்டு நான் டாக்டர் ராகவனைப் பார்க்கணும். வீட்டுல இருக்காரான்னு போன் பண்ணிக் கேட்டு ஏற்பாடு பண்ணு'' என்று காதோடு சொன்னார்.

அதற்குள் ஒரு நிருபர் ''சார் கடைசியா ஒரே ஒரு கேள்வி...'' என்று தன் கண்ணாடியைச் சரிசெய்தபடி கேட்டார்.

''கேளுங்க!''

''உங்க படத்துல 'செக்ஸ்'–க்கு அதிகமா இடங் கொடுக்கறீங்க. தேவையில்லாத இடத்தில கூட அந்த மாதிரி காட்சிகள் வருதுன்னு சொல்றாங்களே, இது ஜனங்களைத் தவறான பாதையில கூட்டிக்கிட்டு போகுதில்லையா? இதப்பத்தி...'' என்றவரை இடைமறித்தார் ராமநாதன்.

''ஒரு டைரக்டர் தயாரிப்பாளரையும் மனசுல வெச்சுக்கிட்டுத்தான் படம் எடுக்கணும். ஜனங்க எதை ரசிக்கிறாங்களோ அதைக் கொடுத்தாத்தான் எங்களால தயாரிப்பாளருக்குக் காசு கிடைக்கும். இப்ப ஜனங்க செக்ஸை விரும்புறாங்க. அதனால அதை என் படங்கள்ல நான் தர்றேன். அதனாலதான் என் படங்கள் வசூலில் சாதனை படைச்சுக்கிட்டிருக்கு. என்னையும் தயாரிப்பாளர்கள் தேடிக்கிட்டு வர்றாங்க. இதுல நீதி நியாயம்னு பார்த்துக்கிட்டிருந்தா, நாங்க மறுபடியும் எங்க ஊருக்கே போக வேண்டியதுதான்!''

பேட்டியை முடித்துக் கொண்டு, தயாராய் இருந்த காரில் தனியாகவே டாக்டர் ராகவன் வீட்டிற்கு புறப்பட்டார் ராமநாதன்.

''வாங்க டைரக்டர் சார், ஏது திடீர்னு இந்தப் பக்கம்?'' என்று கேட்டபடி ''மீட் டாக்டர் பாஸ்கர், என்னோட பெஸ்ட் பிரண்ட். ஸ்டேட்ஸ்ல செட்டில் ஆகியிருக்கான்'' என்று தம் பக்கத்தில் இருந்தவரை ராமநாதனுக்கு அறிமுகப்படுத்தினார் டாக்டர் ராகவன்.

ஒரு கையில் பைப்பைப் பிடித்துக் கொண்டு, ஒரு கையில் கார் சாவியைச் சுழற்றிக் கொண்டே வந்த ராமநாதன் சட்டென்று 'பைப்'பை அணைத்து விட்டுப் பாஸ்கரனுக்குக் கையை நீட்டியபடியே விஷயத்துக்கு வந்தார்.

''ஒண்ணுமில்ல ராகவன், ஏற்கெனவே உள்ள பிராப்ளம்தான், மறுபடியும் இன்னிக்குச் சாயந்திரத்தில இருந்து லேசா நெஞ்சு வலிக்குது. அதான் உங்களைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.''

அவரை 'செக்கப்' செய்து வழக்கமாக எழுதும் மருந்துகளை எழுதியபடியே அவரின் தற்போதைய படத்தைப் பற்றிப் பேசினார் டாக்டர் ராகவன்.

''ஜனங்களுக்குப் பிடிச்சிருக்கு. அதான் அம்பதாவது நாள், நூறாவது நாள்னு ஓடுது. எனக்கும் பணம் சேருது. சேர்ந்து என்ன பிரயோஜனம் அதுல பாதியை உங்களுக்கே கொடுத்திடறேனே!'' என்று புன்னகை செய்தபடியே எழுந்தார் ராமநாதன்.

அவரை வழியனுப்ப வந்த ராகவனை, ''நீங்க இருங்க, உங்க சிநேகிதரைக் கவனியுங்க, நான் போய்ட்டு வர்றேன்!'' என்று விடைபெற்று வெளியேறினார் ராமநாதன்.

சி.ரீ. சந்திரமௌலி

ராமநாதன் வெளியேறியதும் தம் மனத்திலுள்ள சந்தேகத்தைக் கேள்வியாக்கினார் பாஸ்கரன்.


''என்னடா ராகவா, இந்த ஆளு செயின் ஸ்மோக்கரா இருப்பான் போலிருக்கு. அதை நிறுத்தாம நீ தர்ற மருந்தினால எந்த விதப் பிரயோஜனமும் இல்லையே! நீ ஏன் அவர 'ஸ்மோக்' பண்ண வேணாம்னு 'அட்வைஸ்' பண்ண மாட்டேங்கிறே?''

''நீ சொல்றது வாஸ்தவந்தான் பாஸ்கர். ஊர்ல எத்தனையோ டாக்டருங்க இருக்கிறபோது, இவரு ஏன் என்னைத் தேடி வர்றாரு, தெரியுமா? நான் அவரு விருப்பப்படி 'டிரீட்மெண்ட்' தர்றதினாலதான். ஸ்மோக் பண்றதை அவரால விட முடியாது. அதை விட்டுடச் சொல்லி நான் சொன்னா அதுக்குப் பதிலா அவரு என்னை விட்டுட்டு வேற டாக்டர்கிட்ட போயிடுவார். அதனால எனக்குத்தான் நஷ்டம். அதனாலதான் நல்லதோ, கெட்டதோ அவர் விரும்புற மாதிரியே நான் டிரீட்மெண்ட் தர்றேன்!''

வெளியே காரில் அமர்ந்து, அதை ஸ்டார்ட் செய்ய நினைத்துக் கார் சாவியை டாக்டரின் மேஜை மேலேயே மறந்து வந்து விட்டதை அறிந்து அதை எடுப்பதற்காகத் திரும்பி வந்த டைரக்டர் ராமநாதன், டாக்டர் ராகவனும் பாஸ்கரனும் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுத் திடுக்கிட்டார்.

ஜனங்கள் ரசிக்கிறார்கள் என்பதற்காகத் தரக் குறைவான படங்களைத் தாம் கொடுப்பதற்கும், டாக்டர் ராகவனின் இந்த நடத்தைக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதைப் புரிந்து கொள்ள டைரக்டர் ராமநாதனுக்கு அதிக நேரமாகவில்லை.

வித்தியாசமான வெற்றிகள்



இராஜா பாலச்சந்தர்

நந்தனம்.

பிரும்மாண்டமான வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒய். எம். சி. ஏ. உடற்கல்விக் கல்லூரி.

கடல் போன்ற பசிய மைதானங்களை முதலில் கண்டபோது பிரமித்து நின்றாள் ஜெயந்தி.

அவளது சொந்தக் கிராமமே இந்த மைதானத்தின் ஒரு மூலையில் 'பதவிசாக' ஒண்டிக் கொள்ள முடியும். கிராமத்தின் ஓர் அங்கமான உயர்நிலைப் பள்ளியைப் பற்றியும், அதன் மைதானத்தின் அவலத்தைப் பற்றியும் சொல்லவே தேவையில்லை.

ஆண்டு விளையாட்டு விழாவுக்காக ஐம்பது மீட்டர் ஓட்டப் பந்தயத்தைக் கூட அதில் நடத்த முடியாது. வண்டிப் பாதையில் தான் ஓடவேண்டும். யார் காலில் நெருஞ்சி முள் குத்தவில்லையோ அவர்களுக்குத் தான் முதல் பரிசு!

சின்ன வயதிலிருந்தே ஜெயந்திக்குள் உயரம் தாண்டுவதில் ஓர் இனம் புரியாத இயற்கை ஆர்வம் சுடர்விட்டது.

ஆனால், பள்ளியில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கிடையாது. எந்த நேரமும் படிப்புத்தான்.

அப்படியே விளையாட அனுமதி கிடைத்தாலும், பையன்களுக்கே முதலிடம். முழு இடம்.

பெண் பிள்ளைகளுக்குத் தேவை அடக்க ஒடுக்கம் என்பது அவள் கிராமத்து முதுமொழி.

'மாணவிகள் கழிப்பிடம்' என பள்ளியின் பின்னால் ஒதுக்கப்பட்டு இருந்தது கொஞ்ச இடம். புதர்கள்தான் அந்தப் பிராந்தியத்தின் மதில் சுவர்கள்.

அதற்குள் வியாபித்திருந்த குறுகலான கட்டாந்தரைதான் மாணவிகளின் விளையாட்டு அரங்கு.

மற்ற மாணவிகள் சில்லியிலும், கிளி பாரியிலும் தங்கள் ஆசைகளை வரையறுத்தனர். ஜெயந்தி மட்டும் செடிக்குச் செடி தாவி மகிழ்வாள்.

பள்ளிக்கு ஒரேயொரு தினசரி வருவது வழக்கம். அது ஆசிரியர்களின் பார்வைக்காக மட்டுமே என்பது ஐதீகம்.

அதை ஒருநாள் மீறினாள் ஜெயந்தி. மந்தகாசப் புன்னகையுடன் உயரம் தாண்டும் அண்ணாவியை நெடுநேரமாக உற்றுப் பார்த்தாள்.

'பெண்களில் உயரம் தாண்டுபவர்களே இல்லையோ?'' — தன் சந்தேகத்தை உடற்கல்வி ஆசிரியரை அணுகிக் கேட்டாள் ஜெயந்தி.

''ச்சீ, நாயே, அடுத்த வாரம் பரீட்சையில்லை? போய்ப் படி. வீணா அலப்பிக்கிட்டு இருக்காதே!'' எனப் பதில் வந்தது.

வேதனையடைந்தாள் ஜெயந்தி. ஆனால், சோர்ந்து போகவில்லை. சேர்த்து வைத்தாள் தன் ஆசைகளை.

கழிவறைக்குச் செல்லும் பாதையின் குறுக்கே வளைந்திருந்தது ஒரு மரத்தின் கிளை. அதனை விளையாட்டாகத் தாண்டிச் செல்வது ஜெயந்தியின் வழக்கம்.

ஒருநாள் பாவாடை அதில் சிக்கியது. முகத்தைத் தரையில் மோதிக் கொண்டு சரிந்தாள் ஜெயந்தி. தொடையில் ஆழமான கீரல். அதிலிருந்து ஊற்றெடுத்தது இரத்தம்.

ஆசிரியர்களும், பெற்றோரும் அவளைக் காயம் ஆறும் வரை கடிந்து கொண்டனர். ''பொண்ணாடி நீ? வானரம். பொம்பளைப் புள்ளைக்கு ஒரு அடக்கம் வேணாம்? ஆம்பளைப் பசங்க மாதிரி ஆகாசத்துல தாவறியே?''

உடைந்தாள் ஜெயந்தி.

ஆனாலும், அவளால் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்ள இயலவில்லை. அடக்கவும் முயலவில்லை.

யாருக்கும் தெரியாமல் அடிக் கிளைகளைத் தாண்ட முயன்றாள். நெடிய முயற்சிகளுக்குப் பின் வெற்றி பெற்றாள்.

அடுத்து, சற்று உயரத்தில் நீண்டிருந்த இன்னொரு கிளையைக் குறி வைத்தாள் ஜெயந்தி.

கல்லூரிப் பருவம்.

ஜெயந்தியை மேலே படிக்க வைக்க அவள் பெற்றோர் விரும்பவில்லை. ''எவனோ ஒருத்தன் கட்டிக்கப் போறான். அதுக்கு நாங்க ஏண்டி வீணாச் செலவு பண்ணிப்

படிக்க வைக்கணும்?''

முடிவில், உண்ணாவிரதம் இருந்து அடம் பிடித்தாள். ஒருவழியாகப் பட்டப் படிப்பில் கால் வைத்தாள்.

அங்கும் ஏமாற்றமே. அவள் திறமையை வளர்த்துக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் சிறிதும் இல்லை.

வேதனைப்பட்டாள் ஜெயந்தி.

ஆனாலும், சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம், தாவணியை வரிந்து கட்டிக் கொண்டு மேடு, பள்ளங்களைத் தாண்டினாள்.

இறுதித் தேர்வில் வெற்றி பெற்றவுடன், ஜெயந்தி செய்த முதல் காரியம், நந்தனம் உடற்கல்விக் கல்லூரியில் சேர விண்ணப்பம் அனுப்பியதுதான்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டாள் ஜெயந்தி. மூன்று நாட்கள் நடந்தது.

வந்திருந்த பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எனவே, அனைவருக்குமே அட்மிஷன் கிடைத்தது.

அங்குதான் சுதாவைச் சந்தித்தாள் ஜெயந்தி.

சுதா. சுமாரான அழகி. நகரத்திலேயே வசிப்பவள். எனவே, உடையில் நாகரிகம் தலைதூக்கும். திறமையிலும் அவளைக்குறைத்து மதிப்பிட முடியாது. வலுவேறிய கைகளை முறையாக வைத்து அனாயாசமாக அதிக உயரத்தைத் தாண்டிய போது, உண்மையிலேயே அசந்துவிட்டாள் ஜெயந்தி. 'அம்மா, பனைமரம் உயரம் தாண்டறாளே!'

ஜெயந்தியால் குறைந்த உயரத்தையே தாண்ட முடிந்தது. அதற்கே மிகவும் திணறினாள். கால்களின் தசைகள் 'விண்'ணெனத் தெறித்தன.

''எப்படிங்க இவ்ளோ உயரம் தாண்டறீங்க? ஒரு தவளை மாதிரி?'' வியந்தாள் ஜெயந்தி.

''நீ கிராமப்புறமா?''

''எப்படீங்க தெரியும்?''

''சொல்ற உதாரணம்தான் காட்டிக்



கொடுக்குதே...'' என்று கூறிக் கேலியாகச் சிரித்த சுதா, ''என்ன கேட்டே?'' என்றாள்.

''எப்படி இவ்ளோ உயரம் தாண்டறது?''

''முதல்ல ஸ்டெப்ஸ் பழகணும். தென், டேக்—ஆஃப் சரியா அமையணும். அப்புறம், பாடியை ஸ்மார்ட்டா வச்சுருக்கணும். சிஸர் கட்டைவிட, ஃப்ளாஸ்ஃபரிதான் பெனிஃபிட். பர்ஃபாமென்ஸை அதிகப் படுத்தும். என்ன, நான் சொன்னது ஏதாகிலும் புரிஞ்சுதா?''

''இல்லைங்க...''

''உனக்குப் புரியாதுதான்,'' — உதட்டைப் பிதுக்கினாள் சுதா. ''பேசாம நாளைக் கழிச்சுட்டு சர்டிஃபிகேட்டை வாங்கிட்டுப் போம்மா!''

நொந்து போனாள் ஜெயந்தி. அறைக்கு ஓடி, கதவைத் தாளிட்டுக் கொண்டு 'ஹோ....'வென அழுதாள், நெடுநேரமாக.

ஒரு லட்சியத்துடன் வாழ்ந்தாள் ஜெயந்தி. அதுவும், சுதாவின் மமதையான வார்த்தைகளை ஈட்டியாக மனத்தில் ஏற்றுக் கொண்ட பின், கடும் விரதத்தை மேற்கொண்டிருந்தாள்.

உடலை வருத்தினாள். உழைப்பால் வியர்வை சிந்தினாள். பயிற்சி... பயிற்சி... பயிற்சி....

அவளின் ஆர்வத்தை மதித்தனர் பயிற்றுநர்கள். உயரம் தாண்டுதலின் சூட்சமங்களை அவளுக்கு உடைத்துக் காட்டினர்.

பயிற்சிகளால் தன் திறமையைப் பக்குவப்படுத்தினாள் ஜெயந்தி. கிடைத்த சந்தர்ப்பங்களின் மேல் சவாரி மேற்கொண்டாள். லட்சியக் கோட்டைச் சமீபித்தாள்.

''என்னடி ஜெயா போகறதுக்குள்ள என்னை வின் பண்ணிடணும்னு கங்கணமா?'' கிண்டலாகக் கேட்டாள் சுதா.

மென்மையாகச் சிரித்தாள் ஜெயந்தி. ''அப்படித்தான் வச்சுக்கோயேன்.''

காலம் ஓடியது தெரியவில்லை. ஒரு வருடப் பயிற்சி அதற்குள்ளாக முடிந்து விட்டது.

தோழிகள் பிரியாவிடை பெற்றுக் கொண்டு இருந்தனர்.

ஒதுங்கி நின்றிருந்த ஜெயந்தியின் முதுகைத் தட்டினாள் சுதா. ''என்ன, ஊருக்கு

அது தண்டி யாத்திரை; இது தண்ட யாத்திரை!



கடந்த 21.5.88 பிற்பகல் திருவள்ளுவர் பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்தேன். பாப்பாக்குடி என்னும் இடத்தில் நிறுத்தப்பட்டது. 'திரு. ராமதாஸ் தாக்கப்பட்டார். அவரைத் தாக்கியவர்கள் கைது செய்யப்படும் வரை போராட்டம்' என்றார்கள். எங்களுக்கு முன்னாலும் பின்னாலும் வரிசையாக ஊர்திகள் அணிவகுப்பு. மாலையில் போலீஸ் வந்தது. எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. நானும் என் இரு மகன்களும் சக பிரயாணிகள் மூவருமாகச் சுமார் இருபது கிலோ மீட்டர் நடந்து அணைக்கரை போய் விட்டால் அங்கிருந்து ஏதாவது வாகனம் பிடித்துக் கும்பகோணம் போய் விடலாம் என்று கிளம்பினோம்.

சுமார் ஒன்றரை கி. மீ. நடந்திருப்போம். சொக்கலிங்கபுரம் என்ற இடத்தில் ஒரு வீட்டின் வாசலில் அம்பாஸிடர் காரை ஒரு கதர்ச் சட்டைக்காரர் துடைத்துக் கொண்டிருந்தார். எங்கள் நிலை அறிந்து அவர் காரில் ஏற்றிக் கொண்டு மீன் சுருட்டி என்னும் இடம் வரை கொண்டு விட்டார். அதற்கு மேல் அவரால் வண்டியை ஓட்ட முடியவில்லை. காரணம், வழி நெடுகிலும் சாலையின் குறுக்கே வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்த மரங்களும் கொட்டிக் கவிழ்க்கப்பட்டிருந்த தார் ஒடைகளும்தான். மீன் சுருட்டியை அடைந்த பிறகுதான் எங்களுக்கு அவர் அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. டாக்டர் மாசிலாமணி என்பது தெரிய வந்தது. இந்த விளம்பர யுகத்தில் இப்படி ஓர் அடக்கமான காங்கிரஸ் எம்.எல்.ஏ. என்றால், எங்களால் வியக்காமல் இருக்க முடியவில்லை. அவருக்கு நன்றி கூறி விட்டு, நாங்கள் எங்கள் தண்ட யாத்திரையைத் தொடர்ந்தோம்.

பதினைந்து கிலோ மீட்டருக்கு மேல் நடந்து லோயர் அணைக்கட்டு அருகில் இருக்கும் பயணிகள் விடுதியை நாங்கள் அடைந்த போது இரவு மணி 10.30. பயணிகள் விடுதி வாட்சமேன் விவரமறிந்து அனுதாபப்பட்டு இரவு தங்க இடம் கொடுத்தார்.

காலை சுமார் 3.50 மணிக்கு மறுபடியும் புனிதப் பயணத்தைத் தொடங்கினோம். அணைக்கட்டுப் பாலத்தின் மீது கொஞ்ச தூரம் நடந்திருப்போம். எங்களுக்குப் பின்னால் வண்டிகள் வரும் சத்தம் கேட்கவும் முதலில் வந்த வேனைக் கைகளை ஆட்டி நிறுத்தினோம். நாங்கள் பாப்பாக்குடியிலிருந்து நடந்து வருகிறோம் என்று கேட்டதும் அதிர்ந்தார்கள். வேனில் ஏற்றிக் கொண்டார்கள். ஏறி உட்கார்ந்த பின்புதான் அது போலீஸ் வேன் என்று தெரிந்தது.

கும்பகோணம் வந்து சேர காலை 6.30 மணியாகியது. வழியெங்கும் தடைகள். அவற்றை உடன் வந்த ஜீப்பில் இருந்த காவல் துறையினர், பயணிகளின் உதவியோடு அகற்றினார்கள்.

அன்று நடந்த போராட்டத்தில் இன்னும் எத்தனையோ மக்கள் எங்களைப் போல் நடந்து சென்றார்கள். எங்களை விட அதிகமாகவே நடந்திருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டத்தில் காந்திஜி தண்டி யாத்திரை நடத்தினார். ஆனால் இன்று யாரை எதிர்த்துப் போராடுகிறோம், எதற்காக, இதனால் என்ன பயன் என்று புரியாமல் மக்களால் நடத்தப்படும் தண்ட யாத்திரைகள் எந்த வரலாற்றுக்குச் சொந்தமாகப் போகின்றன?

சென்னை — 44. காந்திரமணி.



சங்கீதகலாநிதி ஸ்ரீ செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யர் அவர்களின் பௌத்திரியும் ஸ்ரீ கோபாலஸ்வாமியின் குமாரத்தியுமான சௌபாக்கியவதி ஆனந்தி என்கிற ஆனந்தவல்லிக்கும் தேதியூர் (லேட்) எ. கணேச அய்யரின் பௌத்திரனும் ஸ்ரீ தியாகராஜனின் குமாரன் சிரஞ்சீவி ஸ்ரீதர் என்கிற ஸ்ரீனிவாசனுக்கும் விவாஹம் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முகூர்த்தம் முடிந்ததும் சங்கீத கலாநிதி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. வாழ்க மணமக்கள்!


வாழ்க மணமக்கள்!



''ஸி.பி.ஐ. வழக்கு போலிஸ் வழக்கு இரண்டுக்கும் என்ன அண்ணே வித்தியாசம்?''

''மத்திய சர்க்காரை எதிர்த்துக்கிட்டாப் போடுற வழக்கு ஸி.பி.ஐ. வழக்கு; மாநில சர்க்காரை எதிர்த்தாப் போலிஸ் வழக்கு. அவ்வளவுதான்....!''

— கடுவை கோபால்சாமி.



ஆசிரியர்: இந்தச் சிறுகதையில் 'அனுக் ஆற்றான்' என்னும் வார்த்தை அடிக்கடி வருகிறதே!

துணை ஆசிரியர்: அதுவா... அனுக்கு எழுத்தாளரோட முதல் கதை ஸார், இது!''

— வளர்மதி ஆசைத்தம்பி.

மூட்டை கட்டியாச்சா?''

''ஆமா,'' சிரித்தாள். ''ரொம்ப நெருக்கமாப் பழகிட்டோமில்ல?''

''எப்பவாச்சும் மெட்ராஸ் வந்தா, வீட்டுக்கு வாடி!'' — எனக் கூறி மர்மமாகக் கண்ணடித்தாள் சுதா. ''அது சரி, கோர்ஸ் முடியறதுக்குள்ள என்னை ஜெயித்துக் காட்டறதா சவால் விட்டயே? அது புஸ்வாணம் தானா?''

''நான் எப்ப சுதா சவால் விட்டேன்? நீதான் என்னை வம்புக்கு இழுத்தே!'' என அமைதியாகக் கூறினாள் ஜெயந்தி.

சுதாவினை வெற்றி கொண்டு, அவள் ஆணவத்தை நொறுக்காத குறை ஜெயந்தியின் ஆழ்மனத்தில் சுழன்று கொண்டே இருந்தது உண்மைதான்.

அதனாலென்ன? உயரம் தாண்டுதலின் நுணுக்கங்கள் யாவும் அவளுக்கு இப்போது அத்துப்படி.

அது போதும்.

''அப்ப தோல்வியைப் ஃப்ராங்கா ஒத்துக்கறது?''

அவளுக்குப் பதில் கூறாமல் பிரிந்தாள்.

அது ஒரு சுமாரான நகரம். விளையாட்டுத் திடல் அதைவிடச் சுமார் ரகம்.

ஸ்டேடியம் நிரம்பி வழியும் கூட்டம். விளையாட்டு வீரர்களைக் கோலாகலமாக வரவேற்ற வண்ண பேனர்கள். மாவட்டவாரியாக விளையாட்டு வீர, வீராங்கனைகளின் அணி வகுப்பு.

மைதானத்தின் ஒரு மூலையில் பெண்களுக்கான உயரம் தாண்டும் போட்டி விறுவிறுப்பாக நடந்து கொண்டு இருந்தது.

ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் இரண்டு இரண்டு பெண்கள் தம் பிடித்துத் தாண்டினர்.

வெற்றி மேடையின் உயர்ந்த படியில் இடம் பிடித்திருந்தாள் ஷீலா. இரண்டாவது இடத்தில் சோபனா. மூன்றாவதாக ஒருத்தி.

மூவரின் கழுத்திலும் முறையே தொங்கின தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள்.

கைகளில் பரிசும், பாராட்டுப் பத்திரமும். முகங்களில் மகிழ்ச்சி.

ஒலிபெருக்கி ஓசை எழுப்பியது. ''இப்போது உயரம் தாண்டும் போட்டியின் வெற்றியாளர்களின் பயிற்றுநர்களுக்குச் சிறப்புப் பரிசும், பாராட்டும் அளிக்கப்படும்.''

கூட்டம் பரபரப்பானது.

முதலில், மூன்றாம் இடத்தை வென்றவளின் பயிற்றுநர் வந்து பரிசைப் பெற்றுச் சென்றார்.

ஒலிபெருக்கி தொடர்ந்தது. ''அடுத்து, இரண்டாம் இடத்தை வென்ற சோபனாவின் பயிற்றுநர் சுதா வந்து பரிசைப் பெறுவார்.''


கம்பீரமாக எழுந்தாள் சுதா. அனைவரின் பார்வைகளும் அவள் மீதே நிலைக்க, நிமிர்ந்த நடையுடன் சென்று பரிசைப் பெற்றாள். மிடுக்குடன் திரும்பினாள். தன் இருக்கையை நோக்கி நடந்தாள்.

''இறுதியாக, தங்கப் பதக்கம் பெற்ற ஷீலாவின் பயிற்றுநர் ஜெயந்தியைப் பெருமையுடன் அழைக்கிறோம்.''

ஸ்தம்பித்து நின்றாள் சுதா. எதிரே அடக்கமாக வந்தவளை இமைக்காமல் பார்த்தாள்.

ஜெயந்தியேதான்.

சுதாவைக் கடக்கையில் ஸ்னேகமாக இதழ் விரிந்தாள் ஜெயந்தி. அதில் வெற்றிக் களிப்பு இழையோடியது. கர்வம் துளியும் ஒட்டியில்லை.



9

இருள் வரும் நேரம்

சுஜாதா

கிருஷ்ணமூர்த்திக்கு இப்போது பயம் முழுவதுமாக வயிற்றில் வியாபித்திருந்தது. லலிதா நிச்சயம் இரண்டு விஷயங்களுக்காகக் கோபித்துக் கொள்ளப் போகிறாள். லேட்டாக வீடு திரும்பியதற்கு. போலீஸுக்குப் போனதற்கு.

''ஸார் என்னைக் கொஞ்சம் சீக்கிரமா...''

தர்மராஜன் அவரை நிமிர்ந்து பார்த்த பார்வையே சரியாக இல்லை. விழிகளை உருட்டி மீசை லேசாகப் படபடத்ததோ என்னவோ, பாதியில் நிறுத்தி விட்டார். தர்மராஜன் அவரருகில் வந்து நிதானமாகப் பிரம்பை உருட்டிக் கொண்டு, ''நீங்க என்ன பார்த்தீங்க? சரியா ஞாபகப்படுத்திக்கிட்டுச் சொல்லுங்க.''

''ஸார், என்னை அடையாளம் இடையாளம்னு அலைக்கழிக்காதீங்க ஸார்.''

''அதெல்லாம் அப்புறம். இப்ப நடந்ததை மட்டும் சொல்லுங்க. தொந்தரவு ஏதும் இருக்காது. போலீஸுக்கு உதவி செய்தா ஒரு குடிமகனுக்குள்ள கடமையைத்தான் நீங்க பண்றீங்க. போலீஸுக்குப் பயப்படவே வேண்டாம், சொல்லுங்க.''

''ஆட்டோவில இரண்டு பேரு முன்னால ஸீட்டிலயும் பின்னால கறுப்பா புடைவை உடுத்திக்கிட்டு ஒரு பெண்ணும் போறதைப் பார்த்தேன்.''

''கறுப்பா? நீலமா?''

''கறுப்பு மாதிரித்தான் இருந்தது. சரியாச் சொல்ல முடியலை, இருட்டு.''

''எத்தனை மணி இருக்கும்?''

''ஏழு, ஏழரை கூட இருக்கலாம்!'' என்று தர்மராஜனை சந்தேகத்துடன் பார்த்தார்.

''சொல்லுங்க.''

''இந்தம்மா கீச்சுக் கீச்சுன்னு கத்தறாப்பல இருந்தது. ஆட்டோ கபன் பார்க்குக்குள்ளே வேகமா நுழையுது.''

''இதையேன் நீங்க உடனே எங்ககிட்டே வந்து சொல்லலை?''

முதல்ல ,எனக்கு ஸ்ட்ரைக் ஆகலை ஸார். ஏதோ இளைஞர்கள் ஜாலியாச் சத்தம் போட்டுக்கிட்டுப் போறாங்கன்னு நெனைச்சேன். விதான் சௌதா முன்னால கபன் பார்க்குக்குப் பக்கத்தில இந்த மாதிரி சம்பவம் நிகழும்னு நான் எதிர்பார்க்கவே இல்லையா ,என் மூளையிலே அந்தச் சம்பவத்தின் தீவிரம் உரைக்கவே இல்லை.''

''எப்ப உரைச்சது?''

''மறுநாள் சாயங்காலம் ஆபீஸிலிருந்து திரும்பி வர்றப்ப பஸ்ல ஒருத்தர் 'மிட்டே' பத்திரிகை வெச்சிருந்தார். அதில பார்த்ததும்தான்...''

''அப்படியும் அதை ஏன் முதல்லேயே நீங்க சொல்லலை?''

''என் ஒய்ஃப் வேண்டாம்னுட்டா. அப்புறம்தான் எங்க ஆபீஸ் கொலீக் ஆச்சார் வந்து 'மூர்த்தி, போயி சொல்லிடறது நல்லதுன்னு சொன்னார். பெட்டர் லேட் தேன் நெவர்னு... ஹி... ஹி...''

''அவங்களை முகத்தைப் பார்க்க முடிஞ்சதா?''

''இல்லை. இருட்டில எப்படித் தெரியும்? ரெண்டு பேர் டிரைவிங் சீட்டில இருந்தாங்க. அது தெரிஞ்சது.''

''பின் சீட்டில அந்த அம்மாவைத் தவிர யாராவது உட்கார்ந்திருந்தாங்களா?''

''இல்லைங்க.''

''வேற ஏதாவது கவனிச்சீங்களா?''

''வேற ஏதாவதுன்னா?''

''ஆட்டோ நம்பர் அல்லது அடையாளம்...

''ஆமாம் ஸார், கவனிச்சேன். ஏஸிடின்னு ஆட்டோ பின்னால... வாட்டர் ப்ரூப் கிளாத் போட்டு இருக்கும் பாருங்க, அதுக்கு மேல பெரிசா எழுதியிருந்தது.''



''ஏஸிடி?''
''ஆமா.''
தர்மராஜன் அதை எழுதிக் கொண்டார். ''சரி, வேற?''
''வேறே எதுவும் கவனிக்கலை ஸார்.''
''வேறே எதுவும் ஞாபகம் வந்தாப் போன் பண்ணுங்க, என்ன?''
''சரி!''
''மனைவி பேச்சைக் கேட்டுட்டுச் சும்மா இருந்திடாதீங்க.''
இல்லை ஸார். அவ பொதுவா என்னைப் பத்திக் கவலை... அதனால தான்!''
''ஏ... ஸி... டி, இதானே? சரியா எழுதிக்கிட்டிருக்கேனா... பாருங்க!''
கிருஷ்ணமூர்த்தி அதைப் பார்த்துவிட்டு, ''சரிதான்,'' என்றார்.
''ஜீப்ல கொண்டு விடச் சொல்லிடட்டுமா?''
''வே... வேண்டாம் ஸார். என் மனைவி பயந்துப்பா.''
''தெருக் கோடியிலே நிறுத்திடச் சொல்றேன்.''
''இல்லை. ஏகப்பட்ட பஸ்கள் இருக்குது... தாங்க்ஸ்!''
''சரி, போய்ட்டு வாங்க.''
அவர் சென்ற திசையை நோக்கிச் சரியான ஆளுங்கப்பா என்று தலையை ஆட்டினார் தர்மராஜன். அந்தக் குறிப்பை எடுத்துக் கொண்டு சோமசேகரின் அலுவலறைக்குச் சென்று, ''கமின்'' என்று அனுமதி கிடைத்ததும் விரைப்பாகச் சல்யூட் அடித்துவிட்டு, ''ஸார், ப்ரொபஸர் கேஸ்ல முதல் க்ளு...''
''அப்படியா? என்ன?''
''விதான் சௌதா கிளார்க் ஒருத்தர் ஆட்டோவின் பின் பக்கத்தில் இருந்த எழுத்துக்களைக் குறிச்சுக்கிட்டு இருந்திருக்கார்.''
''அப்படியா?''
சோமசேகர் அதைப் பார்த்தார். ஏஸிடி என்று யோசித்தார். ''சரி, தர்மராஜன், ஒண்ணு பண்ணுங்க. 'ட்ராபிக்'ல முதல்ல விசாரிக்கப் பாருங்க. ஏஸிடின்னு பின்னால எழுத்துப் போட்டிருக்கிற ஆட்டோ எங்கே இருந்தாலும் உடனே அதை நிறுத்தி வெச்சுக் கண்ட்ரோல் ரூமுக்குத் தகவல் சொல்லும் படி...''

''அம்ரு! அம்ரு! எழுந்திரம்மா, இங்கே பாரு. யாரு வந்திருக்கா, பாரு?''
அம்ரு மெல்லக் கண்ணைத் திறந்தாள். ''அப்பா! எப்ப வந்தீங்க?''
''இப்பதாம்மா. நான் ஃப்ளைட்டில.''
''அப்பா உங்களுக்குத் தெரியுமாப்பா?''
''தெரியும், அம்ரு கண்ணு. நீ கவலையே படக் கூடாது. எல்லாம் சரியாப் போயிடும்.''
''உங்க மாப்பிள்ளை பஸ் ஸ்டாண்டில என்னைத் தனியா விட்டுட்டுப் போயிட்டார்ப்பா.''




கவலைக்களஞ்சியத்தில் விஷமத்தனம்!

என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிக்காவில் பணியாற்றி வந்த ஒரு துணை ஆசிரியரை வேலை நீக்கம் செய்து விட்டார்கள். பழிக்குப் பழி வாங்கத் தீர்மானித்த அவர் வெகு சுலபமாக அதைச் செய்து விட்டார். எப்படி?
கம்ப்யூட்டரிடம் போனார். என்ஸைக்ளோ பீடியாவில் 'அல்லா' என்று இருக்கும் இடத்தையெல்லாம் 'ஜீஸஸ்' என்று மாற்று என்று ஓர் உத்தரவு பதிவு செய்து விட்டுப் போய் விட்டார்! அவ்வளவுதான்! இந்தத் தவறுடனே கலைக்களஞ்சியம் அச்சாக ஆரம்பித்துவிட்டது.
நல்லவேளை சில ஆயிரம் பிரதிகள் அச்சாவதற்குள் யாரோ யதேச்சையாகக் கண்டுபிடித்து எச்சரிக்கை செய்ய, இயந்திரம் நிறுத்தப்பட்டது. ஆம்வில் விஷமத்தனம் தெரிய வந்தது!

— நியூஸ்வீக்.

[redacted]

''அம்ரு, ப்ளீஸ், நான் வேணும்னுட்டா தனியா விட்டுட்டுப் போனேன் உன்னை?'' என்றார் ப்ரொபஸர் ராம்பிரகாஷ்.
''மாப்பிள்ளை நீங்க கொஞ்சம் சும்மா இருங்க, அவ பேசட்டும்.'' ராம்பிரகாஷ் ஆத்திரத்தை விழுங்கிக் கொண்டார்.
''தனியா விட்டதும் அல்லாம காலையிலே பேப்பருக்குத் தகவலும் கொடுத்து என் பேரு இவர் பேரு எல்லாம் பேப்பர்ல வந்து எனக்கு மானம்னு இருந்தா நாக்கைப் பிடுங்கிக்கிட்டுச் செத்துப் போயிருக்கணும், சாவலியே, சாவலியே!'' அம்ரு பெரிதாக அழ ஆரம்பித்தவள், தன் தந்தையின் தோளில் சாய்ந்து, அவர் புதிய சட்டையைக் கண்ணீரில் நனைத்தாள்.
வேதாசலம் தன் கோட்டுப் பாக்கெட்டிலிருந்து கைக்குட்டையை எடுத்து அவள் கன்னத்தைத் துடைத்துக் கொடுத்து, ''மை டியர் கேர்ள், எல்லாம் சரியாப் போயிடும்னு சொன்னேனில்லை! அழுவறதால என்ன லாபம்? வாட் டாக்டர்! எப்படி இதுக்கு பப்ளிஸிட்டி வரப் போகும்?'' என்றார்.
''போலீஸ்ல புகார் கொடுத்தேன். அவங்க ரிப்போர்ட்டர்ங்களுக்குத் தகவல் கொடுத்துட்டாங்க! போலீஸ்ல புகார் கொடுக்கக் கூடாதுன்னு சொல்றீங்களா?''
''அப்படிச் சொல்லலை. அவங்ககிட்ட பப்ளிஸிட்டி வேண்டாம்னு சொல்லியிருந்தா, ஏன் தகவல் கொடுக்கறாங்க?''
''ஸார், எனக்கு இதிலே முன்ன பின்ன அனுபவம் இல்லை. அடுத்த முறை இவ்வாறு நிகழற போது... ஸாரி! ஐ டிண்ட் மீன் இட்.''
''இவளைப் பாருங்க. ஒரு புஷ்பம் மாதிரி என் பொண்ணு! அப்படியே கசங்கிப் போயிருக்கிறா. அம்ரு, வாம்மா, இப்பவே என் கூட வந்துரு. உன்னைச் சரியா வெச்சுக்கத் தெரியலை இவருக்கு. கொஞ்ச நாள் நாம, காணாத இடத்துக்குப் போயிடலாம்...



"ஆச்சரியமா இருக்கே...? ஒரு நாளும் இல்லாத திருநாளா, இன்னைக்கு, டாண்ணு, பத்து மணிக்கெல்லாம் ஆபீஸ் வந்துட்டீங்களே... என்ன விசேஷம்...?"

"ஹி... ஹி... இன்னைக்கு நான் லீவு: அதான்!"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

கொடைக்கானல் போயிடலாம். அங்கே நிம்மதியா இருந்துட்டு...."

"வெய்ட் எ மினிட். அவளை அழைச்சுக்கிட்டுப் போறதுக்கு என் அனுமதி வேண்டாமா?"

"ஷீ நீட்ஸ் ரெஸ்ட் மாப்பிள்ளை! பீஸ் ஆஃப் மைண்ட்!"

"அம்ரு, என்னம்மா சொல்றே நீ? உங்கப்பா கூடப் போகணுமா உனக்கு?"

"அப்பா, ராத்திரி இருட்டிப் போச்சு. கார் மக்கர் பண்ண ஆரம்பிச்சிடுச்சு. இவர் என்ன பண்ணணும்? மெக்கானிக்கை அழைச்சுட்டுவரப்போனார். என்னைக்கூட அழைச்சுக்கிட்டுப் போயிருக்கலாமில்லை. அம்போன்னு விட்டுட்டு...

"அம்ரு, நீதானே ரெண்டு பேரும் பஸ்ல போகலாம்னு சொன்னே...? தப்பு ஸார், இவ குழம்பிப் போயிருக்கா... நடந்தது இது தான். ரெண்டு பேருமாத்தான் திரும்பி வர்ற துக்குப் பஸ்ஸுக்குக் காத்திருந்தோம்...

பஸ் வந்ததுப்பா. என்னை முன்னால ஏற்றி விட்டுட்டு, இவர், இல்லை, இல்லை: இவர் முன்னாலமுதல்லஏறிக்கிட்டுஎன்னை முன்னே போ, முன்னே போன்னு தள்ளிட்டு, விட்டுட்டுப் பஸ் ஏறிக்கிட்டுப் போயிட்டார். அப்புறம் பக்கத்தில் ஒரு ஆட்டோ வர்றது. 'அம்மா, உங்க கணவர் பஸ்ல ஏறிட்டாரே அடுத்த ஸ்டாண்டில புடிச்சுடலாம் ஏறுங்கன்னு...'

"அம்ரு வேண்டாம் ப்ளீஸ். இதெல்லாம் சொல்லியாச்சு!"

"இருங்க, நான் எங்கப்பாகிட்டச் சொல்ல வேண்டாமா?"

ப்ரொபஸர் நெற்றிமேல் உள்ளங்கையைப் பதித்துக் கொண்டார். "இவகிட்ட எப்படி...?"

அம்ருவின் அப்பா வேதாசலத்தின் முகத்தில் கடுப்புத் தெரிந்தது. அதை விலக்கினால் அம்ருவின் சாயல் இருப்பது தெரியும். வாட்ட சாட்டமான மனிதர் நீலத்தில், கோடையிலும் கோட் அணிந்திருந்தார். ஒரு தனியார் துறையின் பிரதான சி. ஓ. வாக இருக்கும் அவர், ஏர்கண்டிஷனிலேயே எழுந்து, ஏர்கண்டிஷன் காரில் நுழைந்து, ஏஸி ஆபீஸிலிருந்து ஏஸி பிளேனில் நகரும் புள்ளி. வெளிநாடு என்பது தண்ணீர் பட்டபாடு. அவர் தம் மகளுக்கு வந்த இந்தப் பிரச்னையைக் கூட ஒருவிதமான ஆபீஸ் மேனேஜ்மெண்ட் சிக்கல் போலத்தான் அணுகினார். டாக்டரிடமிருந்து போன் வந்தபோது, பதற்றத்தை வெளியில் யாரிடமும் காட்டிக் கொள்ளாமல் அடுத்தஃப்ளைட் பிடித்துவந்துவிட்டார்.

"அம்ரு, கம் வித் மி! கொடைக்கானல்ல ஒரு ஜூனியர் லெவல் மேனேஜ்மெண்ட் ப்ரெயின்ஸ்டார்மிங் செஷன் இருக்குது. அதுக்குப் போறேன். மூணு நாள் இருப்பேன். என் கூட வந்துடு! கொஞ்சம் அமைதி கிடைக்கும். கொஞ்ச நாள் நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சிருக்கிறது நல்லதுன்னு தோணுது. இல்லைன்னா அனாவசியத்துக்கு ஒருத்தரை ஒருத்தர் ப்ளேம் பண்ணிக்கிட்டு இருப்பீங்க.

நத்திங் டூயிங். நான் அவளை இந்த நிலையில உங்க கூட அனுப்பத் தயாரா யில்லை."

"வாட் டூ யூ மீன் மாப்பிள்ளை? அவ இப்ப இருக்கிற நிலையில...?"

"நோ!

"பிடிவாதம் பிடிக்காதீங்க."

"உங்களுக்கு உங்க பெண்மேல் இருக்கிற அக்கறையை விட எனக்கு என் மனைவி மேல...

"அதான் பஸ் ஸ்டாண்டில ரேப் பண்ண விட்டீங்களோ? அம்ரு, கம் வித் மி. இந்தாளோட நீ இருக்கிறது ரொம்ப டேஞ்சர்.

"டோண்ட் பி இடியாடிக் மிஸ்டர் வேதாசலம்!"

"உங்களைத் தவிர மற்ற பேர் எல்லாம் இடியட்ஸ், அப்படித்தானே ப்ரொபஸர்? அம்ரு, மை சைல்ட்! கம் வித் மி, எங்கூட வந்துடும்மா, வா!"

அம்ரு போகாதே!"

அம்ரு அதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தவள், இருவரும் அவள் பேசக் காத்திருக்க, மெல்ல ஆரம்பித்தாள்: "அப்பா, ரெண்டு பேர் இருந்தாங்கப்பா! ரெண்டு பேரு. அதில கப்பன் பார்க்கில செங்கற்கிளப் இருக்கும் பாருங்க. அப்புறம் லைப்ரரி, இடது பக்கம் மண்டபம், அங்கே தரதரன்னு இழுத்துட்டுப் போய்..."

ப்ரொபஸர் ராம்பிரகாஷ், "மை காட்! ஷட் அப்! முட்டாளே வாயை மூடு!" என்றார்.

"பார்த்தீங்களாப்பா, இப்படித்தான் திட்டறாரு!"

ராம்பிரகாஷ் தலையில் கை வைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த நாற்காலியில் தொப்பென்று விழுந்தபோது, "மே ஐ கமின்?" என்று வர்ஷாவின் குரல் வாசலில் கேட்டது.

டிராபிக் போலீஸ் கமிஷனருக்குத் தகவல் சொல்லி பெங்களூர் நகரத்தின் பல டிராபிக் போலீஸ் நிலையங்களுக்கும் ரேடியோச் செய்தி கொடுக்கப்பட்டது. ஏஸிடி என்று பின்னால் துணியில் எழுதியிருக்கும் ஆட்டோ ரிக்ஷாவை எங்கே கண்டாலும் பிடித்துத் தகவல் சொல்லவும் என்று மெஸேஜ் போன அரை மணிக்குள் அந்த ஆட்டோ பிடிபட்ட செய்தி வந்தது. ஹை கிரவுண்ட்ஸ் அருகில் பிடிபட்டதாக...

தர்மராஜன் கிளம்பும் போது மற்றொரு செய்தி வந்தது. அல்சூரில் அந்த ஆட்டோ பிடிபட்டதாக. அந்தச் செய்தி முடிவதற்குள் அடுத்த ஆட்டோ மேக்ரி சர்க்கிளில். மற்றொன்று பனசங்கரியில்...

(தொடரும்)

ஃபைப்ரோஃபிளெக்ஸ்


குவில்ட்

மெத்தைகள், தலையணைகள் மற்றும் குஷன்களின்

சுகத்தை அனுபவியுங்கள்

ஃபைப்ரோஃபிளெக்ஸ்

ஓய்வு
நேரமெல்லாம்
சுகமயமாக்கிட
உங்களுக்கோர்
உறுதுணை
வாழ்நாள்
முழுதும்!



Manufacturers:

BHARAT MOTORS

SALES & ADMINISTRATIVE OFFICE

151, Mount Road, Madras-600 002
Phone: 861923/863250/865512
Tlx: 41-6136 BM IN

FACTORY:
Industrial Estate,
Pettai,
Tirunelveli-627 010
Tel: 23622
Tlx: 0433 225 BM IN

DEALERS IN TAMILNADU

MADRAS CITY : ANNA NAGAR : Ruskos, Ph : 613042 • **ANNA NAGAR EAST :** M.A. Varghese & Sons. Ph : 612984 • **BROADWAY :** Ramji Steel Furniture. Ph : 21986 • **CHETPUT :** Nathan Furniture House. Ph : 663962 • **CHROMEPET :** Alankar. Ph : 403972 • **EGMORE :** New Foam Palace. Ph : 566288 • **ROYAPETTAH :** Jaya Bharatham Furniture. Ph : 861384 • A.K.K. Traders. Ph : 843745 • Arasan Engg. Enterprises. Ph : 862020 • TANSI Sales Centre Ph : 862161 • **TAMBARAM :** Alankar. Ph : 403762 • **THOUSAND LIGHTS :** TANSI Sales Centre Ph : 860816

COIMBATORE : TANSI Sales Centre. Ph : 30755 • **CUDDALORE :** Mahalakshmi Traders, 22-A, Car St. • **CUMBUM :** Jeya Coirs. Ph : 466 • **ERODE :** Rani Furnitures. Ph : 78684 • **KARAIKUDI :** Saravana Associates, 116, Kallukatti West • **KUMBAKONAM :** Mathivanan & Co., Ph : 21311 • Lakshmi Furnitures, Ph : 20591 • TANSI Sales Centre Ph : 21605 • **MADURAI :** Joy Enterprises. Ph : 25558 • AR. AS. & PV. PV. Ph : 25231 • Raja Furniture, 12, West Avanimoola St., TANSI Sales Centre Ph : 43832 • **MANNARGUDI :** Royal Furniture Mart, 19, Municipal Bldg. VOC Road. • **MYLADUTHURAI :** K.V.S. & CO. Ph : 2785 • Maruti Rexine Centre, 112-A, First Floor, No. 2, Road (Near Sundaram Theatre) • **NAGAPATTINAM :** Kaleeswari Enterprises. Ph : 744 • **NAGERCOIL :** Santhosh Agencies. Ph : 3216 • **NAMAKKAL :** Nirmal Enterprises. Ph : 2932 PP • **OOTY :** Meena Enterprises, 10, Municipal Buildings, MS Lane, Upper Bazaar Road. • **PARAMAKUDI :** M.S.K. Traders, 5/209-B, Shoukathali St. • **POLLACHI :** Sri Sakthi Agencies, Ph : 5096 • **SALEM :** Gupta Furnitures, Ph : 62065 • **SATHYAMANGALAM :** P.N.N. Enterprises, 388-D, Bazaar Main Road. • **THANJAVUR :** Vinoth Agencies, 1647, South Main St. • Sri Devi Agencies 1514, South Rampart, Opp : Thiruvalluvar Theatre • **TIRUNELVELI :** AR. AS. & PV. PV. Ph : 24541-3 • TANSI Sales Centre Ph : 23880 • **TIRUVANNAMALAI :** Jai & Co., Ph : 2988 • **TRICHY :** Jyothi Furnitures. • Ph : 26523 • **TUTICORIN :** Sathya Agencies, Ph : 20161 • **VELLORE :** Sabari Agencies, Shop : 2, Kartik Building, Near Sathuvachari Bus Stop. • **VILLUPURAM :** Siva Steel House, 172, Nehruji Road. • **VIRUDUNAGAR :** Raja Furniture, Ph : 4873 • Jebam Enterprises, Ramamoorthy Road.

PONDICHERRY : Home Decors. Ph : 4616 • Sundaram & Co., Ph : 4310 • Vinod Steel Agencies. Ph : 3168.

dasindia

* தேறுவாரா?





* க. தியாகராசன், நெய்வேலி.

? 'தொலைக்காட்சியின் இரண்டாவது அலை வரிசையை மாநிலங்களின் பொறுப்பில் விடுவது நாட்டின் நலனுக்கு உகந்ததாக இருக்காது' என மத்திய அமைச்சர் பகத் கூறியிருப்பது பற்றி?

! மத்திய அரசிடம் இருப்பது அதைவிட அதிகமாகவே நாட்டு நலனுக்கு உகந்ததாயிருக்காது!

* நாஞ்சில் க. நாகராஜன், பரமக்குடி.

? பொருளாதார அடிப்படையில் சலுகை வழங்குவதுதான் நியாயம் என்ற உண்மையைப் புரிந்திருக்கும் ஜெயலலிதா தேறுவாரா?

! அதற்குப் பலத்த எதிர்ப்பு என்றதும், எஸ். டி. சோமசுந்தரத்தை விட்டுத் தாம் அப்படிச் சொல்லவேயில்லையென்றும் பத்திரிகைகள்தான் அப்படித் தவறாகப் பிரசுரித்து விட்டனவென்றும் அறிக்கை கொடுக்கச் செய்து விட்டாரே! இந்தச் சமாளிப்பு, 'தேவலாம், அரசியல் பண்ணுவதில் தேறி வருகிறார்' என்று நம்மை எண்ணச் செய்து விட்டதே!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? 'கவர்னர் ஆட்சியே போதும்!' என்பவர்கள் 'ராஜீவ் தேவையில்லை; வேங்கடராமனே போதும்' என்று சொல்வார்களா? என்று கருணாநிதி கேட்டிருக்கிறாரே?

! ஒவ்வொரு நிஜமான ஜனநாயகவாதியின் உள்ளத்திலும் எழக் கூடிய நியாயமான கேள்வி.

* எம். வி. வேங்கடேசுவரன், மேல்பட்டி.

? இரு வல்லரசுகளுக்கிடையேயான ஆயுதக் கட்டுப்பாடு உச்சி மாநாடு குறித்துத் தங்களின் கருத்து என்ன?

! இந்த மாநாட்டின் விளைவாக அணு ஆயுதப் போர் அபாயம் உடனே மறைந்து விடப் போவதில்லை என்றாலும் 'மனித நேயங்களால் சாதிக்க முடியாத ஒன்றையா ஆயுத பலங்களின் மூலம் சாதித்துவிடப் போகிறோம்' என்று உணர்ந்து இரு வல்லரசு

* நியாயமான கேள்வி



* மாட்டு வண்டியில்....





* உலக அமைதி யைத்....



* ....தொடர்ந்து எழுதுங்கள்!

அதிபர்களும் நடந்து கொள்வது வரவேற்கத் தக்கதே. கோர்பசேவ் முன்பு ரேகனின் விருந்தினராகச் சென்று பேச்சு வார்த்தை நடத்தியது முதல் அத்தியாயம். உலக அமைதி நூலின் இரண்டாம் அத்தியாயம் இப்போது எழுதப்பட்டுள்ளது, தொடரட்டும்.

* ஏ. பாலச்சந்திரன், கே. வி. குப்பம்.

? தெலுங்கு தேச மாநாட்டிற்காக வன விலங்குகள் துன்புறுத்தப்பட்டது என்ன நியாயம்?

! தெலுங்கு தேச மாநாட்டுக்கும் வனவிலங்குகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இந்நிலையில் அந்த விலங்குகளைச் சிறுசிறு கம்பிக் கூண்டுகளுக்குள் அடைத்துக் கொண்டு வந்து காட்சிப் பொருள்களாக வைத்தது மாபெரும் சித்திரவதை. கூட்டம் சேர்க்க இந்தக் குயுக்தி தேவையில்லை. வனவிலங்குகளை மக்கள் பார்க்க வசதி செய்வது நோக்கமாயிருப்பின் அவர்

களுக்குக் கட்சிச் செலவில் ஐதராபாத் செல்ல டிக்கெட் வழங்கியிருக்கலாம்.

* எஸ். ரமேஷ்பாபு, லால்குடி.

? ஊட்டியில் ஜெயலலிதா முதல்வர் தங்கும் அறையைக் கேட்டு அடம் பிடித்தாராமே?

! அதிகாரம்ஏதும்இல்லாதபோதேஇப்படி என்றால்... நினைக்கவே பயமாக இருக்கிறது.

* சுந்தர் சுந்தரி, கோவை — 2.

? தி. மு. க. வின் உட்கட்சிப் பூசல் வெளியில் தெரிவதில்லையே எப்படி?

! சுத்தமாகத் தெரியாமல் போவதில்லை. அரசல்புரசலாகத் தெரியத்தான் செய்கிறது. மற்றகட்சிகள் மாதிரி தெருவில் வந்து குடுமிப் பிடிச் சண்டை போட்டுக் கொள்வதில்லை என்பதுதான் அதன் சிறப்பு.

* டி. சி. வி. காயத்ரிபிரபு, குடியாத்தம்.

? ஆந்திர முதல்வர் என். டி. ஆர். விஜயவாடா செல்கையில் கட்டை மாட்டு வண்டியில் பயணம் செய்தது பற்றி?

! ராஜீவின் இரண்டாம் வகுப்புப் பயணம் போன்றதுதான் இதுவும். இதுபோன்ற ஸ்டண்ட்கள் தேவையில்லை. கொள்கை அரசியலும், நேர்மை அரசியலும்தாம் நாட்டை மேம்படுத்தும். ஸ்டண்ட் அரசியல் அல்ல.

* எஸ். பிரியதர்சனி, பாளையங்கோட்டை.*

? கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாக மாநில அமைச்சரவையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்ட உ. பி.யின் முன்னாள் அமைச்சர் சுனில் சாஸ்திரி, வி. பி. சிங்குக்கு எதிராகக் காங்கிரஸ் சார்பில் போட்டியிடுவது வியப்புக்குரியது தானே?

! இல்லை. காங்கிரஸின் சுயநல அரசியலில் இதுபோன்ற பல்டிகள் சகஜம். லால்பகதூர் சாஸ்திரியின் மகன் இந்தக் குருக்ஷேத்திரப் போரில் கௌரவர்கள் பக்கம் சேர்ந்து போராடுகிறாரே என்பதுதான் வருத்தத்திற்கு உரியது. இந்த வருத்தத்தை உடல்நலமில்லாத அவரது தாயாரே ஆசி வழங்கிய போதிலும் வெளியிட்டிருக்கிறார்.

* லட்சுமி செங்குட்டுவன், வேலூர் (சேலம்).

? டீ. வி. யில், 'எம். ஜி. ஆருக்குப் பிறகு தமிழக அரசியல்' ஒளிபரப்பினார்களே, பார்த்தீர்களா? எப்படி இருந்தது?

! ஓ. கே. என்று சொல்லும்படியிருந்தது. ஆனால்... தேசிய அலைவரிசையில் ஒளிபரப்புகிறோம் என்பதால், எம். ஜி. ஆர். ஒருநடிகராகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார் என்று பிற மாநிலத்தவருக்கு ஆரம்பத்திலேயே அறிமுகம் செய்து வைத்த போது, சமுதாயக் கண்ணோட்டத்தோடு அமைந்த அவரது எத்தனையோ பாடல் காட்சிகளில் ஒன்றை ஒளிபரப்பியிருக்கக் கூடாதா? 'நாணமோ இன்னும் நாணமோ' என்று தொடங்கும் சிருங்காரப் பாடல் காட்சிதானா அகப்பட்டது? இது, ஜெயலலிதாவுக்குப் பயந்து கொண்டு பாரத ரத்னாவைத் திட்டமிட்டு அவமதித்தது போல் தோன்றியது. இந்தத் தொடக்க நேரக் கசப்பு இப்போதும் மாறாமல் மனத்தைச் சங்கடப்படுத்திக் கொண்டிருக்கிறது.

* நா. இரகுநாதன், சின்னாங்குப்பம்.

? 'தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு மிகச் சிறந்த அறிவும் ஆற்றலும் கொண்ட ஒரே தலைவி ஜெயலலிதா தான் என்று கவிஞர் நா. காமராசன் கூறியிருப்பது பற்றி?

! இலக்கியம் படித்ததில்லையா நீங்கள்? பரிசுகள் பெறுவதற்காக வறுமையில் வாடும் புலவர்கள் இப்படி வெட்கத்தை விட்டுப் பாராட்டுப் பாக்கள் பாடுவது சகஜம் தானே!

* எல். மாறன், மேல்பட்டி.

? சமீபத்தில் கல்பாக்கம் அணுமின் நிலைய ஆபத்து குறித்துத் தினமணி நாளிதழில் வந்த தலையங்கம் பற்றித் தங்கள் மதிப்பீடு என்ன?

! எங்கெங்கே அணுமின் நிலையங்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் ஒரு நாள் செர்னோபைல் போல் விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்பதே உண்மை. அனல் மின் நிலையங்களுக்கும் புனல்மின் நிலையங்களுக்கும் வாய்ப்புக் குறைந்து, அணுமின் நிலையங்களை நிறுவ வேண்டிய அவசியத்தில், உலகம் இருந்த போது, கதிரியக்க அபாயங்களும், கழிவுப் பொருள்களை என்ன செய்வது என்ற பிரச்சனைகளும் அவ்வளவாக உணரப்படவில்லை. ஆனால் இன்று இந்தப் பிரச்னைகள் அகில உலக ரீதியிலேயே பூதாகார வடிவமெடுத்துள்ளன. அதனால்தான் சூரிய சக்தி, காற்று சக்தி, கடலலை சக்தி இவற்றில் தீவிர ஆராய்ச்சி நடக்கிறது. சூரிய சக்தியை மின்சக்தியாக மாற்றிப் பெருமளவில் பயன்படுத்தும் நாள் வெகுதூரத்தில் இல்லை. எனவே ரொம்பவும் கவலையில் ஆழ்ந்து போகாதீர்கள்.

* ரூ. 15 பரிசு பெறுபவர்:

எஸ். பிரியதர்சினி,
37—A, தெற்கு பஜார்,
பாளையங்கோட்டை — 627 002.

விழிப்புறும் நாள் தொலைவில் இல்லை

வட்டமேஜை

• நீர்மூழ்கிக் கப்பல் ஊழலை மூழ்கடிக்க ஆளுங்கட்சி எவ்வளவுதான் முயற்சி செய்தாலும், அதை மூழ்க விடாது மிதக்க வைத்து ஆளுங்கட்சிக்கு ஜால்ரா போடாது ஊழலை ஊரெல்லாம் அறியச் செய்யும் பத்திரிகைகளில் ஒன்றாகக் கல்கி விளங்குவதை நான் பாராட்டுகிறேன்.

போடிநாயக்கனூர், இளைய பாரதி.

• தலையங்கம் மிக அருமை. ஆடிட்டர் ஜெனரலின் துணிவான செயல் பாராட்டத்தக்கது. அதைவிட மக்களின் வரிப்பணம் இப்படி அநியாயமாகப் பாழாகிறதே என்பதை நினைத்தால் மனம் வேதனைப் படுகிறது.

சிதம்பரம், க. இராஜேஷ் குமார்.

• இன்னும் எத்தனையோ யுத்தங்களை மூப்பனார் நடத்த வேண்டியிருக்கிறது. அதற்குள் அவருடைய யுத்தத்தைக் கடைசி யுத்தம் என்று முடிக்கப் பார்க்கிறீரே!

நெல்லை, வி. செல்லத்துரை.

• மனநோய்க்கு முக்கிய காரணம் போதைப் பொருட்கள்தான் என்பதும், இந்திய மாணவர்கள் மிக அதிகமாக அதற்கு அடிமைப்பட்டு வருகின்றனர் என்ற செய்தியும் பெரும் வேதனையைத் தருகிறது. எவ்வளவோ விவரம் புரிந்த மாணவர்கள் கண நேர போதைக்காக உள்ளத்தையும், உடம்பையும் தங்கள் எதிர்கால வாழ்க்கையையும் பாழாக்கிக் கொண்டு வருவதுதான் வியப்பாக இருக்கிறது.

இராமநாதபுரம், கே. சேது.

• அட்டைப்படம் கண்டு அசந்து போனேன். மாம்பழங்களைப் படம் பிடித்திருக்கும் நேர்த்தி அந்தப் பழங்களைப் பறித்துத் தின்ன வேண்டும் என்கிற ஆசையைக் கிளறி விட்டு நாக்கில் நீர் சுரக்க வைத்து விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

பெங்களூர், கே. ஜி. எஃப். பழனிச்சாமி.

• 'ஓ! மாம்பழமே!' கவர் ஸ்டோரி மூலம் தமிழ் நாட்டின் மாம்பழத் தரத்தினை மட்டுமின்றி மற்ற மாநிலங்களின் மாம்பழங்களின் தரத்தினையும் நாங்கள் அறியச் செய்து விட்டீர்கள்! மொத்தத்தில் அந்தக் கட்டுரையைப் படித்து முடித்ததும் 'மல்கோவா' மாம்பழத்தை ருசித்து முடித்த திருப்தி ஏற்பட்டது!

மயிலாடுதுறை, வி. எழில்.

• ராஜ்கோகுலின் 'யதார்த்தம்' சிறுகதை மிகவும் அருமை. யதார்த்தம் என்னும் சாதாரண வார்த்தைக்குள் வாழ்க்கைத் தத்துவமே அடங்கியிருக்கின்றது என்பதை ஆசிரியர், பூங்கோதை பாத்திரத்தின் மூலம் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி விட்டார்.

திருவாய்மூர். மதுமலர்.

• 'என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு' படத்தில் அந்தக் குழந்தை கிணறு விபத்தில் இறப்பதாகக் கூறி உள்ளீரே! படத்தில் போகும் போதல்லவா அது தண்ணீரில் குதித்து இறந்து விடுகிறது! தாங்கள் எழுதியது தவறு.

சீர்காழி. சன்பை. வி. சண்முகம்.

• கடந்த சில வாரங்களாகக் 'கல்கி'யின் பக்கங்கள் வண்ணத்தில் ஒளிர்வது, கருப்பு வெள்ளைத் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள், வண்ணத் தொலைக்காட்சியைக் காணும் மகிழ்ச்சியைப் போன்றிருக்கிறது...!

பெங்களூர், கவிஞர். தாரகை.

• 'மறியல் போராட்டத்தில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்' கட்டுரை படித்தேன். மூன்றாம் ஸ்தானத்தில் (மாதா, பிதா, குரு, தெய்வம்) வைக்கப்பட்டிருப்பவர்களின் கோரிக்கைகளைக் கண்டு கொள்ளாது, செவி சாய்க்காமல் இவர்கள் விஷயத்தில் அரசு காட்டும் மெத்தனம் வருந்தத்தக்கது. எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற கூற்றையே அவமதிப்பதாகும்.

திருச்சி, எஸ். ராஜகோபால்.


• சட்டோபாத்யாயா கமிஷன் பரிந்துரைகளின் படி, மத்திய அரசுப் பள்ளிகளில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது தவறு. சட்டோபாத்யாயா கமிஷன் பரிந்துரைகளை மத்திய அரசு நியமித்துள்ள ஒரு கமிட்டி தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் அது பற்றி முடிவுகள் மேற்கொள்ளும் என்றும் மத்திய அரசு அறிவித்தது. அவ்வளவே. தமிழ்நாடு அரசு ஆசிரியர்களை விட மத்திய அரசுப் பள்ளி ஆசிரியர்கள் அதிகம் பெறுகிறார்கள் என்பதில் மறுப்பு இல்லை. சட்டோபாத்யாயா கமிஷன் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டால் மத்திய அரசுப் பள்ளி ஆசிரியர்கள் தற்போது பெறுவதைக் காட்டிலும் அதிகம் பெறுகிற வாய்ப்பு உண்டு.

காரைக்கால், எஸ். சந்திரசேகரன்.

• தொ. ப. அணியினரின் கூற்றுக்களை மட்டும் எழுதியுள்ளீர்கள். தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான ஒன்றிய ஆசிரியர்கள் த.ஆ.ப.ஆ. கூட்டணியில் அங்கம் வகிக்கின்றனர். தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் போராட்ட முறையே நகைப்பிற்குரியது. ஆசிரியர்கள் இனம் விழிப்புறும் நாள் தொலைவில் இல்லை.

தஞ்சாவூர். மு. ஸ்ரீதர்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


BRITANNIA
MARIE
BISCUIT

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka